www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

மே - 2003
ம.க.இ.க. மாத இதழ்
ரூ. 10.00

## இராக்: போர் இன்னும் முடியவில்லை!



படிப்பகம்

www.padippakam.com




## வாசகர் கடிதம்

• ''இரண்டு பயங்கரவாதிகள் - இரண்டு அகழ்வாராய்ச்சிகள்'' - தலையங்கம், அமெரிக்க பயங்கரவாதத்தையும் பார்ப்பன பயங்கரவாதத்தையும் நன்றாக ஒப்பீடு செய்யப்பட்டிருந்தது.

பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டைக் கண்டு, பகுத்தறிவு மண்ணில் பாசிசத்தின் பருப்பு வேகாது என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. பார்ப்பன பயங்கரவாதிகள் தமது எதிரிகளையும் அறிவித்துவிட்டார்கள். அதைத் துணிவோடு எதிர்கொள்ளும் திறன் நமக்கு தேவை. ஆதலால், முற்போக்கு, தலித் மற்றும் சிறுபான்மையினர் ஓரணியில் திரள வேண்டும். தமிழகத்தை இந்துத்துவத்தின் கல்லறையாக்குவோம்.

**— கா. ஷஃபீ,** வேலூர்.

• பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டு நிகழ்ச்சிதொகுப்புகள், செய்திக் கட்டுரைகளைத் தாங்கி மிகவும் பயனுள்ள வகையில் இதழ் வெளிவந்துள்ளது.

''இரண்டு பயங்கரவாதிகள் - இரண்டு அகழ்வாராய்ச்சிகள்'' - தலையங்கம் மிகச் சிறந்த ஒப்பீடு. அயோத்தி சம்பந்தமான நீதிமன்றத் தீர்ப்பையும், அமெரிக்கா ஈராக்கை ஆராய்வதையும் ஒப்பிட்டு ஏகாதிபத்தியத்தையும் இந்துத்துவத்தையும் இணைசேர்த்து சிந்திக்கச் செய்துள்ளீர்கள்.

**— செம்மலர் மா. நடராசன்,** அறந்தாங்கி.

• முசுலீம் பெண்கள் தஞ்சை மாநாட்டில் கலந்து கொண்டார்கள் என்ற செய்தி, அவர்களின் அரசியல் சிந்தனையின் வளர்ச்சிதான், உங்கள் செய்தி யார் யாரை அடைய வேண்டுமோ அவர்களை அடையத் தொடங்கிவிட்டது என்பதன் அறிகுறி.

**— ரிஸ்வான்,** ஓசூர்.

• இன்றைய காலகட்டத்தில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் முசுலீம் மக்களுக்கு எதிராக பாசிச பார்ப்பனிய இந்துத்துவம் எத்தகைய கொடூரமான தாக்குதலைத் தொடுக்கின்றது என்பதை, பாதிக்கப்பட்ட முசுலீம் பெண்களான ஆயிஷா, மரியம்பீவி மற்றும் திண்ணியம் கருப்பையா ஆகியோர் வாயிலாக அறிய முடிந்தது. இத்தனை கொடுமைகளையும் அனுபவித்துவிட்டு, இனியும் நாம் பொறுத்திருப்பது கோழைத்தனம் என்ற செய்திதான் என் சிந்தனையில் மேலோங்கி நின்றது. இன்னும் தொடரும் இந்த பாசிசத்தை வேரறுக்க நாம் உடனே தெருச் சண்டையில் இறங்க வேண்டும் என்ற கருத்தை இதழ் முழுவதும் காண முடிந்தது.

**— வே. கணேசமூர்த்தி,** பரமக்குடி.

• பார்ப்பன பயங்கரவாதத்தின் கொடுஞ்செயல்களை உலகுக்கு பறைசாற்றும் வகையில் ''இரத்த சாட்சியங்கள்'' அமைந்திருந்தது. மாநாட்டுத் திடலில் கூடியிருந்த அனைவரின் நெஞ்சங்களையும் நெகிழ வைத்தார்கள் குஜராத்தின் இரத்த சாட்சியங்கள். பார்ப்பனியம் என்பது, பார்ப்பனரல்லாதவர்களிடம் எவ்வளவு ஆழமாக தடம் பதிந்து உள்ளது என்பதை உணரச் செய்தார்கள் திண்ணியத்தின் இரத்த சாட்சியங்கள். சாட்சியமளித்த அனைவருமே பார்ப்பனியத்தின் கொடுமைகளை தோலுரித்துக் காட்டினர். இத்தகைய மாநாடுகள் தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் நடத்தப்பட வேண்டும்.

**— வே. பால்ராசு,** தூத்துக்குடி.

• ''தமிழகத்தை இந்துத்துவத்தின் கல்லறையாக்குவோம்'' என்ற அட்டைப்படக் கட்டுரை, தீர்க்கமான சிந்தனையின் வெளிப்பாடாக, உணர்ச்சிப் பிழம்பாக இருந்தது. ம.க.இ.க. என்கிற இயக்கத்தை எந்த சுயநலவாதிகளாலும் அழிக்க முடியாது. அது நெருப்பில் பூத்த பூ. அது இந்தியா முழுவதும் பரவி அயோக்கியர்களை அழிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை. ம.க.இ.க. தோழர்களே **உண்மையான சுதந்திரப் போராட்ட வீரர்கள் என்பதை இவ்வுலகம் கண்டு கொள்ளும் நாளும் வெகுதொலைவில் இல்லை.** இந்து என்கிற பெயராலும் கடவுளின் பெயராலும் பார்ப்பன கும்பல் செய்து வரும் சூழ்ச்சிக்கு இளைஞர்கள் பலியாகி விடுகிறார்கள். ஆகவே, ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்தகைய மாநாடுகள் போடவேண்டும். மனமுவந்த வாழ்த்துக்கள்!

**— முசிறி தமிழ் மன்னன்,** தி.மு.க. தலைமைக் கழகப் பேச்சாளர், திருச்சி.

• தஞ்சையில் நடைபெற்ற ''பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டில் கலந்து கொண்டதில் பெருமைப்படுகின்றோம். இதுபோன்ற மாநாடுகளை எங்களைப் போல உள்ள உழைக்கும் சிறுபான்மையின மக்கள் வரவேற்கின்றோம். உங்கள் இயக்கம் தோன்றியதிலிருந்து, மக்களுக்காக நடத்திய அனைத்துப் போராட்டங்களையும் நாங்கள் நன்கு அறிவோம். தமிழ் மக்கள் இசைவிழா என்று ஆண்டு தோறும் நடத்திவிட்டு, இந்தாண்டு ''பார்ப்பன எதிர்ப்பு மாநாடு'' நடத்தி, அனைத்துத் தரப்பு மக்களையும் ஓட்டுப் பொறுக்கும் அரசியல் தலைவர்களையும் திரும்பிப் பார்க்க வைத்துள்ளீர்கள். இதுபற்றி எந்தச் செய்தி ஊடகமும் தெளிவாக செய்தி வெளியிடவில்லை.

மதம், சாதியின் பெயரால் நடக்கும் வன்முறைகள், ஏகாதிபத்தியம், தனியார்மயத்தின் ஒடுக்குமுறை, வேலையில்லாத் திண்டாட்டம், அரசியல்வாதிகளின் சுரண்டல் - ஓட்டுப் பொறுக்கப் போடும் பச்சோந்தி குணம் - என நாட்டில் நடக்கும் அனைத்து அராஜகங்களையும் உங்கள் **புதிய கலாச்சாரம், புதிய ஜனநாயகம்** இதழ்கள், இருட்டடிப்பு, தணிக்கை செய்யாமல் அப்படியே வெளியிடுகிறீர்கள். தெருமுனைப் பிரச்சாரம், மாநாடு என்று நடத்தியும் நாட்டின் அவலங்களை எடுத்துக் கூறுகின்றீர்கள்.

இந்து மதவெறி பாசிஸ்டுகளின் வெறிக்கு முதலில் பலியாவது சேரி மக்களும் தாழ்த்தப்பட்ட மக்களும்தான். சிறுபான்மை மக்களுக்கு இழைக்கப்படும் இன்னல்கள் ஏராளம். முதலில் இறைவனை நம்புகிறோம். நாட்டில் கலகம் செய்து, குழப்பம் செய்வோரை வேரறுக்க ம.க.இ.க.வை இறைவன் படைத்துள்ளான் என்று நம்புகிறோம். இதுபோன்ற மாநாடுகளை அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் நடத்த கேட்டுக் கொள்கிறோம். இந்த பாமர மக்களின் கண்களைத் திறந்து, அறிவுப் பசிக்கு தீனி கொடுங்கள். பாசிசப் பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள எங்களுக்கும் பயிற்சியளியுங்கள். என்றாவது ஒருநாள் இந்த இயக்கத்தில் ஊழியம் செய்து, எங்கள் உயிரை மாய்த்து, இந்த இயக்கத்தை வளர வைப்போம். உங்கள் இயக்கத்தில் இறை நம்பிக்கை கிடையாது; எங்களுக்கு உண்டு. இந்த இயக்கம் வாழ வளர இறைவனிடம் பிரார்த்தனை புரிகின்றோம்.

**— உமர் பாரூக்,** கோவை.


படிப்பகம்

www.padippakam.com

**கலை இலக்கியம் யாவும் மக்களுக்கே**

- புதிய கலாச்சாரம்
- மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

- போர்: 20
- குரல்: 11, 12
- ஏப்ரல், மே - 2003

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
இவ்விதழ் மட்டும் ரூ.10
ஆண்டுச் சந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டுச் சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

தொலைபேசி: 044-23718706

சந்தா, படைப்புகள் அனுப்பவும் தகவல்களுக்கும்:
இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
15-வது தெரு அருகே,
அசோக் நகர், சென்னை-600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# பொருளடக்கம்

## இராக்: போர் இன்னும் முடியவில்லை...


| | |
|---|---|
| தலையங்கம் | 4 |
| அமெரிக்கச் சிப்பாய்களே யாருக்காக சாகப் போகிறீர்கள்? | 5 |
| இராக்: போர் இன்னும் முடியவில்லை | 6 |
| ஃபீதாயின்: ரச்சேல் | 10 |
| அமெரிக்கத் துப்பாக்கியே பேனாவாக | 12 |
| சிவிலியன் கொலைகளின் நேரடிச் சாட்சி | 14 |
| போர் நிகழக் காரணம் என்ன? | 16 |
| போர்க் களத்தில் கொலை செய்யப்பட்ட இரு அமெரிக்கப் பத்திரிகையாளர்கள்: சில கசப்பான உண்மைகள் | 17 |
| இராக் வரலாறு: வஞ்சகத்தின் வெற்றி வீரத்தின் தோல்வி | 27 |
| **உருக்குலைக்கப்பட்ட இராக் - ஒரு புகைப்படப் பதிவு** | |
| கதறி அழும் இராக் | 19 |
| இடிக்கப்பட்ட குடியிருப்புகள் | 20 |
| அமெரிக்கத் திமிர் | 21 |
| சிதைக்கப்பட்ட குழந்தைகள் | 22 |
| பிணக்காடான ஈராக் | 24 |
| சதாம் சிலை உடைப்பு ஒரு ஹாலிவுட் நாடகம் | 25 |
| அடங்க மறுக்கும் இராக் | 26 |
| அமெரிக்காவின் உண்மை முகங்கள் ஒரு கேலிச் சித்திரப் பதிவு | 43 |
| தோழர் பீட்டரின் நினைவாக... | 32 |
| பார்ப்பன பயங்கரவாதம் (தொடர் நிறைவு) | 38 |
| **பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு மாநாட்டு உரை** | |
| பேரா. சம்சுல் இசுலாம் உரை | 36 |
| தோழர் விசுவநாதன் உரை | 37 |
| ஓவியக் கண்காட்சி | 34 |


**இதழ் தயாரிப்பு**

*அட்டை வடிவமைப்பு: ஸ்பார்ட்டகஸ்*
*இதழ் வடிவமைப்பு : துரை*
*இணைய தேடல்: அ.வி*

இவ்விதழில் இராக் மீதான ஆக்கிரமிப்பு குறித்த செய்திகள், புகைப்படங்கள் கீழ்க் கண்ட இணையத் தளங்களிலிருந்து பயன் படுத்தியுள்ளோம். பன்னாட்டுச் செய்தி நிறு வனங்களின் அமெரிக்க மேலாண்மை யையும் மீறி இவ்விணையத் தளங்கள் அளப்பரிய செய்திகளையும், உண்மை களையும், புகைப்படங்களையும் வெளி யிட்டுள்ளன. அவர்களுக்கு எமது நன்றி.

அவர்களின் பெயர்கள் வருமாறு: அரபு நியூஸ் (Arab News), தி இன்டிபென்டன்ட் (The Independent), கவுண்ட்டர் பஞ்ச் (Counter Punch), ராபர்ட் ஃபிஸ்க் (Robert Fisk), இன்டி மீடியா (Inde Media), தி நேஷன் (The Nation), அல் ஜசீரா டி.வி (Al Jazeera TV), அபுதாபி டி.வி (Abudhabi TV), டபிள்யூ.எஸ்.டபிள்யூ.எஸ் (WSWS), குளோபல் ரிசர்ச் (Global Research), இன்பர் மேஷன் கிளியரிங் ஹவுஸ் (Information Clearing House), நோம் சாம்ஸ்கி (Noam Chomsky), பீஸ் ஃபார் ஜஸ்டிஸ் (Peace for justice), சிரியன் அரபி நியூஸ் (Siriyan Arab News), இசட் நெட் (Znet), எலக்ட்ரானிக் இராக் (Electronic Iraq).

## வாசகர்கள், சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

புதிய கலாச்சாரத்தின் ஆண்டுச் சந்தாவை ரூ.60-லிருந்து ரூ.90 ஆக உயர்த்தியுள்ளோம். பொதுவில் பத்திரிக்கை தயா ரிப்புச் செலவுகள், விலைவாசி உயர்வு ஒருபுறமிருக்க, தபால் செலவுகள் கணிசமாக உயர்ந்துள்ளன. தபால்துறை வழங்கியி ருக்கும் சலுகைக் கட்டணத்தை, குறிப்பிட்ட தேதியில் மட்டுமே பயன்படுத்த முடியும். எமது அமைப்பு, இதர வேலைகளின் நெருக்கடி காரணமாக இதழைக் குறிப்பிட்ட தேதியில் கொண்டு வர முடியவில்லை. ஆயினும் அதற்காகத் தொடர்ந்து போராடு கிறோம். இந்நிலையில் ஒரு இதழை தபாலில் அனுப்ப மட்டும் ரூ.2.50 செலவாகிறது. தற்போது மாதந்தோறும் புதிய சந்தாக்கள் அதிக அளவில் வரும் நிலையில் ஒரு சந்தாதாரருக்கு அனுப்பும் அடக்க செலவு மட்டும் ரூ.7.50 ஆகிறது. எனவே இந்தக் கட்டண உயர்வு. புதிய கலாச்சாரத்தின் பொருளாதார நெருக்கடியை வாச கர்கள் பகிர்ந்து கொள்ளக் கோருகிறோம். மேலும் புதிய சந்தா தாரர்களை உருவாக்கவும், இதழ் விநியோகத்தை அதிகப்படுத் தவும் வாசகர்கள் துணை நிற்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சென்ற இதழ் விலை உயராமலேயே 8 பக்கங்கள் அதிகரித்து வெளியிட்டோம். இவ்விதழில் இன்னும் கூட இராக் பற்றிய செய்திகளையும், புகைப்படங்களையும் வெளியிட்டிருக்க முடியும். ஆனால் பொருளாதார நெருக்கடி இடம்தரவில்லை. இவ்விதழின் 8 பக்கங்களை வண்ணத்தில் வெளியிடவே கணிச மாகச் செலவிட வேண்டியதாயிற்று. ஆகவே, நமது பத்திரிக் கையின் புதிய முயற்சிகள் சாத்தியமாவதும், வளர்வதும் வாச கர்களாகிய உங்கள் கடமையைப் பொறுத்ததே என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம். ஆதரவு தருக.

புதிய சந்தாக் கட்டணம் ரூ.90/- ஜனவரி 2003 முதல் கணக்கு வைக்கப்படும். இப்புதிய சந்தாக் கட்டணம், முகவர்கள் நேரடியாக விநியோகிக்கும் சந்தாக்களுக்கும் பொருந்தும். முக வர்கள் இனிமேல் ரூ.90/-ஐக் கட்டணமாக வசூலிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். வெளிநாட்டுச் சந்தா கட்டணத்தில் மாற்றமில்லை. தனி இதழ் ரூ. 5 என்பதிலும் மாற்றமில்லை.

— ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

# நக்கீரனுக்குப் பொடா, அல்ஜசீராவுக்குக் குண்டு...!

உலகறிந்த பொய்களைக் காட்டி நக்கீரன் கோபாலைப் பொடாவில் சிறையிட்டது பார்ப்பன பாசிச ஜெயா அரசு. உலகறிந்த உண்மைகளுக்காக அல்ஜசீரா தொலைக்காட்சியின் (குவெட்டார் நாட்டு தொலைக்காட்சி) பாக்தாத் அலுவலகத்தில் குண்டு போட்டு ஒரு நிருபரைக் கொன்றது புஷ்ஷின் உலக ரவுடி அமெரிக்க அரசு. தமிழகத்தை மொட்டையடித்து ஆட்டம் போட்ட ஜெயா - சசி கும்பலின் 10 ஆண்டு குற்றப்பட்டியலையும், அதன் ஏவல்நாயான போலீசின் வெறியாட்டத்தையும், தேவாரம் - அதிரடைப்படைக் கும்பலின் கற்பழிப்புக் கொலைகளையும் அம்பலப்படுத்தி வருகிறது நக்கீரன் இதழ். அமெரிக்கப் போரை இராக் மீதான ஆக்கிரமிப்பு என்று அழைத்தும், இராக்கை 'விடுவித்து', 'மனித நேய உதவிகள்' செய்யும் அமெரிக்கக் குண்டுகள் கொன்ற ஆயிரக்கணக்கான மக்கள் - குழந்தைகளைக் காட்டியும், ஒரு மாதமாக அமெரிக்காவின் இவ்வாண்டு குற்றப்பட்டியலை அம்பலப்படுத்தி வருகிறது அல்ஜசீரா.

நக்கீரன் மட்டுமல்ல அரசியல் எதிரிகள் அனைவருக்கும் போடப்பட்ட போலீசுப்படை, தூசி தட்டப்படும் சட்ட விதிகள், கோப்புகளிலிருந்து உயிர்த்தெழும் புதையுண்ட வழக்குகள், பிணை தரமறுக்கும் நீதிபதிகள், கோபாலின் கைதைக் கண்டித்து தலையங்கம் கூட எழுத மறுக்கும் பார்ப்பன, சூத்திரப் பத்திரிக்கைகளின் விபச்சாரப் பேனாக்கள் என்று பேரரசி ஜெயாவுக்காகப் பேயாட்டம் போடுகின்றன ஜனநாயகத்தின் நான்கு தூண்கள்.

அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்காக வெள்ளோட்டம் பார்க்கும் ஐ.நா. சபை, பங்காளியை விட்டுக் கொடுக்காத பாதுகாப்புச் சபை, பல்லிளிக்கும் பன்னாட்டு செய்தி நிறுவனங்கள், அமெரிக்க உயிருக்காக மட்டும் ஆவி எழுப்பப்படும் ஜெனீவா ஒப்பந்தம் என்று பேரரசன் புஷ்ஷுக்கு பஜனை பாடும் 'அந்த' தூண்களின் சர்வதேச அமைப்புகள். பாசிச ஜெயாவை அம்பலப்படுத்துவதை நிறுத்தாத வரை நக்கீரன் மீதான வேட்டையும் நிற்கப்போவதில்லை. இராக்கின் கண்ணீரை உலகறியச் செய்வதை நிறுத்தாத வரை அல்ஜசீராவின் நிருபர்கள் செந்நீர் சிந்துவதும் நிற்கப் போவதில்லை.

பயங்கர - பிரிவினை - தீவிரவாதங்களை வைத்து பீதியூட்டுவது, இந்த 'வாத நோய்' கதைகளை அரசியல் எதிரிகளின் மேல் முத்திரை குத்துவது, இந்த முத்திரையை நியாயப்படுத்த அதே 'வாத'த்தைச் சாக்கிட்டு நக்சல்பாரி - இசுலாமிய - தமிழின ஆர்வலர்களை சுட்டுக் கொல்வது, பாசிச ஜெயாவின் பாரம்பரிய அணுகுமுறை. ரவுடி அமெரிக்காவின் ஒரே வாதம் பயங்கரவாதம். இராக்கில், வளைகுடாவில், ஆப்கானில் இசுலாமிய பயங்கரவாதம்; சிரியா, ஈரான், வடகொரியா, கியூபாவில் அரச பயங்கரவாதம்; இசுரேல், அமெரிக்கத் துருப்புக்களை அழிக்கும் தற்கொலைப் போராளிகளின் செயல் கிரிமினல் பயங்கரவாதம். அமெரிக்காவின் எண்ணெய், ஆயுத, உலக மேலாதிக்க ஆதாயங்களுக்காக இந்த 'வாதம்' உலக அளவில் பீதியூட்டப்படுகிறது.

வை.கோ தொடங்கி, நக்கீரன் கோபால் வரை அடித்திருக்கும் பேய், தன்னையும் விட்டுவைக்காது என்றறிந்த கருணாநிதி, பேயோட்டுவதற்கு மத்திய அரசின் பிசாசுகளிடம் முறையிடுகிறார். பொடா தவறாக பயன்படுத்தப்படுவதால் ரத்து செய்யுமாறு ஜபிக்கிறார். அதிலும் பார்ப்பன பாசிஸ்டுகளின் பீதியூட்டும் 'வாத நோய்' அணுகுமுறையை அவர் எதிர்க்கவில்லை. ஆகவே பேய் ஓடாமல் வேகமாய் ஆடும். அல்ஜசீராவின் தலைமையகம் இருக்கும் குவெட்டாரில்தான் அமெரிக்க இராணுவத்தின் மத்தியத் தலைமையகம் இருக்கிறது. அல்ஜசீராவை அரபு, உலக மக்களின் உணர்வுகளுக்கேற்ப நடத்தத் தெரிந்த அமீருக்கு, தனது பொருளாதாரம் அமெரிக்க நலன்களுடன் இணைக்கப்பட்டிருப்பதும் தெரியும். ஆகவே ஷேக்குகளினால் அல்ஜசீராவைக் காப்பாற்ற முடியாது.''

ஆனால் தமிழ் மக்களும், உலக மக்களும் இதற்கு வழி செய்வார்கள். பார்ப்பன பாசிச ஜெயா கும்பல் தன்னை யார், எப்படி வீழ்த்த முடியும் என்பதை மக்களுக்கு கற்றுத் தருகிறது. கூடவே யாரெல்லாம் தன்னை வீழ்த்த முடியாத கோழைகள் என்பதையும் அம்பலப்படுத்துகிறது. அமெரிக்காவின் இராக் ஆக்கிரமிப்போ ஏகாதிபத்தியங்களின் முரண்பாட்டை வெளிச்சமிட்டிருக்கிறது. இம்முரண்பாடு வளர்ந்து ஒரு உலகப் போராய் வெளிப்படும்போது, ஏகாதிபத்தியங்கள் தங்களுக்குள் அடித்துக் கொண்டு வீழ்வதை மட்டுமல்ல, ஏகாதிபத்திய எடுபிடிகளின் ஆட்சியிலிருந்து ஏழை நாட்டு மக்கள் விடுதலை அடைவதும் நடந்தே தீரும். ஆம். போர் இன்னும் முடியவில்லை.

இராக் :

நாங்கள் முன்னாள் அமெரிக்க இராணுவ வீரர்கள். பெரும்பான்மை உலக மக்களோடு, நமது நாட்டின் பல இலட்சம் மக்களோடு ஒன்றாக நின்று - ஈராக் மீது வெறி கொண்டு பாய்ந்திருக்கும் அமெரிக்காவின் போரை எதிர்க்கிறோம்.

நாங்கள் பல போர்களைக் கண்டவர்கள்; பல காலகட்டங்களைக் கடந்து வந்தவர்கள்; பலப்பல அரசியல் கண்ணோட்டம் கொண்டவர்கள்; ஆனால் நாங்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து சொல்கிறோம்: ''இது அநீதியான போர்!'' எங்களில் பலபேர், இராணுவத்தில் சேவை செய்வது எங்கள் கடமை, நாட்டைக் காப்பது எங்கள் வேலை என்றுதான் நம்பியிருந்தோம். இராணுவத்தில் ஏற்பட்ட அனுபவங்களே அவர்கள் கற்றுத் தந்ததைக் கேள்வி கேட்க வைத்து விட்டன. எங்கள் முன் இப்போதுள்ள உண்மையான கடமையே உங்களைச் சிந்திக்கத் தூண்டுவதுதான். ''அமெரிக்கச் சிப்பாய்களே, யாருக்காக எதற்காகச் சண்டைபோட்டுச் சாகப் போகிறீர்கள்? உங்கள் செயல்களால் மனிதகுல எதிர்காலம் எப்படியெல்லாம் நாசமாகும் என்று யோசித்தீர்களா?''

சிப்பாய்களே, உங்களைக் கோருகிறோம் - உங்கள் மனச்சாட்சியைக் கேளுங்கள், சரியானதைச் செய்யுங்கள்.

**சென்ற வளைகுடாப் போரில்,** தொலைவில் பாதுகாப்பாக இருந்து கொண்டு கொலை செய்யுங்கள் என்று எங்களுக்கு உத்தரவு போட்டார்கள். வானத்திலிருந்து ஈராக்கின் பெரும் பகுதியை அழித்தோம். பல லட்சம் ஈராக்கியரைக் கொன்றோம்.

பாஸ்ராவுக்குச் செல்லும் சாலை இன்னமும் எம் நெஞ்சில் தேங்கி நிற்கிறது. உயிர் தப்பி ஓடிய ஈராக்கியர் மீதும் சுடச் சொன்னார்கள்; சுட்டோம். பதுங்கு குழிகளை புல்டோசரால் உழுது ஈராக்கியரை உயிரோடு சமாதியாக்கினோம். யுரேனிய அணுக்கதிர் ஆயுதங்களை, ரசாயனக் கிருமிக் கொல்லிகளை மனிதன் மீது வீசினால் என்ன விளைவு ஏற்படும் என்று சோதிப்பதற்காகவே சில சோதனை மருந்துகளைப் பயன்படுத்தினோம். விளைவு - ஈராக் மக்கள், தாய் வயிற்றுக் கருக்கள் உட்படச் சிதைந்து ஊனமானார்கள்; நாங்களும் ஊனமானோம்; போரிலிருந்து நாடு திரும்பிய அமெரிக்கச் சிப்பாய்களில் நான்கு பேரில் ஒருவருக்கு ஊனம்.

வியத்நாம் போரில், விண்ணிலிருந்தும் மண்ணிலிருந்தும் அழித்தோம். மைலாய் வீதிகளில் - பச்சிளம்


படிப்பகம்

www.padippakam.com



# "அமெரிக்கச் சிப்பாய்களே.... யாருக்காகச் சாகப் போகிறீர்கள்?"

குழந்தைகள், பெண்கள், வயது முதிர்ந்த ஆண்கள் - 500 பேரைப் படுகொலை செய்தோம். ஏதோ ஒன்றிரண்டு விதி விலக்காக நடந்திருக்கலாம் என்று நினைத்து விடாதீர்கள் - அப்படித்தான் நாங்கள் போர் செய்தோம். ஏஜெண்டு ஆரஞ்சை வியத்நாம் மக்கள் மீது வீசினோம், விளைவை நேரடியாகச் சோதித்துத் தெரிந்து கொள்வதற்காக.

போருக்குப் பிறகு ஏற்பட்ட ஆழ மான வேதனை எங்களுக்குத் தெரியும். கொல்லப்பட்ட இருபது லட்சம் ஆண், பெண், குழந்தைகள் இன்னமும் கூட எங்கள் கனவுகளில் வந்து வட்டமிட்டுக் கதறுகிறார்கள். சண்டையில் இறந்த வீரர்களை விட, வீடு திரும்பி இப்படிக் கனவுகளால் துரத்தப்பட்டே தற்கொலை செய்து கொண்ட வீரர்களே அதிகம்.

நீங்கள் படைஎடுப்பில் செல்ல முடிவெடுத்தால், அந்த ஆக்கிரமிப்புப் படையில் நீங்களும் ஓர் அங்கம். உங்களை அடியோடு வெறுக்கும் மக்களை கண்ணோடு கண், நேருக்கு நேர் பார்க்கும்போது எப்படி இருக்கும் தெரியுமா?

உண்மையில் உங்கள் லட்சியம் என்ன என்று சிந்தியுங்கள். உங்களைப் போல, என்னைப் போல வாழ்ந்து தங்கள் பிள்ளைகளை வளர்க்கும் ஒரு மக்கள் மீது படைஎடுத்து ஆக்கிரமிப்பு செய்ய அனுப்பப்பட்டிருக்கிறீர்கள். அவர்கள் அமெரிக்காவை அச்சுறுத்தவும் இல்லை - அவர்களின் தலைவர் மிகக் கொடிய சர்வாதிகாரியாக இருக்கலாம். அமெரிக்க நாட்டிலேயே ஜனாதிபதி சட்டப்படித்தான் தேர்ந்தெடுக்கப் பட்டாரா என்று பலர் நம்ப மறுக்கும் போது ஈராக் மக்கள் எப்படி நாட்டை ஆளவேண்டும் என்று சொல்ல இந்த அமெரிக்கா யார்?

சொந்த மக்களையே விஷவாயு செலுத்திக் கொன்றவர், கொத்துக் கொத்தாக மக்களைக் கொன்று குவிக்க ஆயுதங்கள் தயாரித்தவர் என்று சதாமை இன்று சாத்தான் என்று பழி தூற்றுகிறார்கள். மோசமான போர்க் கிரிமினல் குற்றங்களை சதாம் செய்தபோது அமெரிக்கா என்ன செய்தது - ஆதரித்தது. உயிரியல், ரசாயன ஆயுதத் தளவாடம் தயாரிக்க மூலப் பொருட்களை அள்ளிக் கொடுத்தது. ஈராக் மீது அமெரிக்கா போட்ட பொருளாதாரத் தடையால் ஏற்பட்ட படுபயங்கரமான விளைவுகளை இதோடு ஒப்பிடுங்கள். அத்தடைகளால் பத்து லட்சத்துக்கும் மேல் சிறுவர்களும், குழந்தைகளுமாய்ச் செத்துப் போனார்கள்.

இராக் ஆக்கிரமிப்பை எதிர்த்து வாஷிங்டன்னில் நடந்த ஆர்ப்பாட்டம்



◆ **கொல்லப்பட்ட இருபது லட்சம் ஆண், பெண், குழந்தைகள் இன்னமும் கூட எங்கள் கனவுகளில் வந்து வட்டமிட்டுக் கதறுகிறார்கள். சண்டையில் இறந்த வீரர்களை விட, வீடு திரும்பி இப்படிக் கனவுகளால் துரத்தப்பட்டே தற்கொலை செய்து கொண்ட வீரர்களே அதிகம்.**

கொலை செய்வதில் எந்தக் கவுரவமும் இல்லை. இந்தப் போர் வேறு பெயரில் நடத்தப்படும் பச்சைப் படுகொலை. இந்தப் போரையும், அதில் உங்கள் பங்கேற்பையும் எதிர்த்து என்னைப் போன்ற முன்னாள் இராணுவ வீரர்கள் தலைமையேற்று ஆர்ப்பாட்டங்கள் நடத்துவோம்.

வியத்நாம் போரின் போது - வியத்நாம் சென்ற சிப்பாய்கள், அமெரிக்காவிலேயே இருந்த சிப்பாய்கள் பலர் அதிகாரிகளின் கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்தார்கள்; எதிர்த்தார்கள்; கலகம் செய்தார்கள். கற்பிதமான ஓர் எதிரிக்கு எதிராக ஆயுதம் ஏந்துவதை மறுத்துச் சிறைக்குச் சென்றார்கள். சென்ற வளைகுடாப் போரில் தனியார் மூலம் சேர்க்கப்பட்ட சிப்பாய்கள் கூட பல காரணங்கள் சொல்லி எதிர்ப்பு காட்டினார்கள். எங்களில் பலர் அந்தப் போர்களிலிருந்து வெளியேறி 'போர் எதிர்ப்பு இயக்கத்'தில் இணைந்தோம்.

உலகில் எந்த ஒரு மக்களும் சுதந்திரமாக இருக்க வேண்டுமானால் - ஒரு நாட்டின் சிப்பாயாக இருப்பதை விட, உலகின் குடிமகனாக இருப்பதை முன்னால் நிறுத்துகிற ஒருநாள் வர வேண்டும்.

அந்த நாள் இதோ வந்துவிட்டது!

கப்பலில் சிப்பாய்களை அள்ளிச் செல்லும் கட்டளை வரும்போது, நீங்கள் எடுக்கின்ற ஒரு முடிவு - மத்தியக் கிழக்கில் வாழும் பல லட்சம் மக்களின் உயிர்களையும், இங்கு அமெரிக்காவில் வாழும் உயிர்களையும் ஆழமாகப் பாதிக்கும்.

எதிர்காலம் நோக்கிய நமது வழியை வடிவமைக்க உங்கள் முடிவு உதவி செய்யும். உங்கள் முன்னால் இரண்டே வழிகள். ஒன்று - உங்கள் படைத் தலைவர்களின் வழி; அவர்கள் உங்களைக் கட்டுப்படச் சொல்வார்கள்; மற்றொன்று - எங்கள் வழி; நாங்கள் சிந்திக்கச் சொல்கிறோம்; உங்கள் மனச் சாட்சிப்படி முடிவெடுக்க வலியுறுத்துகிறோம்.

நீங்கள் எதிர்த்து நிற்க முடிவெடுத்தால், நாங்கள் உங்களை ஆதரித்துப் பலம் கூட்டுவோம்!

ஏனெனில், உலக மக்களுக்குப் பணியாற்றுவதே உண்மையான லட்சியம்; எல்லா உலக மக்களுக்கும் பொதுவானதோர் எதிர்காலத்துக்கு உழைப்பதே உண்மையான லட்சியம் என்று நாங்கள் புரிந்து கொண்டு விட்டோம்!

**உங்கள் உண்மையுள்ள முன்னாள் இராணுவ வீரர்கள்.**

**(இவ்வறிக்கையில் நூற்றுக்கணக்கான முன்னாள் அமெரிக்க இராணுவத்தினர் கையெழுத்திட்டுள்ளனர்)**

**நன்றி: இசட் நெட் இணையதளம்**



படிப்பகம்

www.padippakam.com



# இராக் :
# போர் இன்னும் முடியவில்லை...!

**ஒரு போர், ஒரேயொரு போர், ஒரு நூற்றாண்டு மயக்கத்தைத் தெளிய வைத்துவிட்டது. இதற்குப் பல ஆயிரம் இராக் மக்களின் உயிர் பலி கொடுக்கப் பட்டிருக்கிறது.**

*"நாயைப் போல பின்னங்கால் களுக்கிடையில் வாலைச் சுருட்டிக் கொண்டு அமெரிக்கா இராக்கை விட்டு வெளியேறத்தான் போகிறது."*

– ஸ்காட் ரிட்டர், ஐ.நா. ஆயுதப் பரிசோதகர்.

கேட்பதற்கே மிக இனிமையான இந்தக் காட்சியை நாம் காண முடியுமா? இது சாத்தியமா? கோடிக்கணக்கான உலக மக்களின் எதிர்ப்பை மீறி, ஐ.நா. பாதுகாப்புக் கவுன்சிலை மீறி, தனது ஐரோப்பிய நண்பர்களை மீறி அமெரிக்க பிரிட்டிஷ் அரசுகள் இராக் மீது தொடுத்த போரில் அவர்கள் வெற்றி பெற்று விட்டனர். இராக் இன்னொரு காலனி நாடு.

பாக்தாத் வீதிகளில், இராக்கின் நகரங்களில் எங்கும் அமெரிக்க டாங்கிகள். இராக்கின் 'வைஸ்ராய்' அமெரிக்க அரசால் நியமிக்கப்பட்டு விட்டார். இடைக்கால அரசொன்றை நியமிப்பதற்குத் தேவையான கைக்கூலி களை அவர் தேடிக் கொண்டிருக்கிறார். இந்நிலையில் ஸ்காட் ரீட்டர் கூறுவது போன்றதொரு காட்சியை நாம் கற்பனை செய்தும் பார்க்க முடியுமா?

முடியும். அவ்வாறு கார்பலாவில் கூட்டப்பட்ட முதல் கூட்டத்திற்கே அமெரிக்கா எதிர்பார்த்த அளவு கையாட்கள் வரவில்லை என்ற உண்மையிலிருந்து அத்தகையதொரு காட்சியை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும். மனித குல நாகரி கத்தின் தொட்டிலான மெசபடோமி யாவில், 4000 ஆண்டுகளுக்கு முன்னரே 'சுதந்திரம்' என்றவொரு சொல்லை, கருத்தை உலகிற்கு அளித்த அந்த நாகரிகத்தின் வாரிசுகளான இராக் மக்களுக்குச் சுதந்திரம் வழங்குவதாக, கடற்கொள்ளைக்காரன் கொலம்பஸின் வாரிசுகள் அறிவித்தபோது அந்தக் கணமே அங்கேயே அதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்து சுதந்திரத்திற்காக 12 பேர் உயிர் துறந்தார்களே, அந்தச் செய்தியிலிருந்து அமெரிக்க நாய்களின் ஓட்டத்தை நாம் கற்பனை செய்து பார்க்க முடியும்.

சதாமின் மிகக் கொடிய சர்வாதி காரத்தின் கீழ் 25 ஆண்டுகள் அல்லல் பட்டபோதும், கோமாளி புஷ் எதிர் பார்த்ததைப் போல அமெரிக்க இராணு வத்தை இராக் மக்கள் பூச்செண்டு தந்து வரவேற்கவில்லை. புஷ்ஷின் புனை கதையை நம்பி சதாமிடமிருந்து இராக் மக்களுக்கு விடுதலை வாங்கித் தருவ தற்கு வந்த அமெரிக்க இராணுவத்தின் சிப்பாய் ஒருவன் சொன்னான் "இராக் மக்கள் நன்றி கெட்டவர்கள்."

ஏமாளித்தனமாக ஏகாதிபத்திய வாதிகளை இராக் மக்கள் நம்பி ஏமாந்த காலமொன்று இருந்தது. சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் "துருக்கி ஆட்டோமான் பேரரசின் கொடுங் கோன்மையிலிருந்து உங்களை விடு விக்கத்தான் தேவகுமாரர்களாகிய நாங்கள் வந்திருக்கிறோம்" என்று பிரிட் டிஷ்காரர்கள் கூறியபோது அதை நம்பு வதற்குச் சில ஏமாளிகள் அன்று இருந் தார்கள். அந்த மடமை தெளியவும் பிரிட்டனுக்கெதிரான ஆயுதப் போராட்டம் தொடங்கவும் அன்று சில ஆண்டுகள் தேவைப்பட்டன. இன்றோ வெற்றித் திமிருடன் நிற்கும் இராணுவ டாங்கிகளை நேருக்கு நேர் எதிர் கொண்டு "அமெரிக்காவே வெளி யேறு" என்று முழங்குகிறார்கள் இராக் மக்கள். போர் இன்னும் முடியவில்லை.

ஆயுதப் படைகளையும் கவச வண்டிகளையும் எதிர்த்து நின்று நிராயுதபாணிகளான மக்கள் வெறுங் கையை உயர்த்தி முழக்கமிடுவதைப் போர் என்று சொல்லமுடியுமா? முடியும்.

ஒரு மனிதனைப் பிடித்துக் கொண்டுவந்து அம்மணமாக்கி இருட்ட றையில் தள்ளி, வாரக்கணக்கில் பட்டினி போட்டு, தாகத்தால் தவிக்க விட்டு அதன்பிறகு பத்து போலீசார் அவனைச் சுற்றி நின்று தாக்கி வீழ்த்து வதைப் போர் என்று அழைக்கலா மென்றால், வாயிலும் மூக்கிலும் ரத்தம் வழிய அடிபட்ட, நைந்து துவண்டு போன அந்த மனிதன் மெல்ல நிமிர்ந்து போலீசாரை ஒரு ஏளனப் பார்வை பார்த்தால் அந்தப் பார்வைதான் அவன் நடத்தும் போர்.

13 ஆண்டுகளாக இராக் மீது பொரு ளாதாரத் தடை இருக்கிறது. ஐ.நா.வின் அனுமதியின்றி ஒரு நெல்மணி யையோ குண்டூசியையோ கூட அவர்கள் இறக்குமதி செய்ய இயலாது. உயிர்காக்கும் மருந்துகளுக்குத் தடை விதித்ததால் பிறந்தவுடன் இறந்த குழந் தைகள் பல இலட்சம்.

பிழைத்து வளர்ந்து பள்ளி சென்றால் நோட்டுப் புத்தகம் கிடை யாது – பென்சிலும் கிடையாது. காகித உற்பத்திக்குத் தேவைப்படும் வேதிப் பொருட்களும், பென்சிலில் உள்ள காரீ யமும் இராணுவ நோக்கத்திற்குப் பயன் படுத்தப் படுமென்பதால் அவற்றுக்கும் தடை. பொருளாதாரத் தடையின் வக்கி ரத்துக்கு இது ஒரு சான்று.

1980 முதல் 1988 வரை அமெரிக்க ஆதரவுடன் சதாம் நடத்திய ஈரான் – இராக் போர், பின்னர் அப்பன் புஷ் நடத் திய வளைகுடாப் போர், அதன் பின் கடந்த 13 ஆண்டுகளில் மோனிகா லெவின்ஸ்கி பிரச்சினை உட்பட பல காரணங்களுக்காக அவ்வப்போது இராக்மீது நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதல்கள், பொருளாதாரத் தடை காவு கொண்ட உயிர்கள் – இவை அனைத்துக்கும் தப்பி உயிர்வாழ்ந்து கொண்டிருக்கும் இராக்கின் மக்கள் தொகையில் சுமார் 60% பேர் சிறுவர்கள் – குழந்தைகள். மக்கள் தொகையில் 60 சதவீதம் பேர் அன்றாடம் ஐ.நா. வழங்கும் இலவச உணவுக்குக் கையேந்தி நிற்கும் வறியவர்கள்.

இராக் இராணுவமோ, சீருடை தவிர அனைத்தையும் இழந்து விட்டது. பத்தாண்டுகளாக அமெரிக்காவின் கையாளாக இருந்து ஐ.நா. நடத்திய ஆயுதப் பரிசோதனையில் இராக் இரா ணுவத்தின் அரைஞாண் கயிறு உட்பட அனைத்தும் அறுத்தெடுக்கப்பட்டு விட்டன.

இத்தனையையும் உத்திரவாதம் செய்து கொண்ட பிறகும் அமெரிக்கச்



படிப்பகம்

www.padippakam.com

# உலகின் அதிநவீன இராணுவத்தின் ஹெலிகாப்டரை வேட்டைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினார் ஒரு விவசாயி.

## சின்னஞ்சிறு நகரங்களுக்குள் நுழைவதற்கே அமெரிக்க, பிரிட்டிஷ் இராணுவங்கள் 15 நாட்கள் போராடின.



சூரப்புலிகளுக்குத் தைரியம் வரவில்லை. துருக்கி, ஈரான் உள்ளிட்ட எல்லைப் பகுதி நாடுகளின் ஒத்துழைப்பை உறுதி செய்து கொண்டு, குவைத், குவெட்டார், சவுதி ஆகிய எல்லைப்புற நாடுகளின் தளங்களில் வந்து இறங்கினார்கள்.

உலகத்தையே பலமுறை அழிக்குமளவு ஆயுதபலம் கொண்ட அமெரிக்க வல்லரசு, ஏற்கெனவே ஒருமுறை உலகத்தை ஆதிக்கம் செய்து அழித்த அனுபவம் கொண்ட பிரிட்டிஷ் வல்லரசு, அவர்களுடைய 3 லட்சம் துருப்புக்கள், 20,000 டன் வெடி மருந்துகள், இலக்குகளைக் குறிவைத்துத் தாக்கும் 14,000 ஏவுகணைகள், 2000-க்கும் மேற்பட்ட போர் விமானங்கள், இன்னும் டாங்கிகள், கவச வண்டிகள் இன்ன பிற...

இத்தனைக்குப் பிறகும் அவர்கள் இராக்கில் நுழையவில்லை. எல்லையிலிருந்தே ஏவுகணைகளை வீசி பின் உற்பத்தி நிலையங்கள், தொலைபேசி நிலையங்கள், மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், உணவுக் கிடங்குகள், குடிநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் ஆகிய அனைத்தையும் ஏவுகணைகளால் தகர்த்தார்கள். பிறகு பள்ளிகள், கடைவீதிகள், குடியிருப்புகள் மீதும் குண்டு வீசி ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்றார்கள். அந்தப் பாலைவன மண்ணில் எஞ்சியிருக்கும் மக்களுக்குக் குடிநீர்கூட இருக்கக் கூடாது என்பதை உத்திரவாதம் செய்து கொண்டு, அதன்பின் தைரியமாக இராக்கில் காலடி எடுத்து வைத்தார்கள் அமெரிக்க, பிரிட்டிஷ் 'வீரர்கள்'!

போர் என்பது இரு தரப்பினர் பொருதும் நிகழ்வைக் குறிக்கும் சொல். இராக்கைப் பதின்மூன்று ஆண்டுகள் பட்டினி போட்டு, சூழ்ச்சியால் ஆயுதங்களைப் பறித்து அமெரிக்கா நடத்தியிருக்கும் இந்த கிருஷ்ண பரமாத்மா வேலைக்கு வேண்டுமென்றால் வேறு பெயரிடலாம்; நிச்சயம் இது போர் அல்ல. மிதிபட்டு நைந்துபோன இராக்கின் மைந்தன், பீரங்கிக் குழாயின் முன் நிமிர்ந்து நின்று "அமெரிக்காவே வெளியேறு" என்று முழங்குகிறானே, இதுதான் போர். இந்தப் போர் இன்னும் முடியவில்லை.

உலகின் அதிநவீன இராணுவத்தின் ஹெலிகாப்டரை வேட்டைத் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினார் ஒரு விவசாயி. சின்னஞ்சிறு நகரங்களுக்குள் நுழைவதற்கே அமெரிக்க பிரிட்டிஷ் இராணுவங்கள் 15 நாட்கள் போராடின. ஆனால் 50 இலட்சம் மக்கள் தொகை கொண்ட தலைநகர் பாக்தாத் மூன்றே நாட்களில் வீழ்ந்தது. "இது சதாம் உசேனுடன் அமெரிக்கா செய்து கொண்ட ரகசிய உடன்படிக்கை" என்ற இரகசியம் அம்பலமாகிச் சந்தி சிரிக்கிறது.

ஒரு சர்வாதிகாரியின் துரோகத்துக்காக இராக் மக்கள் தலைகுனியத் தேவையில்லை. ஆனால் சர்வாதிகாரத்தை ஒழித்து ஜனநாயகத்தை நிலைநாட்டவும், பூமிக்கடியில் அந்தச் சர்வாதிகாரி ஒளித்து வைத்திருக்கும் பேரழிவு ஆயுதங்களைக் கண்டுபிடிக்கவும் போர் தொடுப்பதாகக் கூறிவரும் புஷ்ஷும் பிளேரும்தான் இந்தப் பித்தலாட்டத்திற்கு பதில் சொல்ல வேண்டும்.

இந்தப் 'பாக்தாத் ஒப்பந்தம்' உயிர்ப் பிச்சை வழங்கியிருப்பது சதாமுக்கல்ல; நகர்ப்புற கொரில்லா யுத்தத்தில், பாக்தாத் எனும் திக்குத் தெரியாத காட்டில், டாங்கிகள் நுழையமுடியாத அதன் சந்து பொந்துகளில் எலிகளைப் போலச் சுடுபட்டுச் செத்திருக்கக் கூடிய ஆயிரக்கணக்கான அமெரிக்கச் சிப்பாய்களுக்குத்தான் இந்தத் துரோக ஒப்பந்தம் உயிர்ப்பிச்சை வழங்கியிருக்கிறது.

பதின்மூன்று ஆண்டுகள் தாக்கப்பட்ட பின்னரும் தலைநிமிர்ந்து எதிர்க்கும் சமூகத்தை, பதின்மூன்றே நாட்களில் பயந்து உயிர்ப் பிச்சை கேட்ட கோழைகளா அடக்கியாள முடியும்? எனவேதான் சொல்கிறோம், ***போர் இன்னும் முடியவில்லை.***

இராக்கின் வைஸ்ராயாக அமெரிக்க அரசால் நியமிக்கப்பட்டிருக்கும் ஜே கார்னர் கூறுகிறார் "வியத்நாம் போர் பெரிதும் நீண்டு விட்டது. அன்று மட்டும் ஜார்ஜ் புஷ் ஜனாதிபதியாக இருந்திருந்தால் நாம் வென்றிருப்போம்".

கேலிக்குரிய இந்தப் புகழுரையில் சொக்கிப்போய், "யாரங்கே, வியத்நாம் மீது இன்னொரு முறை படையெடு" என்று பேரரசர் ஜார்ஜ் புஷ் உத்திரவிடவும் வாய்ப்பிருக்கிறது. ஆனால் அப்படி உத்தரவிடுவதற்கு முன்பே வியத்நாமிலிருந்து திரும்பிய அமெரிக்கச் சிப்பாய்கள் ஜனாதிபதியைச் சுட்டுக் கொன்றுவிடும் அபாயமும் இருக்கிறது. வியத்நாமிற்குச் சென்று சண்டை போட்டுச் செத்தவர்களைத் தவிர மற்றவர்கள் பலருக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. மீதி உள்ளவர்கள் போர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் முன்னணியில் நிற்கிறார்கள்.

கார்னரின் கூற்றை ஒரு வஞ்சப் புகழ்ச்சியாக நாம் எடுத்துக் கொண்டால் "ஒரு முழு மூடன் ஜனாதிபதியாக இருந்தால்தான் அமெரிக்கா போரில் வெற்றி பெற முடியும்" என்று பொருள் வருகிறது. உள்ளபடியே பொருள் கொண்டால் வைஸ்ராயின் மடமை அதிர்ச்சியூட்டுகிறது.

சதாம் என்ற முன்னாள் சி.ஐ.ஏ கூட்டாளியையும் ஹோசிமின் என்ற கம்யூ


படிப்பகம்

www.padippakam.com



னிஸ்டு புரட்சியாளனையும், ஒரு சர்வாதிகாரியையும் மக்கள் தலைவனையும், சர்வாதிகாரத்தின் பிடியில் மூச்சுத் திணறிக் கொண்டிருந்த மக்களையும் விடுதலை வேட்கையில் அணி திரண்டு நின்ற மக்களையும் ஒன்றெனக் கருதும் சிந்தனை, வெள்ளைத் திமிர் பிடித்த ஒரு அமெரிக்க மூளையில்தான் உதிக்க முடியும்.

''வியத்நாமை முப்பதாண்டுகளுக்கு முந்தைய இராக்'' என்று மதிப்பிடும் மூளையானது ''இராக் - முப்பதாண்டுகளுக்குப் பிந்தைய வியத்நாமாக'' மாறக்கூடிய சாத்தியக்கூறை ஒத்துக்கொள்ளாது. அன்று ஹெலிகாப்டரில் தொத்திக் கொண்டு கடைசி அமெரிக்கச் சிப்பாய் வியத்நாமிலிருந்து உயிர் தப்பி ஓடும் காட்சியைக் காணும் வரை ''நாம் தோற்று விட்டோம்'' என்பதை அமெரிக்கா ஒப்புக் கொண்டதா, என்ன? பிழைத்திருந்தால் ஜே கார்னரையும் ஒப்புக் கொள்ள வைப்பார்கள் இராக் மக்கள். ஏனென்றால், ***போர் இன்னும் முடியவில்லை.***

இந்த மாபெரும் போரில், உலகின் மாபெரும் இராணுவத்தின் மாவீரர்கள் காட்டிய துணிவைக் கண்டு உலகமே கைகொட்டிச் சிரித்தது. தங்களுக்கெதிராக ஒரு தோட்டா சுடப்பட்டால் உடனே கண்ணை மூடிக் கொண்டு எட்டுத் திக்கிலும் ஓராயிரம் தோட்டாக்களை உமிழ்ந்தார்கள். பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள், கோல் ஊன்றி நடக்கும் முதியவர்கள், ஆடுகள், கோழிகள் போன்ற எந்த வடிவத்திலும் தற்கொலைப் படை தங்களைத் தாக்கக் கூடுமென அஞ்சியதால் எல்லோரையும் எல்லாவற்றையும் சுட்டார்கள்.

இத்தனைக்குப் பிறகும் சில அமெரிக்கப் பிணங்களையும், போர்க் கைதிகளையும் தொலைக்காட்சியில் கண்டவுடன் அமெரிக்க அரசுக்கு வியர்த்தது. எப்போதும் வானத்தை மட்டுமே பார்த்து நடக்கும்படி தயாரிக்கப்பட்ட ஜனாதிபதியின் சிப்பாய்கள் தலை குனிந்து கைதிகளாக மண்டியிட்டிருப்பதைக் கண்ட வீரர்களுக்கு வெறி பிடித்தது.

எதிரில் வருபவர்கள் அனைவரும் எதிரிகளே என்று பீதியில் சுடத்தொடங்கினர். கடைசியில் கணக்குப் பார்த்த போது இராக்கியர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட அமெரிக்கர்களைக் காட்டிலும் அமெரிக்க வீரர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட அமெரிக்கப் பிணங்களே அதிகமிருந்தன.

ஆயுதமேந்திய இந்தக் கோழைகளின் நடத்தையுடன் ஆயுதமேந்தாத வீரர்களான இராக் மக்களை ஒப்பிட்டுப் பாருங்கள். ஏவுகணைத் தாக்குதலுக்கு அஞ்சி இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக வரக்கூடுமென்று எதிர்பார்த்து எல்லை நாடுகளிலெல்லாம் தயாராக அகதி முகாம் அமைத்து வைத்திருந்தார்கள். ஆனால் அகதிகளாய் வெளியேற மக்கள் விரும்பவில்லை. மாறாக அண்டை நாடுகளான ஜோர்டானுக்கும், சிரியாவுக்கும் பிழைப்பு தேடிப் போயிருந்த இராக்கியர்கள் பாக்தாத் மீது ஏவுகணைகள் வந்து விழும் காட்சியைக் கண்டவுடன் சொந்த மண்ணைக் காக்க ஆயிரக் கணக்கில் இராக் நோக்கிப் புறப்பட்டார்கள். ஒருபுறம் பாக்தாத் மீது வந்திறங்கும் ஏவுகணைகளையும், மறுபுறம் பாக்தாத் நோக்கிப் பேருந்துகளில் வந்திறங்கும் மக்களையும் தொலைக்காட்சியில் கண்டு உலகமே வியந்தது.

ஒரு நியூயார்க் கட்டிடம் தகர்க்கப்பட்டவுடன் பீதியில் அலறிய அமெரிக்கா; பாக்தாத் நகரமே தகர்த்துத் தூளாக்கப்படுவதைக் கண்ட பிறகும் உயிருக்கஞ்சாமல் நாட்டைக் காக்க விரையும் இராக் மக்கள். ஒரு தோட்டாவைச் சந்தித்தவுடன் கண்ணில் பட்டவர்களையெல்லாம் சுட்டுத் தள்ளும் அமெரிக்கச் சிப்பாய்கள்; ஓராயிரம் டன் குண்டுகள் பொழிந்து கொண்டிருந்த போதும் மண்ணெண்ணெய் விளக்கின் ஒளியில் ஒரு உயிரைக் காப்பாற்ற அறுவை சிகிச்சை செய்யும் பாக்தாத்தின் ஈடிணையில்லா மருத்துவர்கள்.

யாருக்கு யார் அடிபணிவார்கள்? சுயநலத்தின் முன் தியாகமும், கோழையின் கீழ் வீரமும் அடிபணிந்ததாக வரலாறில்லை. எனவேதான் சொல்கிறோம், ***போர் இன்னும் முடியவில்லை.***

வென்றவர் யார் தோற்றவர் யார் என்றறிய கைகளைப் பார்க்காதீர்கள். கண்களைப் பாருங்கள். துப்பாக்கி என்றொரு பொருள் அமெரிக்கச் சிப்பாயின் கைகளில் இருப்பதையே பொருட்படுத்தாமல் ''அமெரிக்கனே வெளியேறு'' என்று முழங்குகிறார்கள். ''இந்தக் குழந்தையை ஏன் கொன்றாய், உன்னுடைய புஷ் எங்கே, அவனைப் பதில் சொல்லச் சொல்'' என்று முகத்துக்கு நேரே கையை நீட்டி சபிக்கிறார்கள். தொலைக்காட்சிகளில் நமக்குக் காட்டியது இவ்வளவு, காட்டப்படாதது எவ்வளவோ!

மக்களின் கண்களில் வெறுப்பு, கோபம். அவர்களை எதிர்கொள்ளும் சிப்பாய்களின் கண்களிலோ ஒருவித அச்சம், வெறுமை. தார்மீக ரீதியில் தோற்றுப் பின்வாங்கும் கண்களுக்கே



அமெரிக்கக் குண்டுவீச்சில் கை, கால்களை இழந்த சிறுவன் இஸ்மாயில்;
அமெரிக்க கால்ஃப் மைதானத்தில் ஆடிய கைகளுக்கு ஓய்வு கொடுக்கும் அப்பன் - மகன் புஷ்கள்



படிப்பகம்

www.padippakam.com

யுரிய வெறுமை. அவர்கள் துப்பாக்கி ஏந்திய பிணங்கள். மக்களோ ஆயுதம் ஏந்தாத வீரர்கள்.

இத்தகைய சூழ்நிலைகள் ஏகாதிபத்தியவாதிகளுக்குப் புதியவையில்லை. எத்தனை டன் குண்டுகளை வீச வேண்டியிருக்கும்; எத்தனை ஆயிரம் மக்களைக் கொல்ல வேண்டியிருக்கும் என்று போருக்கு முன்னர் திட்டமிடும் போதே, கொல்லப்பட்டவர்கள் போக எஞ்சியுள்ளவர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதற்கான தந்திரங்களையும் சேர்த்துத்தான் அவர்கள் திட்டமிடுகிறார்கள்.

அடிமைப்படுத்தப்பட்ட "மக்களின் உள்ளத்தையும் சிந்தனையையும் வென்றெடுப்பது" என்று இந்தத் தந்திரத்திற்குப் பெயரிட்டிருக்கிறார்கள். போருக்குப் பின் அமெரிக்க மேலாதிக்கத்தின் நியாயத்தையும், எண்ணெய் வயல்களைத் தனியார்மயமாக்குவதன் அவசியத்தையும் இராக் மக்களுக்குக் "கற்றுக் கொடுக்க வேண்டும்" என்று ஆலோசனை வழங்கியிருக்கிறது 'ஹெரிடேஜ்' எனும் அமெரிக்கக் கல்வி (ராணுவ) நிறுவனம்.

வன்புணர்ச்சியின் நியாயத்தையும், அதன் தவிர்க்கவியலாத தன்மையையும், அதனால் கிடைக்கக்கூடிய ஆதாயத்தையும் ஒரு பெண்ணுக்குப் புரிய வைத்து ஏற்கச் செய்ய முடியுமென்றால் அடிமைத்தனத்தை ஏற்குமாறு இராக் மக்களையும் பக்குவப்படுத்தலாம்.

'கற்பழித்தவனையே காதலிக்கச் செய்வது' என்ற இந்த ஆலோசனை அருவெறுக்கத்தக்கதாக நமக்குத் தோன்றக்கூடும். ஆனால் இந்தச் 'சவால்' பற்றித்தான் பி.பி.சி, சி.என்.என். தொலைக்காட்சிகளில் ராஜதந்திரிகளும் வல்லுநர்களும் அன்றாடம் விவாதிக்கிறார்கள்.

"வெறும் சோறு மட்டும் போதுமா சுதந்திரம் வேண்டாமா?" என்று கம்யூனிசத்திற்கு எதிராகச் சண்டமாருதம் செய்தவர்கள் "சோறு போடுகிறேன் சுதந்திரத்தைக் கொடுத்து விடு" என்று பேரம் பேசுகிறார்கள். கோக், பெப்சி, அமெரிக்க நுகர்பொருட்கள் ஆகியவற்றைச் சந்தையில் குவித்து "குடி, அனுபவி, அமெரிக்காவைக் காதலி" என்று இராக் மக்களுக்கு ஆசைகாட்டத் திட்டமிடுகிறார்கள். ஆனால் உலகெங்கும் ஏற்கெனவே அமெரிக்க மோகத்தில் கட்டுண்டு கிடந்த பலர் இந்த ஆக்கிரமிப்புப் போரைக் கண்டபின் பித்தம் தெளிந்து விட்டனர். அமெரிக்க பிரிட்டிஷ் ஆதிக்கத்திற்கெதிரான இராக் மக்களின் போர், அமெரிக்க மேலாதிக்கத்திற்கெதிரான உலக மக்களின் போராட்டமாக வடிவெடுத்து விட்டது. ***காலனியாதிக்கமும் ஏகாதிபத்தியமும் ஒழியும் வரை இந்தப் போர் முடியப் போவதில்லை.***

உலகமயமாக்கம், உலகு தழுவிய சுதந்திரம் என்ற முதலாளித்துவப் பிதற்றல்களை இந்த ஆக்கிரமிப்பு துடைத்தெறிந்துவிட்டது. "முதல் உலகப் போர் என்பது நாடுகளை மறுபங்கீடு செய்து கொள்வதற்கு ஏகாதிபத்தியங்கள் நடத்தும் நாய்ச்சண்டை" என்று லெனின் கூறியபோது அதை ஏற்க மறுத்தவர்கள் ஏராளம். இரண்டாம் உலகப் போரின் போது பாசிச எதிர்ப்பு என்ற முகமூடிக்குள் தங்கள் ஏகாதிபத்திய முகத்தை ஒளித்துக் கொண்டன அமெரிக்கா, பிரிட்டன் போன்ற அரசுகள். பனிப்போர்க் காலத்தில் 'கம்யூனிச பூதத்தை'ப் பற்றிக் கட்டுக்கதை பரப்பித் தங்களை ஜனநாயகவாதிகளாகச் சித்தரித்துக் கொள்வதிலும் இவர்கள் வெற்றி பெற்றனர். நியூயார்க் தாக்குதலுக்குப் பின் பயங்கரவாதத்திற்கெதிரான உலகப் போர் என்று கூறி ஆப்கான் ஆக்கிரமிப்பையும் கூட நியாயப்படுத்த முடிந்தது.

ஆனால் இந்த இராக் ஆக்கிரமிப்புப் போரிலோ "பேரழிவு ஆயுதம் - இராக்கின் சுதந்திரம்" என்ற எந்தக் கட்டுக்கதையும் செல்லுபடியாகவில்லை. "இராக்கின் எண்ணெய் வயல்களை அமெரிக்க, பிரிட்டிஷ் எண்ணெய் நிறுவனங்கள் கைப்பற்றுவதற்காகத்தான் இந்தப் போர்" என்ற உண்மை பள்ளிச் சிறுவர்களுக்கும் புரிந்துவிட்டது.


எந்த ஐ.நா.வின் பெயரால் பொருளாதாரத் தடை என்ற பெயரில் 13 ஆண்டுகளாக இராக் மக்கள் பட்டினி போட்டுக் கொல்லப்பட்டார்களோ, அந்த ஐ.நாவை ஒரே நொடியில் கொன்று விட்டு "கடவுளுக்கு நன்றி. ஐ.நா. செத்து விட்டது" என்று எகத்தாளம் செய்கிறது அமெரிக்கா. லீக் ஆஃப் நேஷன்ஸ் என்ற உலக மன்றத்தை இதேபோல இட்லர் ஒழித்துக் கட்டியதைத் திகிலுடன் நினைவு கூர்கிறார்கள் முதலாளித்துவ அறிஞர்கள். இட்லர் என்பவன் தப்பிப் பிறந்த தறுதலைப் பிள்ளையல்ல, ஏகாதிபத்தியம் பெற்றெடுத்த குலக்கொழுந்துதான் என்பதை புஷ் நிரூபிக்கிறார்.

நடுநிலை, சுதந்திரம் என்று பம்மாத்து செய்து கொண்டிருந்த பி.பி.சி, சி.என்.என் போன்ற செய்தி நிறுவனங்கள், பத்திரிக்கைகள் ஆகிய அனைவரும் அமெரிக்க பிரிட்டிஷ் முதலாளிகளின் அடைப்பக்காரர்கள்தான் என்ற உண்மை அசிங்கமாக அம்பலமாகிவிட்டது. இனி, இவர்களுடைய வானிலை அறிக்கைகளைக்கூட வளைகுடா மக்கள் சந்தேகிப்பார்கள் என்ற நிலை தோன்றிவிட்டது.

ஒரு போர், ஒரேயொரு போர், ஒரு நூற்றாண்டு மயக்கத்தைத் தெளிய வைத்துவிட்டது. இதற்குப் பல ஆயிரம் இராக் மக்களின் உயிர் பலி கொடுக்கப்பட்டிருக்கிறது. ***ஏகாதிபத்தியம் என்றால் போர் என்ற இந்த ரத்தம் தோய்ந்த உண்மை உலக மக்களின் நினைவில் நிற்கும் வரை ஏகாதிபத்தியங்களுக்கெதிரான மக்கள் போர் முடியப்போவதில்லை.***

**"இந்தக் குழந்தையை ஏன் கொன்றாய்? உன்னுடைய புஷ் எங்கே...? பிளேயர் எங்கே? அவர்களைப் பதில் சொல்லச் சொல்."**

**– அச்சுறுத்தும் அமெரிக்கத் துப்பாக்கிகளுக்கு அஞ்சாத இராக்கியர்களின் அரசியல் போர்.**



**❑ மருதையன்**


படிப்பகம்

www.padippakam.com





வெள்ளைத் தோலானாலும், அமெரிக்கக் குடிமகனானாலும் தனது ஆதிக்கத்தை எதிர்த்து நிற்போர் யாரையும் பாசிஸ்டுகள் விட்டு வைப்பதில்லை என்ற உண்மை புரியும் தருணத்தில், புல்டோசரின் கொலைக் கரங்கள் அவளை நெருங்கிய அந்தத் தருணத்தில் ரச்சேல் ஓடவில்லை. மரணத்தின் தறுவாயில் தான் உணர்ந்து கொண்ட உண்மையை அமெரிக்க மக்கள் அனைவரும் உணர்ந்து கொள்ளட்டும் என்பதற்காக அவள் உயிர் விட்டாள்.

# ஃபீதாயின் ரச்சேல்

அமெரிக்க இராணுவம் வானத்திலிருந்து ஈராக் மக்களைப் படுகொலை செய்யத் தொடங்குவதற்கு நான்கு நாட்கள் முன், அந்தக் கோழைத்தனத்தை நிராகரிக்கும் வீரமாக, அந்த ஆக்கிரமிப்புக்கு எதிரான தோழமையாக, பாலஸ்தீன மண்ணில் ரத்தம் சிந்தினாள் ஒரு அமெரிக்கக் கல்லூரி மாணவி.

மார்ச் - 16. பாலஸ்தீன மக்களின் தாயகத்தை ஆக்கிரமிக்கும் யூதவெறி பிடித்த இசுரேல் இராணுவத்தின் புல்டோசர், ரச்சேல் கோரி என்ற அந்த வீராங்கனையின் மீது ஏறி இறங்கியது.

ரச்சேல் சர்வதேச ஒற்றுமை இயக்கம் என்ற அமைப்பின் உறுப்பினர். பாலஸ்தீனத்தை ஆக்கிரமிக்கும் இசுரேல் அரசையும் அதற்குத் துணை நிற்கும் அமெரிக்காவையும் எதிர்த்துப் போராடும் இந்த அமைப்பின் பெரும்பாலான உறுப்பினர்கள் அமெரிக்க பிரிட்டிஷ் இளைஞர்கள்.

ரச்சேல் அமெரிக்கத் தலைநகர் வாஷிங்டனைச்சேர்ந்த ஒரு கல்லூரி மாணவி. ''பயங்கரவாதத்திற்கெதிரான போர்'' என்ற பெயரில் அமெரிக்கா நடத்தி வரும் இராணுவ வெறியாட்டங்களை எதிர்த்துப் போராடுவதில் அவள் முன்னணியில் நின்றதாக ரச்சேலை நினைவு கூர்கிறார்கள் அவளது ஆசிரியர்கள்.

குறிப்பாக பாலஸ்தீன மக்களின் துயரத்தைத் தன் சொந்தத் துயரமாகவே கருதினாள் ரச்சேல். ஈராக்கை அமெரிக்கா ஆக்கிரமிக்கும் தருணத்தில், உலகின் கவனம் அங்கே திரும்பியிருக்கும் போது, பாலஸ்தீனத்தை இசுரேல் விழுங்கி விடும் என்று அவள் அஞ்சினாள்.

அதைத் தடுப்பது தம் கடமை என்று கருதிய ரச்சேலும் அமெரிக்க பிரிட்டிஷ் இளைஞர்கள் ஏழு பேரும் இரண்டு மாதங்களுக்கு முன்பே பாலஸ்தீனத்திற்கு வந்து விட்டனர். பாலஸ்தீனத்தில் இசுரேல் அன்றாடம் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் காசா பகுதியில், ரஃபா எனும் சிறு நகரில் பாலஸ்தீன ஏழை மக்களின் குடும்பங்களுடன் சேர்ந்து வாழ்ந்தது அந்த இளைஞர்கள் குழு.

திடீர் திடீரென இசுரேலிய இராணுவத்தின் புல்டோசர்கள் வருவதும் அவற்றை மறித்து நின்று போராடுவதும் ரச்சேல் குழுவினரின் அன்றாட நடவடிக்கையாகி விட்டது. அத்தகைய சம்பவம் ஒன்றினைத் தனது பெற்றோருக்கு எழுதிய கடிதத்தில் விவரிக்கிறாள் ரச்சேல்.

''நாங்கள் புல்டோசரை மறித்து நின்றோம். மண்வாரியில் எங்களை அள்ளி வீசினான் ஓட்டுனர். நாங்கள் வீட்டின் ஒரு முனையில் கிடந்தோம். மறுபாதியை இடித்துத் தள்ளியது புல்டோசர்.

மார்ச் - 16-ம் தேதி நடந்ததும் அதுதான். வெறியுடன் வந்து கொண்டிருந்தது இராணுவத்தின் புல்டோசர். அதன் பாதையில் மண்டியிட்டு அமர்ந்திருந்தாள் ரச்சேல். ''நிறுத்து... நிறுத்து'' என்று ரச்சேலின் தோழர்கள் கதறினார்கள். பயனில்லை. ரச்சேலின் தலையைப் பிளந்தபின்தான் அது நின்றது.

''நிராயுதபாணிகளான பாலஸ்தீன மக்களைச் சுட்டுத் தள்ளுகிறது இசுரேல் இராணுவம். ஆனால் நிராயுதபாணியான ஒரு அமெரிக்கக் குடிமகனைச் சுட்டுத்தள்ளும் தைரியம் அவர்களுக்கு இருக்குமா?'' என்று தன் பெற்றோருக்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிடுகிறாள் ரச்சேல்.

பாசிஸ்டுகளை எடை போடத் தெரியாத அந்தப் பெண்ணின் வெகுளித்தனம் நம்மைக் கண்கலங்கச் செய்கிறது. வெள்ளைத் தோலானாலும், அமெரிக்கக் குடிமகனானாலும் தனது ஆதிக்கத்தை எதிர்த்து நிற்போர் யாரையும் பாசிஸ்டுகள் விட்டு வைப்பதில்லை என்ற உண்மை புரியும் தருணத்தில், புல்டோசரின் கொலைக்கரங்கள் அவளை நெருங்கிய அந்தத் தருணத்தில் ரச்சேல் ஓடவில்லை. மரணத்தின் தறுவாயில் தான் உணர்ந்து கொண்ட உண்மையை அமெரிக்க மக்கள் அனைவரும் உணர்ந்து கொள்ளட்டும் என்பதற்காக அவள் உயிர் விட்டாள்.

ரச்சேல் ஒரு மனிதாபிமானியா, வீராங்கனையா, தியாகியா, அல்லது போராளியா? அவள் ஒரு போராளி. ஃபிதாயீன்!

ஃபிதாயீன் என்ற அரபிச் சொல்லின் பொருள் தற்கொலைப் படை வீரன். பாலஸ்தீனத்தின் மீசை அரும்பாத இளைஞர்களும் இளம் பெண்களும் தம் உடலையே வெடிமருந்துக் கிடங்காக்கி வெடிக்கச் செய்து இசுரேலை நிலைகுலையச் செய்கிறார்கள். அவர்களுடைய இலக்கு யூதவெறி அரசு.

ரச்சேலின் இலக்கோ அமெரிக்க சமூகத்தின் அலட்சியம்; உலக மக்களின் மவுனம். வெடிமருந்துகளால் தகர்க்க முடியாத இந்த 'எதிரியை' முறியடிக்க அந்த அமெரிக்க மாணவி கண்டுபிடித்த அதி நவீன ஆயுதம் தன்னுடைய ரத்தம். ❑



படிப்பகம்

www.padippakam.com





காசா பகுதியில் ஏழை பாலஸ்தீன மக்களின் குடிசைகளை அன்றாடம் இடித்துத் தள்ளும் இஸ்ரேல் புல்டோசர்

''இந்த பாலஸ்தீனச் சிறுவர்களோ நாம் வாழும் அமைதியான வாழ்க்கையை அறிந்ததே இல்லை. நினைத்துப் பாருங்கள். உங்கள் குழந்தைப் பருவம் முழுவதும் உயிர் வாழ்வதற்காக மட்டுமே நீங்கள் போராடிக் கொண்டிருந்தால் எப்படி இருக்கு மென்று!''

# ''நாம் வாழும் வாழ்க்கை இந்தக் குழந்தைகளுக்குத் தெரிந்தால்...''

## – ரச்சேலின் கடிதம்

**இசுரேல் இராணுவத்தால் கொல்லப்படுவதற்குச் சில நாட்கள் முன் ரச்சேல் தன் பெற்றோருக்கு எழுதிய கடிதத்திலிருந்து சில பகுதிகள்:**

நான் பாலஸ்தீனத்துக்கு வந்து சரியாக இரண்டு வாரங் களும் ஒரு மணி நேரமும் ஆகிவிட்டது. ஆனால் இங்கே நான் காண்பதை உங்களுக்கு விவரிக்க, அதாவது அமெரிக்கா வுக்குப் புரிய வைக்க வார்த்தைகள் கிடைக்காமல் தவிக் கிறேன்.

குண்டுகளால் துளைக்கப்பட்ட வீட்டுச் சுவர்கள், கழுகுப் பார்வையால் கண்காணிக்கும் ஆக்கிரமிப்பு இராணுவம் - இவையிரண்டும் இல்லாத ஒரு வாழ்க்கையை இங்குள்ள குழந்தைகள் வாழ்ந்ததேயில்லை. இருப்பினும் ''வாழ்க்கை என்பது எல்லா இடங்களிலும் இந்த மாதிரி இல்லை'' என்பதை இங்குள்ள சின்னஞ்சிறு பிள்ளைகள் கூடப் புரிந்து வைத்திருக்கிறார்கள்.

நான் இங்கே வந்து இறங்குவதற்கு இரண்டு நாட்கள் முன் ஒரு 8 வயதுச் சிறுவனை இசுரேலிய இராணுவம் சுட்டுக் கொன்று விட்டது. ''அவன் பெயர் அலி'' என்று என்னிடம் கிசுகிசுக்கிறார்கள் இங்குள்ள குழந்தைகள். ''ஷரோன் யாரு - புஷ் யாரு'' என்று அரபியில் அவர்கள் கேட்க ''ஷரோன் கிறுக்கன் - புஷ் கிறுக்கன்'' என்று நானும் எனக்குத் தெரிந்த அரபு மொழியில் பதில் சொல்கிறேன். அரபு மொழியை இப்படித்தான் எனக்குக் கற்றுத் தருகிறார்கள் இந்தச் சிறு வர்கள். உலக அரசியலின் அதிகாரம் எப்படி இயங்குகிறது என்பதைப் பற்றி நான் முன்னர் புரிந்து வைத்திருந்ததைக் காட்டிலும் இங்கே இருக்கும் 8 வயது வாண்டுகள் தெளி வாக அறிந்திருக்கிறார்கள்.

புத்தகங்கள், கருத்தரங்குகள், விவாதங்கள், செய்திப் படங்கள் போன்ற பல வழிகளில் பாலஸ்தீனத்தைப் பற்றி நான் சேகரித்த அறிவு அனைத்தையும் விஞ்சுகிறது இங்குள்ள எதார்த்தம். நேரில் பார்த்தாலொழிய நீங்கள் இதைப் புரிந்து கொள்ளவே முடியாது; ஒருவேளை நேரில் வந்து அனுபவித்தாலும் முழுமையாகப் புரிந்து விட்டதாக நான் சொல்லிக் கொள்ள முடியாது.

என்னையே எடுத்துக் கொள்ளுங்கள். இங்குள்ள கிணறு களை இடித்தாலும் தண்ணீர் வாங்கிக் குடிக்க என்னிடம் பணம் இருக்கிறது; நினைத்தால் நான் உடனே அமெரிக்கா வுக்குத் திரும்பிவிடலாம்; என் குடும்பத்தினர் யாரையும் இராணுவம் ராக்கெட் வீசிக் கொன்றதில்லை; எனக்கொரு வீடு இருக்கிறது; நான் ஆற அமரக் கடலைக் கண்டு ரசித்தி ருக்கிறேன்; பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பும் வழியில் இராணுவத்தால் கொல்லப்படுவேனோ என்ற பயமின்றி சந்தோஷமாக நான் வீடு திரும்பியிருக்கிறேன்.

எனவேதான் இக்குழந்தைகள் வாழும் உலகத்திற்குள் கால் வைத்த மறுகணமே இந்தக் கொடூரங்களைக் கண்ணால் கண்ட மறுகணமே என் ரத்தம் கொதிக்கிறது. ''ஒருவேளை ஒரு பாலஸ்தீனச் சிறுவன் அமெரிக்கா எனும் என்னுடைய உலகத்தை நேரில் வந்து பார்த்தால் அந்தப் பிஞ்சு மனம் எப்படித் துடிக்கும்'' என்ற கேள்வி என்னை வாட்டுகிறது.

இவர்களைப் போலன்றி நான் வேறொரு வாழ்க்கையை வாழ்ந்து பார்த்திருக்கிறேன். அமைதியான இடத்தில் வசித்தி ருக்கிறேன். கிணற்றை இடித்து, குடிக்கும் தண்ணீரை இரா ணுவம் பறித்து விடும் என்று நான் கற்பனையில் கூட அஞ்சி யதில்லை; இரவு தூங்கிக் கொண்டிருக்கும்போது வீட்டின் சுவர்கள் உட்புறமாக இடித்துத் தள்ளப்பட்டு நான் பதறி விழித் ததில்லை; தனது சொந்தங்களை இராணுவத்திற்குக் காவு கொடுத்த யாரையும் நான் அமெரிக்காவில் சந்தித்ததில்லை; என்னுடைய வீட்டை நாற்புறமும் இராணுவக் கோபுரங்கள் கொலைவெறியுடன் குறிபார்க்கவில்லை.

ஆனால், இந்த பாலஸ்தீனச் சிறுவர்களோ நாம் வாழும் அமைதியான வாழ்க்கையை அறிந்ததே இல்லை. நினைத்துப் பாருங்கள். உங்கள் குழந்தைப் பருவம் முழுவதும் உயிர் வாழ்வதற்காக மட்டுமே நீங்கள் போராடிக் கொண்டிருந்தால் எப்படி இருக்குமென்று! உலக வல்லரசின் ஆதரவுடன், உலகின் நான்காவது பெரிய இராணுவம் உங்களையும் உங்கள் வீட்டையும் துடைத்தெறிவதற்கு மூர்க்கத்தனமாக முனைந்து கொண்டேயிருக்க, அதையெதிர்த்து நீங்கள் போராடிக் கொண்டேயிருக்க... வாழ்க்கை என்பதே இதுதான் என்றால்....

அதனால்தான் எனக்கு இப்படித் தோன்றுகிறது. இந்த பாலஸ்தீனக் குழந்தைகள் அமெரிக்கா எனும் என்னுடைய உலகத்தை உண்மையிலேயே நேரில் பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்ற கேள்வி என்னை வாட்டுகிறது. ❑

*நன்றி : ஃப்ரண்ட்லைன், 11.04.2003*


படிப்பகம்

www.padippakam.com



இராணுவப் பத்திரிகையாளர்கள்:

# அமெரிக்கத் துப்பாக்கியே பேனாவாக....

தற்போதைய போரின் பொது மக்கள் தொடர்புத் துறையில் ஏற்பட்ட மிகப் பெரும் சூழ்ச்சி, ''இராணுவப் பத்திரிக்கையாளர்கள்''. பென்டகனும், ரம்ஸ்பீல்டும் கனவு கண்டு உருவாக்கிய இப்பத்திரிக்கையாளர்கள் முற்றிலும் இராணுவத்தால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள். இராணுவத்திடம் தங்களது சுயேச்சைத் தன்மையை அடகு வைக்கும் இப்பத்திரிக்கையாளர்கள் பதிலுக்கு சண்டையிடும் இடத்திற்கு அவர்களுடன் சேர்ந்து செல்கிறார்கள். மேலும் உணவு, இருப்பிடம், போக்குவரத்து, பாதுகாப்பு அனைத்தும் இலவசமாக அளிக்கப்படும். தனியாகச் செய்தி சேகரிக்கும் சுயேச்சையான பத்திரிக்கையாளர்கள் எவருக்கும் இச்சலுகைகள் எதுவும் கிடையாது.

பென்டகன் வகுத்திருக்கும் 50 விதிகளடங்கிய ஒப்பந்தத்தில் இராணுவப் பத்திரிக்கையார்கள் (இனி... இ.ப.) கையொப்பமிடவேண்டும். அந்த விதிகளில் என்ன செய்ய வேண்டும் என்பவை குறைவாகவும், என்ன செய்யக் கூடாது என்பவை அதிகமாகவும் இருக்கிறது. தற்போது இராக்கில் அமெரிக்க இராணுவத்துடன் 767 நிருபர்களும், இங்கிலாந்து இராணுவத்துடன் 136 நிருபர்களும் செல்கின்றனர். இதில் பெரும்பாலானோர் அமெரிக்க, இங்கிலாந்து செய்தி நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள்தான். ஏனைய நாடுகளைச் சேர்ந்த நிருபர்கள் தவிர்க்கப்பட்டது ஒரு விபத்தல்ல, ஒரு தந்திரமே ஆகும்.

இ.ப. முறையின் மேதமையே சண்டைக் காட்சிகளை நேரில் பார்ப்பது தான். ஆங்கிலப் பாதுகாப்புத்துறை செயலர் ஜியாஃப்ஹூன் (Geoff Hoon) ''வரலாற்றில் இதுவரை பார்க்க முடியாத அளவுக்கு, இந்த இ.ப. முறை போரை நேரடியாகவும், வரைபடத்தைப் போலவும் காட்டுகின்றது என நினைக்கிறேன். போர்க்களத்தின் உண்மையான தருணங்களை நிருபர்கள் பதிவு செய்து அளிப்பதை தொழில்நுட்பம் சாத்தியமாக்கியிருப்பது இதுவே முதல்முறை'' என்று அங்கீகரிக்கிறார்.

போர்க்களக் காட்சிகளை இவ்வளவு நெருக்கமாகப் பார்ப்பது புதிது தான் என்பது உண்மையானாலும், அமெரிக்கர்கள் தங்கள் பிரச்சாரத்திற்கு உரிமை கொண்டாடுவதற்கே அந்த உண்மை பயன்படுகிறது. மேலும் இந்த இ.ப. முறையின் நோக்கமே நிருபர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதன் மீதுள்ள முழு கட்டுப்பாடுதான். இராணுவத்துடன் உண்டு, குடித்து, அளவளாவி, கொஞ்சம் போர் அபாயத்தையும் சந்தித்து, அமெரிக்க நலன்களைப் பேசுவதுதான் இம்முறையின் சிறப்பம்சம். டெட் கோப்பல் (Ted Koppel) எனும் அமெரிக்க ஏ.பி.சி. தொலைக்காட்சியைச் சேர்ந்த இ.ப. ஒருவர், அமெரிக்க வீரர்களுடன் இணைந்திருப்பது மிகவும் குதூகலமாயிருக்கிறது என்கிறார். இத்தகைய சிந்தனையே இ.ப.க்களுக்கு, செய்திகளை வெளியிடுவதில் ஒரு சுய தணிக்கை முறையை இயல்பாகக் கொண்டு வந்துவிடுகிறது.

இராக்கில் சுயேச்சையாகச் செய்தி சேகரிக்கும் பிரான்சைச் சேர்ந்த மரியாதைக்குரிய நிருபர் ஃபிலிப் ரேச்சோட் (Philip Rechot) கூறுகிறார்: ''இ.ப.க்கள் அனைவரும் சுயதணிக்கையிலும், கட்டுப்பாட்டுடன் பேசுவதிலும் விசுவாசமாக இருக்கிறார்கள். அவர்கள் எந்தச் செய்தியையும், எந்தக் கண்ணோட்டத்திலும் கூறினாலும் கூட அது ஆங்கில - அமெரிக்க நிலையிலிருந்தே வரும். தங்கள் நாடுகளின் அரசியல் திசை வழியில், இராணுவத்துருப்புக்களுடன் சேர்ந்து அணிவகுக்கும் இவர்களைத் தகவல் தொடர்பின் துருப்புக்கள் எனலாம். ஆங்கில - அமெரிக்க நலனை காப்பாற்றுவதைக் கடமையாக நினைக்கும் இவர்கள் வாயிலிருந்து அதற்கு மாறாக எதுவும் வராது.''

இ.ப.க்கள் துருப்புக்களுடன் எப்போதும் இருப்பதினாலேயே 24 மணிநேரமும் செய்தி அனுப்புவது தேவையாகிறது. இது குறித்து ஆரம்பத்தில் அமெரிக்க - ஆங்கில இராணுவ அதிகாரிகள் குறைபட்டுக் கொண்டனர். ஏனெனில் போர் குறித்த தவறான கதைகளை உலவவிடும் இராணுவத் தலைமையகத்தின் அலைவரிசையிலிருந்து இந்த 24 மணி நேர ஒளிபரப்பு தன்னையறியாமல் சில சமயம் விலகி விடுகிறது. எனவே தலைமையகத்தின் நிலைக்கு வெளியே போகாதபடி இ.ப.க்கள் எச்சரிக்கை செய்யப்பட்டார்கள். மற்றபடி தங்களுக்கு அளப்பரிய பலனை அளித்திருக்கும் இ.ப. முறையை மாற்றம் செய்யுமாறு அமெரிக்கா கோரவில்லை.

இராணுவம் அனுமதிப்பதைத்தான் அறிக்கையாகத் தருகிறோம் என்பதை சில இ.ப.க்கள் விளக்கியிருக்கிறார்கள். பி.பி.சியின் இ.ப. நிருபர் ரிச்சர்டு கெயிஸ் ஃபோர்டு (Richard Gaisford) கூறுகிறார்: ''நாங்கள் கேட்ட செய்திகளைத் தொகுக்கும்போதே அதற்கு மாறான தகவல்கள் முகாமில் உலவுகின்றன. அது குறித்துத் துருப்புக்களிடம் சோதித்தறிந்தால், அவர்கள் நிருபர்களுக்குப் பொறுப்பான காப்டனிடம் கேட்கிறார்கள். காப்டனுக்கும் சந்தேகமிருந்தால் கர்னலிடம் கேட்கிறார். கர்னலோ இறுதியில் இராணுவத் தலைமையகத்திடம் விசாரிக்கிறார்.''

தணிக்கை முறை எப்படி இறுக்கமாகப் பின்பற்றப்படுகிறது என்பதற்கு இந்த ஒப்புதல் கூற்று ஒரு சான்று. பாக்தாத்தில் இராக் அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் செய்தியாளர்களின் பேச்சும் நடவடிக்கையும், கண்காணிக்கப்படுவதாக ஒவ்வொரு முறையும் கூறும் இங்கிலாந்துத் தொலைக்காட்சிகள், அதையே இ.ப.க்கள் பேசும் போது சொல்வதில்லை. உண்மையில் இராக் அரசின் கட்டுப்பாட்டை விட இ.ப.க்கள் மீதான தணிக்கையே மிகவும் அதிகம். மேலும் இ.ப.க்கள் இராணுவத்தின் அதிகாரக் கட்டமைப்பினுள் சங்கமித்திருப்பதை மேற்கண்ட பி.பி.சி. நிருபரின் கூற்று ஒப்புக் கொண்டிருக்கிறது.

போரின் இரண்டாவது வார இறுதியில் பல இ.ப.க்கள் தங்களின் செயற்கைக்கோள் தொலைபேசிகள் விளக்க முடியாத காரணங்களினால் முடக்கப்பட்டது எனக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இ.ப.க்களின் ஒவ்வொரு



படிப்பகம்

www.padippakam.com




A public communication centre in Baghdad hit during an air strike on March 27.

**தனது ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தி உலகு முழுவதும் பத்திரிகை அடிவருடிகளை இழுத்துச் சென்ற அமெரிக்கா, இராக்கிலிருந்து உண்மைச் செய்திகள் ஏதும் வெளியேறக்கூடாது என்பதற்காகக் குண்டுவீசித் தகர்த்த பாக்தாத் பொதுத் தொலைத்தொடர்புத் துறைக் கட்டிடம்.**

அசைவையும், அவர்களது நேர்காணல்கள், செய்தித் தொகுப்புக்கள் அனைத்தையும் இராணுவத்தின் பொது நல விவகாரத் துறை அதிகாரிகள் ஒரு வேட்டை நாயைப் போல கவனித்துக் கொண்டார்கள் என்பதை, அமெரிக்க இராணுவத்தின் 'ஆர் மி டைம்ஸ்' பத்திரிக்கை நிருபர் தெரிவிக்கிறார்.

இராக்கிலுள்ள ஒவ்வொரு இராணுவ டிவிஷனோடும் 40 முதல் 60 வரையிலான இ.ப.க்கள் செல்கின்றனர். ஒவ்வொரு டிவிஷனிலும் இ.ப.க்களைக் கவனிப்பதற்கு 6 அதிகாரிகள் உள்ளனர். இந்த அதிகாரிகள் இ.ப.க்கள் பற்றிய அறிக்கையை தோஹாவில் இருக்கும் அமெரிக்க மத்திய இராணுவத் தலைமையகத்திற்கு அனுப்புவார்கள். இங்கிருந்து புஷ்ஷின் வெள்ளை மாளிகைக்கும், லண்டனில் டோனி பிளேயரின் அலுவலகத்திற்கும் செய்திகள் அனுப்பப்பட்டு ஒருங்கிணைக்கப்படுகிறது. எனவே இராக்கிலிருக்கும் இ.ப.க்கள் மூலமாக வரும் எண்ணிறந்த தவறான செய்திகள் அனைத்தும் லண்டன், வாஷிங்டனிலிருந்து ஊட்டப்பட்டவையே.

ஒருநாளில் நல்ல செய்தியோ, கெட்ட செய்தியோ எது வந்தாலும் தோஹாவிலிருக்கும் ஜெனரல் டாமி பிராங்க்ஸின் அலுவலகத்தில் வேலை செய்வது சுலபமானது என்கிறார் ஒரு நிருபர். அங்கே போரின் நேர்மறைச் செய்திகள் வந்தால் இராணுவத்தின் செய்தித்துறைத் தொடர்பாளர்கள் வேட்கை கலந்த உற்சாகத்துடன் ஏற்கெனவே தயாரிக்கப்பட்ட கதைகளை 'இராக் நகரங்கள் விடுதலை செய்யப்பட்டு, மனிதாபிமான உதவிகள் செய்யப்படும்' என்பது போன்ற கதைகளை விவரிப்பார்கள். மாறாக, அமெரிக்க - ஆங்கிலத் துருப்புகளுக்குச் சற்று சேதம் ஏற்பட்டால், தங்கள் அலுவலகத்திற்குள் புகுந்து கொண்டு, லண்டன் - வாஷிங்டனிலிருந்த வரவேண்டிய உத்தரவிற்காகக் காத்திருப்பார்கள்.

இ.ப.க்களுக்கு இத்தனைச் சலுகைகள் இருக்கும்போது சுயேச்சையான பத்திரிக்கையாளர்களை மட்டும் அபாயகரமானவர்களென்று அமெரிக்கா கருதுகிறது. அப்படிச் சுயேச்சைப் பத்திரிக்கையாளர்கள் பலர் மிரட்டப்பட்டும், தாக்கப்பட்டும், கைது செய்யப்பட்டும், கொலை செய்யப்பட்டும் இருக்கிறார்கள். இதை உலகெங்கிலும் உள்ள பல்வேறு பத்திரிக்கையாளர்களின் சங்கங்கள் கண்டித்திருக்கின்றன.

ஐ.டி.என். எனும் செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு சுயேச்சையான நிருபர் கொல்லப்பட்ட போது பிரிட்டிஷ் பாதுகாப்புத்துறைச் செயலர் ஜியாஃப் ஹுன் (Geoth Hoon) கூறுகிறார், ''இத்தகைய விபத்து ஏதும் ஏற்படக்கூடாது என்பதற்காகவே இ.ப.க்களை நாங்களே அழைத்துச் செல்கிறோம். எங்கள் இராணுவத்துடன் வரவில்லை என்ற காரணத்திற்காகவே இந்த அருமையான ஐ.டி.என். நிருபர் கொல்லப்பட்டிருக்கிறார். வேகமாக நகரும் போர்க்களத் தருணங்களில் இத்தகைய (சுயேச்சையான) நிருபர்களைக் கவனித்துக் கொள்வது சாத்தியமில்லை. எனவே எங்களுடன் வரும் இ.ப.க்களை மட்டும் பாதுகாக்க முடியும் என்பதன் காரணம், பத்திரிக்கைகளுடன் நாங்கள் கொண்டிருக்கும் நல்லுறவுதான்.''

இங்கே ஒரு மாஃபியா தலைவனைப் போல அதிகாரச் செருக்குடன் உறுமும் ஜியாஃப் ஹுனின் (Geoff Hoon) செய்தி தெளிவானது: ''எங்களுடன் வாருங்கள், இ.ப.க்களாக இருங்கள், நாங்கள் சொல்வதைச் செய்தியாகத் தெரிவியுங்கள், இல்லையென்றால் உங்களுக்கு ஏற்படக்கூடிய மோசமான பின்விளைவுகளைச் சந்திக்கத் தயாராக இருங்கள்!''

---

குறிப்பு:

1. டேவிட் மில்லர் : இங்கிலாந்தில் உள்ள ஸ்காட்லாந்து எழுத்தாளர். இணையத் தளத்திலிருக்கும் அவரது கட்டுரை ஒன்றிலிருந்து சுருக்கித் தரப்பட்டுள்ளது.

2. அமெரிக்க இராணுவம் அழைத்துச் செல்லும் பத்திரிகையாளர்களை ஆங்கிலத்தில் எம்பெட்டட் (Embeded) என்று அழைக்கிறார்கள். பதிக்கப்பட்ட எனும் பொருளுடைய இச்சொல்லை தமிழில் நேரடியான பொருள் வேண்டும் என்பதற்காக இராணுவப் பத்திரிக்கையாளர்கள் என்று மாற்றியுள்ளோம்.

3. டொனால்டு ரம்ஸ்பீல்டு அமெரிக்க அதிபர் புஷ்ஷின் அமைச்சரவையிலிருக்கும் பாதுகாப்புத்துறைச் செயலர்.

4. ஜியாஃப் ஹுன் (Geoff Hoon) இங்கிலாந்து பிரதமர் டோனி பிளேயரின் அமைச்சரவையிலிருக்கும் பாதுகாப்புத்துறைச் செயலர்.

5. பி.பி.சி. - பிரிட்டிஷ் ப்ராட்காஸ்ட் நிறுவனம். இங்கிலாந்தில் அரசு உதவியுடன் சுயேச்சையாகச் செயல்படும் ஒரு பன்னாட்டுச் செய்தி நிறுவனம்.

6. தோஹா - அரேபியத் தீபகற்பத்திலிருக்கும் பஹ்ரைன் நாட்டின் தலைநகரம். அமெரிக்க - பிரிட்டிஷ் படைகளின் மத்தியத் தலைமையகம் இங்குதான் உள்ளது.

7. ஜெனரல் டாமி ப்ராங்ஸ் - அமெரிக்கத் தலைமையிலான ஆக்கிரமிப்பு நாட்டுப் படைகளின் கூட்டுத் தலைவர். ❒



படிப்பகம்

www.padippakam.com



# சிவிலியன் கொலைகளின் நேரடி சாட்சி!

## -லாரன் வான் டெர் ஸ்டாட்

**லாரன் வான் டெர் ஸ்டாட் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த புகைப்படக் கலைஞர். வளைகுடாப் போர், யூகோஸ்லாவியா, ஆப்கான், செசன்யா, ஆப்பிரிக்கா போன்ற பல இடங்களில் போர்க்களங்களில் புகைப்படச் செய்தியாளராகப் பணியாற்றியவர். ஈராக் மீதான ஆக்கிரமிப்புப் போரில் அமெரிக்க இராணுவத்துடன் சென்றவர். இவ்வாறு அமெரிக்க, பிரிட்டிஷ் இராணுவங்களால் அழைத்துச் செல்லப்பட்ட சுமார் 1000 நிருபர்கள் இராணுவத்தின் கூற்றை அப்படியே வழிமொழியும் கைக்கூலிகளாகவும் போர்வெறியர்களாகவுமே நடந்து கொண்டிருக்கின்றனர்.**

**ஆனால் அமெரிக்க இராணுவம் ஈராக் மக்களைக் கொன்று குவித்ததை நேரில் கண்ட லாரன் அதனை ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்தியிருக்கிறார். ல மாந்த் (Le monde) எனும் பிரபல பிரெஞ்சு நாளேட்டில் வெளி வந்த கட்டுரையின் சுருக்கம் வருமாறு:**

குவைத்திலிருந்து இராக் எல்லையில் கால்வைத்த உடனேயே, அதாவது சஃப்வான் எனும் ஊரிலேயே எல்லாம் தொடங்கிவிட்டது. அந்த ஊரின் முக்கியச் சாலைகளில் தென்பட்ட சதாமின் உருவப்படங்களை உள்ளூர் மக்களின் கண்முன்னாலேயே ஆங்காங்கே கிழிக்கத் தொடங்கினார்கள் அமெரிக்கச் சிப்பாய்கள். இவ்வாறு நடந்து கொள்வதன் மூலம் நாம் அந்த மக்களை அவமதிக்கிறோம் என்று இவர்களுக்குக் கொஞ்சம்கூட உறைக்கவில்லை. அப்படியே கிழிப்பதாக இருந்தாலும் அதைச் செய்ய வேண்டியவர்கள் அந்த மக்கள்தான் என்ற விசயமும் அவர்கள் மூளைக்கு எட்டவில்லை. அடுத்த 3 வாரங்களுக்குப் பின் பாக்தாத் நகரில் சதாமின் சிலையை வீழ்த்திய சிப்பாய்களும் இவர்கள்தான் என்பதை இங்கேயே சொல்லி வைக்கிறேன்.

முதலில் சில நாட்களுக்கு நானும் நியூயார்க் டைம்ஸ், நியூஸ்வீக் போன்ற பத்திரிகைகளின் நிருபர்களும் ஒரு வாகனத்தில் அமெரிக்க இராணுவத்துடன் கூடவே சென்றோம். 1500 மரைன்கள் (கடற்படை - தரைப்படை இரண்டிலும் பணியாற்றக்கூடிய சிப்பாய்கள்) கொண்ட அந்தப் படைப் பிரிவின் தலைவன் கர்னல் பிரையன் பி.மெக்காய். எங்களுக்குச் சோறும் தண்ணியும் கொடுத்தது இந்தப் படையினர்தான். எங்களை ஒரு மாதிரி சகித்துக் கொண்டார்கள். ''இந்தக் கோமாளிகள் கூட வருவதால் நமக்

அமெரிக்கக் கொலைவெறியர்களிடம் 3 பேரைப் பறிகொடுத்த ஒரு இராக் குடும்பம்



கொன்றும் தொல்லையில்லை'' என்று அந்த கர்னல் நினைத்திருக்கலாம்.

மரைன்கள் எனப்படுவோர் அமெரிக்க இராணுவத்தின் மதிப்பில்லாத ரகத்தைச் சேர்ந்தவர்கள். முறைகேடான கீழ்த்தரமான வேலைகளைச் செய்வதற்காகவே பயிற்றுவிக்கப்பட்டவர்கள். ''தேடு - கொலை செய்'' என்பதுதான் அவர்களுடைய செயல் முழக்கம். தங்களுடைய டாங்கிகளின் மீது 'அதி பயங்கர மிருகம்' 'கண்மூடித்தனமான கொலைகாரன்' என்றெல்லாம் பெயிண்டாலேயே எழுதி வைத்திருக்கிறார்கள் - அப்புறமென்ன?

போய்க் கொண்டேயிருக்கும்போது ''எட்டுக்கு அஞ்சு சார்'' என்று கத்துவான் ஒரு சிப்பாய். எட்டு தோட்டாக்கள் சுட்டேன். செத்தது 5 பேர்தான் என்பது இதன் பொருள். உடனே ''நீயெல்லாம் ஒரு ஆளு'' என்பதுபோல அந்தச் சிப்பாயை ஒரு பார்வை பார்ப்பான் கர்னல்.

ஏப்ரல் 6-ஆம் தேதி நாங்கள் பாக்தாத் நகரின் எல்லையிலிருந்தோம். எதிரே ஒரு முக்கியமான பாலம். அந்த வட்டாரம் முழுவதும் ஏராளமான குடியிருப்புகள். ''நாம் இருக்கும் திசையை நோக்கி யார் வந்தாலும் எது வந்தாலும் சுட்டுக் கொல்ல வேண்டும்'' என்று சிப்பாய்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. அன்றிரவு ஒரு பையன் பாலத்தில் நடந்து வந்தான்; சுட்டுக் கொல்லப்பட்டான்.

7-ஆம் தேதி காலை. பாலத்தைக் கடப்பது என முடிவு செய்தனர். கவச வண்டியின்மீது ஒரு பீரங்கிக் குண்டு வந்து விழுந்தது. இரண்டு அமெரிக்க சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். உடனே பதட்டம்; துருப்புகள் வெடவெடக்கத் தொடங்கினர்; ஒரே கூச்சல். ஆனால் பெரிய அபாயம் எதுவும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. எனவே படையணியின் முன்வரிசையுடன் நான் செல்லத் தொடங்கினேன்.

ஒரு சிறிய நீலநிற வேன் எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. எச்சரிக்கை செய்வதற்காக கசாமுசாவென சுட்டார்கள். அந்த வேன் மேலும் கொஞ்ச தூரம் வந்து பிறகு வந்த வழியே திரும்பி, பின்னர் சாலையோரம் ஒதுங்கி நிற்க முயன்றது. மறுகணமே துப்பாக்கிகள் சீறத் தொடங்கின. ''சுடாதீர்கள், சுடாதீர்கள்'' என்று கத்துவது ஒரு கணம் கேட்டது. பிறகு மயான அமைதி. வேனில் இருந்த இரு ஆண்களும் ஒரு பெண்ணும் சல்லடையாகத் துளைக்கப்பட்டு இறந்து கிடந்



படிப்பகம்

www.padippakam.com

தார்கள். ஆக, இவர்கள்தான் அந்த அபாயகரமான எதிரிகள்!

அடுத்து இன்னொரு வண்டி. மீண்டும் இதே காட்சிகள்; அத்தனைப் பயணிகளும் கொல்லப்பட்டார்கள். பிறகு ஒரு தள்ளாத கிழவர், குச்சியை ஊன்றியபடியே பாலத்தின் நடைபாதையில் மெதுவாக நடந்து வந்து கொண்டிருந்தார். அவரையும் விட்டு வைக்கவில்லை.




மீண்டும் இன்னொரு வேன். தோட்டாக்களால் பிய்த்தெறியப்பட்டு அந்த வேன் உருண்டது. அதற்குள்ளிருந்து இரண்டு பெண்களும் ஒரு குழந்தையும் மெல்ல எழுந்து வேனுக்குப் பின்னால் பயந்து ஒடுங்கினார்கள். அவர்கள் உயிர்தப்பிய அதிசயத்தை எண்ணி நான் வியந்து கொண்டிருக்கும்போதே, டாங்கிலிருந்து சீறிப்பாய்ந்த ஒரு குண்டு அவர்களையும் அந்த வண்டியையும் குப்பையைப் போலப் பிய்த்துப் பறக்கவிட்டது.

இரண்டே நாட்களில் 15 பேர் இப்படிக் கொல்லப்பட்டதை என் கண்களால் பார்த்தேன். எல்லோரும் நிராயுதபாணிகளான மக்கள். போர் என்றாலே வெறுக்கத்தக்கது தான். நான் பல போர்களைப் பார்த்துப் புரிந்து கொண்ட உண்மை இது. எல்லாப் போர்களிலும் முதல் பலி சாதாரண மக்கள்தான். இருந்தாலும், இங்கே நான் கண்டதோ வெறித்தனம்.

மிக மோசமான சூழ்நிலையிலும் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்ட ஒரே ஒரு சிப்பாயைத்தான் நான் கண்டேன். அவன் பெயர் டௌக். எதிரில் மக்கள் வரும்போது இவன் மட்டும்தான் முன்னெச்சரிக்கை செய்ய வானத்தில் சுட்டான். 10 உயிர்களையும் காப்பாற்றினான். வெறுத்துப் போன சிப்பாய்கள் சிலர் "மக்களைச் சுட்டுப் பொசுக்குவதற்கா அங்கிருந்து வந்தோம்? நாங்கள் இதை எதிர்பார்க்கவில்லை" என்று புலம்பினார்கள்.

"அவர்கள் மக்களைப் பயன்படுத்தித்தான் நம்மைக் கொல்கிறார்கள். இராக் சிப்பாய்கள் பலர் சீருடை அணியாமல் மக்கள் போல வருகிறார்கள். ஆம்புலன்சில் ஏறி வந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்துகிறார்கள்" என்று அந்தச் சிப்பாய்களின் வாயை அடைத்தான் கர்னல் மெக்காய்.

பாக்தாத் நகருக்குள் நுழைந்த உடனேயே மெக்காய் படையை விரட்டத் தொடங்கினான். வீடு வீடாகச் சோதனை போடுவதற்கெல்லாம் அவர்களுக்கு நேரமில்லை. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் 'சொர்க்கத்தை' எட்டிப் பிடிக்க விரும்பினான் மெக்காய். சதாம் சிலையை வந்தடைந்தவுடன் அவர்களது பயணம் முடிந்தது. சிலையை வீழ்த்தினார்கள். அப்போது கூடியிருந்தவர்களில் பெரும்பாலோர் பத்திரிக்கையாளர்கள் - பாக்தாத் நகர மக்களல்ல. ❑

## அமெரிக்க கருத்துச் சுதந்திரம்: கிலோ என்ன விலை?

அமெரிக்காவின் மேற்கு வர்ஜீனியா மாநிலத்தில் இருக்கும் நகரம் சார்லஸ்டன். இந்நகரைச் சேர்ந்த 15 வயது கேத்தி சியர்ரா (Katie Sierra) எனும் மாணவி. ஆப்கான் மீதான அமெரிக்க ஆக்கிரமிப்பை எதிர்த்துத் தனது பள்ளியில் ஒரு சங்கம் கட்ட முயல்கிறாள். மேலும் தனது சட்டையில், "கொல்லப்படும் ஆப்கான் குழந்தைகளைத் தொலைக்காட்சியில் பார்க்கும் போது, நமது தேசத்தின் பாதுகாப்பு குறித்த புதிய நம்பிக்கை பிறக்கிறது. கடவுள் நம்மை ஆசீர்வதிக்கட்டும்," எனும் நெற்றியடி முழக்கத்தையும் பொறித்துப் பள்ளியில் பிரச்சாரம் செய்கிறாள். ஆனால் பள்ளி நிர்வாகமோ இரண்டு செயல்களையும் தடை செய்கிறது. தொடர்ந்து அந்தச் சட்டையை அணிந்து செல்லும் சியர்ராவை பள்ளி முதல்வர் பள்ளியை விட்டே நீக்குகிறார். இதை எதிர்த்து மாவட்டக் கல்வி நிர்வாகத்திடம் முறையீடு செய்கிறாள் சியர்ரா.

அதுவோ முதல்வரின் நடவடிக்கையை நியாயப்படுத்தி, "இத்தகைய கருத்துக்களிடமிருந்து பள்ளியின் சூழ்நிலையைப் பாதுகாக்கவேண்டும்" என்று வலியுறுத்துகிறது. இதை எதிர்த்த மாணவி ஒவ்வொரு நீதிமன்றமாய்ப் படையெடுக்கிறாள். நீதிதான் இன்றுவரை கிடைத்தபாடில்லை. உள்ளூர்ப் பத்திரிக்கைகளோ பள்ளி நாட்கள் கல்வி கற்பதற்குத்தானே ஒழிய அரசியல் பிரச்சாரத்தினால் சீர்குலைப்பதற்கல்ல என்று உபதேசிக்கின்றன.

சென்ற வருடக் கதை இதுவென்றால், சென்ற நூற்றாண்டின் அமெரிக்க கருத்துச் சுதந்திரக் கதையும் இப்படித்தான். முதல்உலகப் போரில் அமரிக்கா உள்ளிட்ட ஏகாதிபத்தியங்களின் போரை எதிர்த்தும், சோவியத் யூனியனை ஆதரித்தும் பேசிய அமெரிக்க சோசலிஸ்டு கட்சியைச் சேர்ந்த யூஜின் டேப்ஸ் (Eugene Debs) என்ற போராளிக்குக் கிடைத்த 'பரிசு' 10 ஆண்டுச் சிறைத்தண்டனை. இரண்டாம் உலகப் போரின் போது சோவியத் யூனியனை ஆதரித்த சார்லி சாப்ளினை 'கம்யூனிஸ்ட் ஆதரவாளன்' என முத்திரை குத்தித் தொடுக்கப்பட்ட வழக்கு மட்டும் பத்தாண்டுகள் நடைபெற்றது. இறுதியில் சாப்ளின் அமெரிக்காவை விட்டே வெளியேறினார். 1950-களில் சோவியத் நாட்டை எதிர்க்கும் அமெரிக்கப் போரை ஆதரிக்க முடியாது என்று முழங்கிய அமெரிக்காவின் மகத்தான மக்கள் கலைஞன் பால் ராப்சனை பத்தாண்டுகளுக்கு எந்த வேலையும் செய்ய விடாமல் முடக்கியது அமெரிக்க அரசு.


60-களில் நடந்த வியத்நாம் போர் எதிர்ப்பு இயக்கத்தின்போதும் பலர் கொல்லப்பட்டனர்; சிறையிலடைக்கப்பட்டனர். தற்போதைய ஈராக் ஆக்ரமிப்பை எதிர்த்து நடக்கும் போர் எதிர்ப்பு இயக்கமும் இத்தகைய அடக்குமுறைகளைச் சந்திக்காமல் இல்லை. நியூயார்க் நகரில் சுதந்திர தேவியின் சிலையை பிரம்மாண்டமாக வைத்திருக்கும் அமெரிக்காவில், உண்மையில் அமெரிக்க ஏகாதிபத்திய வெறியை எதிர்க்கும் போராளிகளை அடக்குமுறைக்குட்படுத்துவதுதான் பிரம்மாண்டமாக இருக்கிறது.


படிப்பகம்

www.padippakam.com



# போர் நிகழக் காரணம் என்ன?



## 1991: ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலின் பின்னணி

### வளைகுடாப் போரின் மொத்தச் செலவு

**2,00,000 கோடி ரூபாய்**

### செலவழித்தது யார்?

**வேறு யார், அமெரிக்க அரசுதான் செலவு செய்திருக்கும் என்று நீங்கள் கூறலாம்**

**2,00,000 கோடி ரூபாய்**

↙ இதில் 25% மட்டுமே அமெரிக்க அரசின் பணம் (50,000 கோடி ரூபாய்)

↘ மிகுதி 75% செலவு அரபு நாடுகள் அதிலும் குறிப்பாக குவைத் மற்றும் சவுதி அரேபிய அரசுகளின் பணம் (1,50,000 கோடி ரூபாய்)

### சரி, இவர்களுக்கு எங்கிருந்து வந்தது இந்தப் பணம்?

போருக்கு முன்னால் ஒரு பீப்பாய் எண்ணெய் விலை சுமார் ரூ. 750; போருக்குப் பின், அது சுமார் ரூ. 2100 ஆக உயர்ந்தது; இந்த விலை உயர்வினால் கிடைத்த கூடுதல் லாபம் 3,00,000 கோடி ரூபாய்

### இந்த லாபம் யாருக்குப் போனது?

அரபு நாடுகளில் ''பாதிக்குப் பாதி'' பங்கு போடும் சட்டம்தான் நடைமுறை; 50% அரசுக்கு; 50% பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு - அவற்றின் பிடியில்தான் எண்ணெய் வளம் இருக்கிறது. இப்போது புரிகிறதா, போர் செய்யப் பணம் எங்கிருந்து வருகிறது?

### எண்ணெய் விலை ஏற்றத்தின் மூலம் கூடுதல் லாபம்

**3,00,000 கோடி ரூபாய்**

↙ 1,50,000 கோடி ரூபாய் பன்னாட்டு எண்ணெய்க் கம்பெனிகளுக்கு

↘ மிகுதி 1,50,000 கோடி ரூபாய் அரபு அரசுகளுக்கு (குவைத் + சவுதி அரேபியா)

### எண்ணெய்க் கம்பெனிகள் யாருக்குச் சொந்தம்?

வளைகுடாவில், எண்ணெய் எடுப்பதும் விற்பதும் ஷெல், எஸ்ஸோ, டேம் ஆயில் போன்ற பன்னாட்டு நிறுவனங்களின் பிடியில்... அவை அத்தனையும் அமெரிக்கக் கம்பெனிகள்; அதில் 5 அமெரிக்க அரசின் கையில்.

**1,50,000 கோடி ரூபாய்**

↙ சுமார் 1,05,000 கோடி ரூபாய் அமெரிக்க அரசுக்கு

↘ சுமார் 45,000 கோடி ரூபாய் அமெரிக்க ஏகபோக முதலாளிகளுக்கு

### ஒரு சின்னக் கணக்கு போட்டுப் பார்க்கலாமா?

| | போர்ச் செலவுகள் | எண்ணெய் விலை ஏற்றத்தால் கிடைத்த லாபம் | லாபமா, நட்டமா? |
|---|---|---|---|
| அரபு நாடுகள் | 1,50,000 கோடி ரூபாய் | 1,50,000 கோடி ரூபாய் | ஏதுமில்லை |
| அமெரிக்க அரசாங்கம் | 50,000 கோடி ரூபாய் | 1,05,000 கோடி ரூபாய் | 55,000 கோடி ரூபாய் |
| அமெரிக்க ஏகபோக முதலாளிகள் | ஏதுமில்லை | 45,000 கோடி ரூபாய் | 45,000 கோடி ரூபாய் |






படிப்பகம்

www.padippakam.com

இப்போது எல்லாம் தெளிவாகி விட்டது. போரின் மூலமாக அமெரிக்கா பார்த்த லாபம் 1,00,000 கோடி ரூபாய்! சில ஆயிரம் பிணங்கள் விழுந்ததில் பல கோடிப் பணம். ''குவைத்தை விடுதலை செய்வோம்!'' என்று சொன்னதெல்லாம் சும்மா! அவர்கள் நாக்கைத் தொங்கப்போட்டு அலைந்ததெல்லாம் இந்தத் 'தேனுக்காக'த்தான்!

## விசயம் இத்தோடு முடியவில்லை

**1991 வளைகுடாப் போரின் செலவு யாருடைய சட்டைப் பையிலிருந்து போனது?**

↓

வேறு யார்?
பெட்ரோல், டீசல், மண்ணெண்ணெய் உபயோகிப்பவர்களின் பையிலிருந்துதான்

## இன்னுமா புரியவில்லை, போருக்குப் பணம் கொடுத்தது நாம் தான்!!!

## பொறுங்கள்... இன்னமும் விசயம் முடியவில்லை

**போருக்காகச் செலவழித்த ரூ. 2,00,000 கோடி எங்கே போய்ச் சேர்ந்தது?**

↓

## ஆயுதத் தளவாடத் தொழிலுக்கு - அத்தனையும் அமெரிக்க நிறுவனங்களே!

**ஆகவே...**

| | | |
|---|---|---|
| 1991 : | வளைகுடாப் போர் | - குவைத் விடுதலைக்காக அல்ல. |
| 2002 : | ஆப்கான் போர் | - பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கல்ல |
| 2003 : | ஈராக் போர் | - அம்மக்களின் சுதந்திரத்திற்காக அல்ல |

## இதுதான் உண்மை

போரின் பின்னணி புரியாத பாமரர்களுக்கு
இந்த உண்மையைச் சொல்லுங்கள்.
அறியாமை நம்மை அடிமைகளாக்கும்;
சிந்திப்பவர்கள்தான் போராட இயலும்.

## சிந்தியுங்கள்; போராடுங்கள்!

**நன்றி : எமர்ஜென்சி இணையதளம்**

# போர்க்களத்தில் கொலைசெய்யப்பட்ட இரு அமெரிக்கப் பத்திரிக்கையாளர்கள்: சில கசப்பான உண்மைகள்!

இராக் மீதான ஆக்கிரமிப்புப் போரில் அமெரிக்க இராணுவத்துடன் சென்றிருந்த இரு அமெரிக்கப் பத்திரிக்கையாளர்கள் கொல்லப்பட்டனர். 'அட்லாண்டிக் மன்த்லி' பத்திரிக்கையின் ஆசிரியர்களுள் ஒருவரும், 'வாஷிங்டன் போஸ்ட்' இதழில் கட்டுரை எழுதுபவருமாகிய மைக்கேல் கெல்லி, வயது 46, ஒரு வாகன விபத்தில் இறந்தார். என்.பி.சி. தொலைக்காட்சியைச் சேர்ந்த 39 வயது டேவிட் ப்ளூம் போர்க்களச் சண்டையில் உயிரிழந்தார். இருவரும் அமெரிக்க இராணுவத்தின் 3-வது காலாட்படைப் பிரிவுடன் செய்தி சேகரிக்கச் சென்றிருந்தார்கள். அமெரிக்காவில் இந்நிருபர்களுக்கு மேலோட்டமான புகழஞ்சலிகள் பல செலுத்தப்பட்டன. மேலும் இறந்தவர் மீதான அனுதாபமும், இறந்தவர்களின் தவறுகளைப் பேசக்கூடாது என்ற மரபும் நம்மைச் சூழ்ந்திருக்கிறது. இத்தகைய தவறான அனுதாப அலைகளைத் தூக்கி எறிந்துவிட்டு, இராக்கில் வரலாற்றுக் குற்றங்களை நடத்திக் கொண்டிருக்கும் அமெரிக்க இராணுவத்தையும், அதையே முன்நின்று விஷமப் பிரச்சாரம் செய்யும் அமெரிக்கச் செய்தி நிறுவனங்களையும் நாம் தெரிந்து கொள்ளவேண்டும்.

கேடியும், போர்வெறியனுமாகிய கெல்லியும், முட்டாளும் தன்னை முன்னிறுத்துபவனுமாகிய ப்ளூமும் எதற்காக ஈராக் சென்றார்கள்?

**மைக்கேல் கெல்லி**

ஏ.பி.சி. தொலைக்காட்சியின் 'காலை வணக்கம் அமெரிக்கா' நிகழ்ச்சியில் தனது பத்திரிகையாளர் வாழ்வைத் துவங்கிய கெல்லி, பின்பு பல பத்திரிக்கைகளில் பணியாற்றிவிட்டு இறுதியில் 'அட்லாண்டிக்' மாத இதழில் சேர்ந்தான். 91 வளைகுடாப் போரில் செய்தியாளராகப் பங்கு பெற்று, 'தியாகிகள் தினம்' எனும் நூலையும் எழுதியிருக்கிறான். அமெரிக்க ஏகதாபத்தியக் கொள்கையை எதிர்க்கும் தனிநபர், அமைப்பு, நாடு யாராக இருந்தாலும் அவர்களை அழிக்க வேண்டுமென ஊளையிடும் கும்பலின் தலைவனென்று கெல்லியைச் சொல்லலாம். 'மரியாதைக்குரிய' எழுத்தாளனாகப் போற்றப்படும் இவனுக்கு பிடித்த சொற்களில் ஒன்று ''கொலை''.

**கெல்லியின் கட்டுரையிலிருந்து சில எடுத்துக்காட்டுக்கள்:**

*"15.08.2001: இஸ்ரேல் மீது போர் தொடுத்திருக்கும் பாலஸ்தீனப் படைகளைப் பிடித்து, அழித்து, கொன்று, வெளியேற்றும் போது மட்டும்தான் இஸ்ரேல் இந்தப் போரில் வெல்ல முடியும்."*

*''தற்போதைய ஈராக் போரின்போது: 18.3.2003 'வேலையில் மாவீரர்கள்' எனும் தலைப்பில் பிரிகேடியர் ஜெனரல் ஆஸ்டின் தொகுப்பாகச் சொல்வதாவது'', நாங்கள் அவர்களைப் (ஈராக்கியர்கள்) பார்க்க முடியும், பார்ப்பவர்களைத் தாக்க முடியும், தாக்கிக் கொல்ல முடியும், மரணம் என்பது பேரழிவாக இருக்கும். எதுவும், யாரும் எங்களைத் தடுக்க முடியாது.''*

''இராக்கில் ஜனநாயகத்தை நிறுவவேண்டும் என கெல்லி ஒவ்வொரு முறையும் வலியுறுத்துவது இதுதான்: ''அமெரிக்க


படிப்பகம்

www.padippakam.com

எதிரிகளை இரக்கமின்றி அழிப்பதும், உலக விவகாரங்களில் மேலாதிக்கத்தை நிறுவுவதும்தான் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் அடிப்படை வழிகாட்டியாக இருக்க முடியும்.''



இராணுவத்துடன் இருந்த கெல்லி பத்திரிக்கையாளர் பணியைத் தாண்டி, அமெரிக்கா வெல்லவேண்டும் என்பதற்காகத்தான் பணியாற்றினான் என்று 'புகழுகிறார்' உடன் பணியாற்றிய ஒரு நிருபர். அதிபர் புஷ்ஷின் பத்திரிக்கையாளர் கூட்டத்திற்கு வடிகட்டி எடுக்கப்படும் வலதுசாரிப் பிற்போக்குப் பத்திரிக்கையாளர்களில் கெல்லியும் ஒருவன். அப்படி ஒரு சந்திப்பில் புஷ்ஷிடம் கெல்லி கேட்ட கேள்வி, ''இராக் போர் ஒரு நெருக்கடியைச் சந்திக்கும் போது அதை களையும் வழி ஏதும் இருக்கிறதா, ஏனெனில் ஒரு கடினமான இராணுவத் தாக்குதலை அமெரிக்கா மேற்கொள்ளக்கூடாது எனப் பலர் கருதுகிறார்களே?'' இக்கேள்வியின் பொருள் இதுதான்: ''பேரழிவு ஆயுதங்களைப் பயன்படுத்தி சதாம் ஹுசேன் அரசை அழிக்கும்போது எழும் மக்கள் கருத்தைச் சந்திக்க அரசு தயாராக இருக்கிறதா?''

இத்தகைய கொடூரமான மனநோயாளியான கெல்லியின் எழுத்துக்கள் அமெரிக்கச் சமூகத்தில் இடம்பெறுவது ஒரு சாபக்கேடன்றி வேறென்ன?

### டேவிட் ப்ளூம்

டேவிட் ப்ளூமின் கதை சற்று வித்தியாசமானது. மின்னிசோட்டா மாநிலத்தைச் சேர்ந்த ப்ளூம் 1993-இல் என்.பி.சி. தொலைக்காட்சியில் சேர்ந்து, 97-இல் வெள்ளை மாளிகையின் நிருபராகப் பணியாற்றினான். தற்போதைய போரில் தன்னுடைய பங்கு வேண்டும் என என்.பி.சி.யின் தலைவரிடம் விண்ணப்பித்து ஈராக் சென்றான். விஷயமே இல்லாமல் வளவளவென்று பேசுவதும், கேமராவில் அழகாகத் தோன்றும் முகமும் இவனுடைய திறமைகள். ஈராக் போரில் பயணிப்பதற்கென்றே ஒரு காரை வடிவமைத்து 'ப்ளூம் வாகனம்' என்று பெயரிட்டு ஒரு ரசனையுடன் கலந்து கொண்டான். இவனுடைய கார் இரவு நேரத்திலும், வேகமாகச் செல்லும் போதும் ஒளிபரப்பு செய்யக்கூடிய வசதியுடையது. அமெரிக்கப் படைகள் இராணுவ ரீதியாக எதைச் செய்ததோ அதையே இவனும் தொலைக்காட்சிகளில் செய்தான். கூடவே அமெரிக்கத் துருப்புக்களின் உணவு, பாலைவன வாழ்க்கைச் சிரமங்கள் போன்றவற்றையும் தொகுத்தளித்தான். மற்றபடி போரின் சாரத்தையோ, போர்க்கள உண்மைகளையோ மறந்தும் பேசாத இந்தக் கோமாளி இறந்து போனதில் எந்தப் பொருளுமில்லை.

●●●

இராக்கிலிருக்கும் அமெரிக்க பத்திரிக்கை நிருபர்கள் எவரும் போரின் அரசியல் - தார்மீக விசயங்களைக் கோடிட்டுக் கூட காட்டுவதில்லை. பொருளற்ற காட்சிகளைத் திரும்பத் திரும்ப ஒப்பித்த அவர்கள் இராக்கின் சமூக - வரலாற்றுச் சூழலைத் திட்டமிட்டு மறைத்தார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் கொலை செய்யப்படுவதை நேரில் கண்டும், ஒரு சமூகமே இரக்கமின்றி அழிக்கப்படுவதும் இவர்களிடையே எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. வியட்நாம் போருக்குப் பிறகு அமெரிக்கச் செய்தி நிறுவனங்கள் உருவாக்கியிருக்கும் தரத்தின் இரண்டு வகை மாதிரிகள்தான் கெல்லியும், ப்ளூமும். இவர்கள் அமெரிக்க அரசியல், இராணுவ, உளவுத்துறையை ஆதரிக்கும் வலதுசாரி பிற்போக்குக் கும்பலின் வாயாகச் செயல்படுபவர்கள்.

**நன்றி: டபிள்யூ.எஸ்.டபிள்யூ.எஸ் - இணையதளத்தில் டேவிட் வால்ஷ் எழுதிய ஆங்கிலக் கட்டுரையின் சுருக்கப்பட்ட வடிவம்)**

## உருக்குலைக்கப்பட்ட இராக் - ஒரு புகைப்படப்பதிவு

இராக்கில் அமெரிக்கா நடத்தியிருப்பது ஒரு ஆக்கிரமிப்பு. பன்னாட்டுச் செய்தி நிறுவனங்களோ அதைப் போர் என்றன. பாக்தாதின் குழந்தைகள் மருந்துகளின்றி துடித்துக் கொண்டிருந்த போது, சதாம் உசேனுக்கு பிரியாணி செய்த ஒருவரின் கதையை வெளியிட்டது குமுதம். அமெரிக்கப் பீரங்கிகளின் முனையிலேயே இராக் மக்கள் போர் எதிர்ப்பு முழக்கமிட்டபோது, இணையத்தளத்தின் பொருளற்ற போர் அரட்டைகளை ரசனையுடன் வெளியிட்டது விகடன்.

தெற்கு இராக்கின் சோதனைச் சாவடி ஒன்றில் பெண்களும், குழந்தைகளுமாக 10 பேர் அமெரிக்கக் கோழைகளால் கொல்லப்பட்டபோது, அமெரிக்கத் துருப்புக்கள் சிறுவர்களிடம் தண்ணீர் கொடுப்பதைக் காட்டுகிறது சி.என்.என். தொலைக்காட்சி. சதாம் சிலை உடைப்பு நாடகத்தை பல மணி நேரம் காட்டிய பி.பி.சி., சதாம் தெருவில் நடந்தபோது அது போலி சதாமா, உண்மையான சதாமா என்று ஆய்வு செய்கிறது.

இராக் மக்கள் இடிபாடுகளுக்கிடையே உறவினர்களின் பிணங்களைத் தேடிக் கொண்டிருக்கும்போது, அமெரிக்காவைத் தாஜா செய்து இராக்கின் மறுகட்டுமான ஒப்பந்தம் ஏதாவது பெறுமாறு இந்திய அரசை வலியுறுத்துகிறது இந்தியா டுடே பத்திரிக்கை.

அமெரிக்க விமானங்கள், ஏவுகணைகள், கப்பல்களின் பிரம்மாண்டத்தைக் கணினியின் வரைகலை கவர்ச்சியில் விளக்கிய செய்தி ஊடகங்கள், அந்தப் பேரழிவு ஆயுதங்கள் அழித்த, இரத்தமும் - சதையினாலும் ஆன இராக் மக்களை மறந்தும் காட்டவில்லை.

இந்த ஆக்கிரமிப்புப் போரில் நமது மூளைகளில் பதிக்கப்பட்ட தவறான காட்சிகளையும் படிமங்களையும் மாற்ற முயல்கிறது புதிய கலாச்சாரம். உருக்குலைக்கப்பட்ட இராக்கின் ஒரு சில காட்சிகளை இங்கே தருகிறோம்.


படிப்பகம்

www.padippakam.com





"இராக்கியர்கள்
எல்லோருமே
நோயாளிகள்.
எங்கள்
தாக்குதல்தான்
அவர்களுக்கு
கதிரியக்கச்
சிகிச்சை.

ஒரு இராக்கி
தே.... மவன்
என் கையில்
சிக்கட்டும்
அப்புறம் பார்"

- ரயான் டூப்பர்
ராணுவக் கார்போரல்
டைம்ஸ் நாளேட்டில்









படிப்பகம்


www.padippakam.com



"நகரத்தையே குண்டு வீசித் தகர்த்துவிட்டது போல உங்களுக்குத் தோன்றலாம்.

அது உண்மையல்ல. ராணுவ இலக்குகளை மட்டும்தான் தாக்கி இருக்கிறோம்".

- ரம்ஸ் பீல்டு
அமெரிக்கப் பாதுகாப்புத் துறைச் செயலர்



இடிபாடுகளுக்குள் உறவினர்களைத் தேடும் முதியவர்





www.padippakam.com







ராணுவ டாங்கியில் ஆபாசம்
ராணுவ முகாமில் ஜெபக் கூட்டம்



"இன்று அருமையான நாள். நிறைய பேரைக் கொன்றோம். கொஞ்சம் சிவிலியன்களையும் போட்டுத் தள்ளினோம்."

- எரிக் ஷ்ரும்ப்
அமெரிக்க ராணுவ அதிகாரி
நியூயார்க் டைம்ஸ்
மார்ச் - 29





படிப்பகம்

www.padippakam.com











"நான் என்ன செய்ய
வேண்டுமோ அதைச்
செய்தேன். அதில்
எனக்கொன்றும்
பெரிய பிரச்சினை
இல்லை. இருந்தாலும்
ஒரு சின்னக் குழந்தையைச்
சுட்டுக் கொல்லும்போது
கொஞ்சம்
ஒரு மாதிரியாகத்தான்
இருக்கிறது."

- நிக் பூக்ஸ், சிப்பாய்
ராய்ட்டர் செய்தி
ஏப்ரல் 8











படிப்பகம்

www.padippakam.com







"ரத்தம் தோய்ந்த
பாடப் புத்தகங்கள்,
சின்னஞ்சிறிய
செருப்புகள்,
செத்துக் கிடக்கும்
நாய்கள்,
ஆட்டுக் குட்டிகள்,
கோழிக் குஞ்சுகள்...

அருகே
எரிந்துகொண்டிருந்த
5 குழந்தைகள்."

*- நியூஸ் 24*
தென்னாப்பிரிக்கப் பத்திரிக்கை
*மார்ச் - 31*








படிப்பகம்

www.padippakam.com





"சதாம் உசேன்
கையால்
சாவதைவிட
நாமே
இராக் மக்களைக்
கொன்று
அதன் மூலம்
விடுதலை
வாங்கித்
தருவதுதான்
அவர்களுக்கு
நல்லது."

- மாடலைன்
ஆல்பிரைட்
முன்னாள் அமெரிக்க
வெளியுறவுத் துறை
செயலர்.



தனது குடும்ப உறுப்பினர்கள் 11 பேரையும் இழந்த பகத் ஹசன்





படிப்பகம்

www.padippakam.com







அமெரிக்க கைக்கூலி சலாபியின் எடுபிடி... சிலை இடிக்கும் இடத்தில்!






சிலையை வீழ்த்தியது மக்களல்ல, அமெரிக்க ராணுவம்.







"ஒரு ஹாலிவுட் கிளைமாக்ஸ் காட்சியைப் போல சதாம் சிலையை வீழ்த்தும் காட்சி ராணுவத்தால் ஏற்பாடு செய்யப்பட்டது. சலாபியின் ஆட்கள் மற்றும் பத்திரிகையாளர்களை கொண்ட 150 பேரை பிரம்மாண்டமாக டி.வியில் காட்டினர்.

அமெரிக்க டாங்கிகள் பாதுகாப்புக்கு நிற்க, ராணுவமே முன்னின்று சிலையை வீழ்த்தியது. பிறகு சலாபியின் ஆட்கள் சிலை மீது ஏறி நடனமாடினார்கள். பாக்தாத் மக்கள் யாரும் பங்கேற்காத இந்த மோசடி காட்சியைத்தான் "இராக் சுதந்திரத்தின்" அத்தாட்சியாக அன்றாடம் ஒளிபரப்புகின்றன, அமெரிக்க டி.விக்கள்!



படிப்பகம்

www.padippakam.com





ஆக்கிரமிப்புப்
போர்
முடிந்திருக்கலாம்,
அடிமைத்தனத்திற்கு
எதிரான
போர்
துவங்கிவிட்டது.





இராக்கின் மூலை
முடுக்குகளிலெல்லாம்
ஒலிக்கிறது
- "அமெரிக்காவே
வெளியேறு"
- என்ற முழக்கம்.

எங்கும்
கிளர்ச்சிகள்
துப்பாக்கிச்
சூடுகள்!

ஆம்...

# போர் இன்னும் முடியவில்லை...





படிப்பகம்

www.padippakam.com

இராக் வரலாறு

# வஞ்சகத்தின் வெற்றி வீரத்தின் தோல்வி!

பாக்தாத் நகர வீதிகளை ஆக்கிரமித்து நிற்கும் அமெரிக்க டாங்கிகளையும் கவச வண்டிகளையும் பார்த்துப் பெருமூச்செறிந்த ஒரு முதியவர் சொன்னார்: ''வரலாறு திரும்புகிறது; இதே வீதிகளில் 1917-இல் பிரிட்டிஷ் இராணுவம் இருந்தது; விரட்டினோம். இன்று அமெரிக்க இராணுவம். போராடுவோம்!''

எண்ணெய் வளத்தைக் கைப்பற்றுவதற்காக ஏகாதிபத்தியங்கள் நடத்திய ஆக்கிரமிப்பு, அதனைப் பங்கு போட்டுக் கொள்வதற்காக அவர்களுக்குள் நடந்த நாய்ச்சண்டை, ஏகாதிபத்தியங்களை விரட்டுவதற்காக அந்நாட்டு மக்கள் நடத்திய வீரஞ்செறிந்த போராட்டங்கள், அவற்றைக் காட்டிக் கொடுத்து துரோகமிழைத்த தலைவர்கள், போராட்டங்களைத் திசை திருப்புவதற்கு ஏகாதிபத்தியங்கள் கையாண்ட பிரித்தாளும் சூழ்ச்சி, அதில் அவர்கள் பெற்ற வெற்றி - இவையனைத்தும் இணைந்த துயரக்கதைதான் இராக்கின் ஒரு நூற்றாண்டு வரலாறு.

இராக் உள்ளிட்ட இன்றைய மத்தியக் கிழக்கு நாடுகளில் பெரும்பாலானவை பிரிட்டிஷ், பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களால் தங்களுடைய போர்த்தந்திர நலனுக்கு ஏற்ப 20-ம் நூற்றாண்டின் துவக்கத்தில் உருவாக்கப் பட்டவை.

இன்று இராக் என்றழைக்கப்படும் நிலப்பகுதி 16-ஆம் நூற்றாண்டு முதல் 1918 வரை துருக்கியின் ஆட்டோமான் பேரரசின் கீழ் இருந்தது. மோசூல், பாக்தாத், பாஸ்ரா என்ற மூன்று மாகாணங்களில் முறையே குர்து, சன்னி, ஷியா முசுலீம்கள் பெரும்பான்மையினராக இருந்தனர். ஆட்டோமான் பேரரசின் வீழ்ச்சியையும் தோல்வியையும் தொடர்ந்து பிரிட்டனும், பிரான்சும், ரசியாவும் மத்தியக் கிழக்கை ஆக்கிரமிக்கத் தொடங்கினர்.

1914 முதல் 1918 வரையிலான முதல் உலகப் போர், இராணுவத் தேவைகளுக்கு எண்ணெயின் அவசியத்தை ஏகாதிபத்தியங்களுக்கு உணர்த்தியது. எந்தெந்தப் பகுதியில் எண்ணெய் வளம் உள்ளதென்ற ஆய்வுகள் முற்றுப் பெறாத நிலையில் வளைகுடாவில் சாத்தியமான அளவு நிலப்பகுதிகளைத் தமது பிடியில் கொண்டு வருவதற்குப் போட்டியிட்டன ஏகாதிபத்தியங்கள்.

### 1917 - பிரிட்டனின் பிடியில் பாக்தாத்!

1917-இல் இராக்கை பிரிட்டன் கைப்பற்றியது. அன்று பாக்தாதைக் கைப்பற்றிய பிரிட்டிஷ் படையின் சிப்பாய்கள் அனைவரும் இந்தியர்கள் என்பதும், பிரிட்டிஷ் இராணுவத்திற்கு ஆள் சேர்த்துவிடும் 'புனிதப் பணியில்' அன்று காந்தி ஈடுபட்டிருந்தார் என்பதும் இங்கே நினைவு கூறத்தக்கது.

முதல் உலகப்போரின் முடிவில் இராக்கும் பாலஸ்தீனமும் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழும், சிரியாவும் லெபனானும் பிரெஞ்சு ஆதிக்கத்தின் கீழும் வந்தன. உலகப்போர் முடிந்ததும் இராக்கிற்குச் சுதந்திரம் தருவதாகக் கூறி ஏமாற்றிய பிரிட்டனுக்கு எதிராக இராக் முழுவதும் கொந்தளித்தது; ஆயுதப் போராட்டம் பரவியது.

இந்தப் போராட்டத்தின் உக்கிரத்தையும், அதைப் பிரிட்டன் எத்தகைய குரூரமான முறைகளில் ஒடுக்கியது என்பதனையும் அன்று அரசுச் செயலராக இருந்த (பின்னாளில் பிரதமர்) சர்ச்சிலின் ஒரு கூற்று நிரூபிக்கிறது: ''நாம் விமானத்திலிருந்து விஷவாயுக் குண்டுகளை வீசலாம். இந்த உத்தியைப் பயன்படுத்தும் பட்சத்தில் 4,000 பிரிட்டிஷ் துருப்புகள் மற்றும் 10,000 இந்தியத் துருப்புகளை வைத்தே மெசபடோமியாவைச் (அதாவது ஈராக்கை) சமாளித்து விடலாம்.''

### எண்ணெய் விலை! கிலோ ஒண்ணரை பைசா மன்னன் விலை 30 லட்சம்!

சர்ச்சில் கூறியது போன்ற ஒடுக்கு முறைகளைக் கொண்டும் ஈராக் மக்களின் போராட்டத்தை ஒடுக்க முடியவில்லை. எனவே தனது கைப்பாவையான அராபியர் ஒருவரை மன்னராக நியமிப்பதன் மூலம் மக்களைத் திசை திருப்ப முயன்றது பிரிட்டிஷ் அரசு. மெக்கா நகரைச் சேர்ந்த ஃபைசல் எனும் பணக்காரக் கைக்கூலியை அழைத்து வந்து இராக்கின் மன்னராக்கியது. மக்களோ இந்தப் பொம்மையாட்சியை நிராகரித்து முழுச் சுதந்திரம் கோரிப் போராடினர். போராட்டத் தலைவர்கள் நாடு கடத்தப்பட்டனர்.

கைக்கூலி மன்னனுக்கு 40,000 பவுண்டு (இன்றைய மதிப்பில் ரூ. 30 லட்சம்) லஞ்சமாகக் கொடுத்து, இராக்கின் எண்ணெய் வளம் முழுவதையும் எழுதி வாங்கியது பிரிட்டன். 2000 - வரை இராக்கின் எண்ணெய் வயல்களிலிருந்து பிரிட்டன் எடுக்கும் எண்ணெய்க்கு டன் ஒன்றுக்கு 4 ஷில்லிங்தான் (இன்றைய மதிப்பில் ரூ.15) விலை என்றது அந்த ஒப்பந்தம்.

வெறும் மணலைவிட மலிவான விலைக்கு எண்ணெயை அள்ளிச் செல்லும் இந்த அநீதியான ஒப்பந்

1930-இல் பிரிட்டிஷ் காலனியாதிக்கத்தை எதிர்த்துப் போராடிய சேக் முகமதுவும் அவரது படையினரும்




படிப்பகம்

www.padippakam.com



த்தைக் கண்டு இராக் மக்கள் கொதித்தார்கள். அமெரிக்க முதலாளிகளோ வேறு காரணத்திற்காக வயிறெரிந்தனர்.

உலகத்தைத் தமக்குள் பங்கு போட்டிருந்த இங்கிலாந்து, பிரான்சு, ஹாலந்து, ஜெர்மனி போன்ற ஏகாதிபத்தியங்களுக்குப் போட்டியாக அன்று வளர்ந்து கொண்டிருந்த அமெரிக்கா, இராக்கின் எண்ணெயிலும் பிரிட்டனிடம் பங்கு கேட்டு மிரட்டியது. உண்மையில் அமெரிக்காவுக்கு எண்ணெய் தேவைப்படவில்லை. உள்நாட்டு உற்பத்தியையே அது ஏற்றுமதி செய்து கொண்டிருந்தது. இராக்கில் எண்ணெய் உற்பத்தியை முடக்குவதன் மூலம் உலகச் சந்தையில் எண்ணெய் விலை இறங்காமல் தடுக்கவே இந்தத் தலையீடு.

எக்ஸான் - மொபில் ஆகிய அமெரிக்க எண்ணெய் நிறுவனங்கள் இராக்கின் எண்ணெயில் 23.75 சதவீதப் பங்கைப் பெற்றன. (இன்று இராக் எண்ணெயை உறிஞ்சவிருக்கும் நிறுவனங்களில் எக்ஸான் மொபில் மிக முக்கியமானது.) இராக்கின் எண்ணெயை உறிஞ்சுவதற்கு பிரிட்டன், பிரான்சு, ஹாலந்து, அமெரிக்கா ஆகியோர் கூட்டுச் சேர்ந்து தொடங்கிய நிறுவனத்திற்கு 'இராக் பெட்ரோலியம் கம்பெனி' என்று பெயரிட்டனர்.

இந்தச் செப்பிடு வித்தையைக் கண்டு ஏமாறும் நிலையில் இராக் மக்கள் இல்லை. தேசவிடுதலைப் போராட்டம் மேலும் தீவிரமடைந்தது. நிலைமையைச் சமாளிக்க 1932-இல் இராக்கிற்குச் சுதந்திரம் வழங்குவதாக அறிவித்தது பிரிட்டிஷ் அரசு. ஆனால் "பொதுப் பாதுகாப்பு ஒப்பந்தம்" என்ற பெயரில் தனது படைப்பிரிவுகளை இராக்கின் எல்லைப் பகுதிகளில் நிறுத்திக் கொண்டது.

**போலிச் சுதந்திரம்!**

ஏற்கெனவே பிரிட்டனால் நியமிக்கப்பட்ட ஃபைசல் மன்னனாக நீடித்தார். கூடுதலாக நூரி அஸ் சயீத் என்ற எடுபிடி பிரிட்டனால் பிரதமராக்கப் பட்டான். கேலிக்குரிய இந்த 'சுதந்திரமும்' அதிககாலம் நீடிக்கவில்லை.

1941-இல் இராக் படைவீரர்களும் தேசிய அரசியல் சக்திகளும் இணைந்து மன்னனைப் பதவி இறக்கினர். உடனே பிரிட்டிஷ் இராணுவம் நேரடியாகத் தலையிட்டு போராட்டத்தை ஒடுக்கி மன்னனையும் பிரதமரையும் மீண்டும் பதவியில் அமர்த்தியது. 1925 முதல் 1958 வரையிலான 34 ஆண்டுகளில் நூரி அஸ் சயீத் 14 முறை தூக்கியெறியப்பட்டு மீண்டும் மீண்டும் பிரிட்டனால் பதவியில் அமர்த்தப்பட்டிருக்கிறானென்றால் இராக் மக்களுடைய போராட்டத்தின் தீவிரத்தை இதிலிருந்தே நாம் உணர்ந்து கொள்ளலாம்.

> **"தன்னுடைய கடந்த காலச் சேவையைக் கணக்கில் கொண்டு அமெரிக்கா தன்னைக் கண்டுகொள்ளாது"**
>
> **- என்ற சதாமின் அசட்டுத்தனமான நம்பிக்கை குவைத் என்ற பொறியில் அவரைச் சிக்கவைத்தது.**



இரண்டாம் உலகப் போர் முடிந்த பின்னரும் பிரிட்டிஷ் இராணுவம் இராக்கை விட்டு வெளியேறுவதாக இல்லை. உலகெங்கும் தேச விடுதலைப் போராட்டங்கள் தீவிரமடைந்ததைப் போலவே இராக்கிலும் போராட்டம் தீவிரமடைந்தது. கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கும் பெருகத் தொடங்கியது. 1952-இல் நடைபெற்ற மாபெரும் மாணவர் எழுச்சி இராணுவத்தால் ஒடுக்கப்பட்டது. எல்லா அரசியல் கட்சிகளும் நசுக்கப்பட்டன.

**மகுடம் தரித்த மண்டைகளுக்கு மரணதண்டனை!**

மத்தியக் கிழக்கின் எல்லா நாடுகளிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு கொழுந்து விட்டெரிந்த காலம் அது. 1951-இல் அண்டை நாடான இரானில் மன்னராட்சி தூக்கியெறியப்பட்டது. **மொசாதே** என்பவரின் தலைமையில் அமைந்த தேசிய அரசு பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனத்தை நாட்டுடைமையாக்கியது. 1953-இல் மொசாதேயைக் கொலை செய்து மீண்டும் மன்னராட்சியை நிறுவியது சி.ஐ.ஏ.

எகிப்தில் ஆட்சிக்கு வந்த நாசர் சூயஸ் கால்வாயை நாட்டுடைமையாக்கினார். சோவியத் ஆதரவுடன் அமெரிக்காவையும் பிரிட்டனையும் எதிர்த்து நின்றார். 1953-இல் சவுதியிலும் இராக்கிலும் வெடித்த எண்ணெய்த் தொழிலாளர்கள் போராட்டத்தை ஒடுக்க அமெரிக்கா ஆயுதங்களை இறக்கியது. ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1957-இல் ஜோர்டானிலும், 1958-இல் லெபனானிலும் மக்கள் எழுச்சியை ஒடுக்க பிரிட்டனும் அமெரிக்காவும் நேரடியாகக் களத்தில் இறங்கின.

கம்யூனிஸ்டு இயக்கமும், தேசிய விடுதலை இயக்கமும் ஏகாதிபத்தியங்களின் பிடரியைப் பிடித்து உலுக்கிக் கொண்டிருந்த இந்தச் சூழலில் 1958-இல் இராக்கின் மன்னராட்சி தூக்கியெறியப்பட்டது.

**அப்துல் கரீம் காசிம்** என்ற இளம் இராணுவ அதிகாரியின் தலைமையில் இராணுவத்தின் ஒரு பிரிவும், தேசிய விடுதலைச் சக்திகளும் இராக் குடியரசைப் பிரகடனம் செய்தனர். கைக்கூலி மன்னன் பைசல், பிரதமர் நூரி அஸ் சையித் இருவருக்கும் உடனே மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

அடுத்த கணமே அமெரிக்க, பிரிட்டிஷ் படைகள் இராக்கை முற்றுகையிட்டன. தங்களது எண்ணெய் நிறுவனங்கள் மீது கை வைத்தால் இராக்கைத் தாக்குவோமென எச்சரித்தன. உடனே அத்தகையதொரு தாக்குதலை எதிர்கொள்ளவியலாத காசிம் "உங்கள் எண்ணெய் வயல்களில் தலையிட மாட்டோம்" என்று அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் வாக்குறுதி கொடுத்தார். இராக் மக்களோ எண்ணெய் வயல்களை உடனே நாட்டுடைமையாக்க வேண்டுமென அரசை நிர்ப்பந்தித்தனர்.

**எண்ணெய் வயல்கள் நாட்டுடைமை!**

ஒரு டன் (1000 கிலோ) எண்ணெய் 15 ரூபாய் என்ற விலையில் 1925-இல் போடப்பட்ட ஒப்பந்தம் பற்றி



படிப்பகம்

www.padippakam.com

ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தோம். எண்ணெய் ஏற்றுமதியை மட்டுமே நம்பியிருந்த இராக் அரசுக்கு இது மட்டும்தான் வருவாய். நிலத்தடியில் எண்ணெய் உள்ளதெனக் கண்டறியப் பட்ட இடங்கள் அனைத்துமே இராக் பெட்ரோலியம் கம்பெனிக்கு (அதாவது அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, ஹாலந்துக்கு) 2000 வரை எழுதித்தரப் பட்டு விட்டன.

இவ்வாறு எழுதி வாங்கிய நிலப் பகுதியில் 0.5 சதவீத இடத்தில் மட்டுமே இந்நிறுவனம் எண்ணெய் எடுத்து வந்தது. மீதமுள்ள நிலத்தைத் தரிசாகப் போட்டிருந்தது. இவ்வாறு எண்ணெய் உற்பத்தியை முடக்கி, பற்றாக்குறை ஏற்படுத்துவதன் மூலம் உலகச் சந்தையில் எண்ணெய் விலை குறையாமல் பார்த்துக் கொண்டது இந்நிறுவனம். மிகக் குறைவான எண்ணெய் உற்பத்தியில் கிடைத்த மிக அற்பமான ராயல்டி தொகை அரசின் நிதி நெருக்கடியை அதிகரித்தது. ஏகாதிபத்தியக் கைக்கூலியான மன்னராட்சி ஒழிந்தால் நாடு முன்னேறும் என்று நம்பிய மக்களின் ஏமாற்றமும் அதிகரித்தது.

''நீங்கள் எண்ணெய்க் கிணறு தோண்டுவதாக இல்லையென்றால் 60 சதவீத நிலப் பகுதிகளை அரசிடம் ஒப்படைத்து விடுங்கள்; நாங்களாவது எண்ணெய்க் கிணறு தோண்டுகிறோம்'' என்று அந்நிய நிறுவனங்களிடம் கோரினார் காசிம். பதிலடியாக ஏற்கெனவே எடுத்து வந்த எண்ணெயின் அளவையும் குறைத்து அரசை மேலும் நிதி நெருக்கடியில் தள்ளியது இராக் பெட்ரோலியம் கம்பெனி.

இனியும் சகிக்கவியலாது என்ற நிலையில் 1925 ஒப்பந்தத்தை ரத்து செய்வதாக அறிவித்தார் காசிம். சோவியத் அரசுடன் 1959-இல் புதிய ஒப்பந்தம் போட்டுக் கொண்டார். இராக் பெட்ரோலியம் கம்பெனி எண்ணெய் எடுக்கின்ற 0.5 சதவீத நிலம் போக 99.5 சதவீத நிலத்தில் எண்ணெய் எடுக்க இராக் தேசிய எண்ணெய் நிறுவனம் துவக்கப் படுவதாக 1963-இல் அறிவித்தார்.

**சி.ஐ.ஏ. சதி – காசிம் கொலை!**

இந்த அறிவிப்பை வெளியிட்ட நான்கே நாட்களில் காசிம் கொலை செய்யப்பட்டார். பாத் கட்சி மற்றும் இராணுவத்தின் ஒரு பிரிவு அதிகாரிகளை விலைக்கு வாங்கி சி.ஐ.ஏ. இந்தக் கொலையையும் ஆட்சிக் கவிழ்ப்பையும் நடத்தி முடித்தது.

**"வரலாறு திரும்புகிறது; இதே வீதிகளில் 1917-இல் பிரிட்டிஷ் இராணுவம் இருந்தது; விரட்டினோம். இன்று அமெரிக்க இராணுவம். போராடுவோம்!"**

***– பாக்தாத் நகர வீதியில் நிற்கும் பெரியவரின் பெருமூச்சில் தெறிக்கும் இரத்தத் திவலைகள்.***



சர்ச்சிலின் இரண்டாவது அவதாரம் டோனி பிளேயர்

பாத் கட்சியினருக்கும் சி.ஐ.ஏவுக்குமிடையே குவைத்தில் பல சந்திப்புகள் நடந்தனவென்றும், ஆட்சிக் கவிழ்ப்பு நடந்தவுடனே இராக்கில் கொலை செய்யப்படவேண்டிய கம்யூனிஸ்டுகளின் பட்டியலை இந்தக் கும்பலுக்கு சி.ஐ.ஏ. கொடுத்தது என்றும் ஜோர்டான் மன்னர் உசேன் ஒரு பேட்டியில் கூறுகிறார்.

ஆட்சிக் கவிழ்ப்புக்கு அமெரிக்க அரசு உடனே தனது ஆதரவைத் தெரிவித்தது. மத்தியக் கிழக்கு நாடுகளில் இருந்த கம்யூனிஸ்டு கட்சிகளிலேயே மிகவும் பெரியதான இராக் கம்யூனிஸ்டுக் கட்சியை ஒழித்துக் கட்டும் பணி உடனே தொடங்கியது. சி.ஐ.ஏ. கொடுத்த பட்டியலின்படி ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகளைப் படுகொலை செய்தது பாத் கட்சி.

ஆட்சிக்கு வந்த இந்தக் கும்பல் அமெரிக்காவின் ஆதரவைப் பெற்றிருந்த போதும் எண்ணெய் வயல்கள் எதையும் அமெரிக்க நிறுவனங்களுக்கு வழங்க அவர்களால் முடியவில்லை. மக்களின் மிகக் கடுமையான எதிர்ப்பைச் சந்திக்க வேண்டியிருக்கும் என்பது ஒரு காரணம். கூடுதலாக 1967-இல் அரபு நாடுகள் மீது இஸ்ரேல் தொடுத்த தாக்குதல் காரணமாக வளைகுடா முழுவதும் அமெரிக்க எதிர்ப்புணர்வு கொழுந்துவிட்டெரிந்தது. இந்த அரசியல் சூழ்நிலை எந்த அமெரிக்க ஆதரவு நடவடிக்கையையும் சாத்தியமற்றதாக்கியது.

1968-இல் இந்தக் கட்சிக்குள்ளேயே நடந்த ஆட்சிக் கவிழ்ப்பில் பாத் கட்சியின் அகமத் அசன் ஆட்சியைக் கைப்பற்றி அதிபரானார். 300 மில்லியன் டாலர் இழப்பீட்டுத் தொகை கொடுத்து இராக் பெட்ரோலியம் கம்பெனியை நாட்டுடைமையாக்கியது பாத் கட்சியின் ஆட்சி. பிரான்சு மற்றும் ரசியாவின் கூட்டுடன் பல புதிய எண்ணெய்க் கிணறுகள் தோண்டப் பட்டன. 1972 இல் இராக் - சோவியத் 15 ஆண்டு இராணுவ ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

**உலகெங்கும் அமெரிக்க எதிர்ப்பு அலை!**

1960-களின் பிற்பகுதி மற்றும் 70-களின் துவக்கக் காலம் என்பது உலகெங்கும் அமெரிக்க எதிர்ப்பு அலை ஓங்கி வீசிய காலம். வியத்நாம் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஐரோப்பிய - அமெரிக்க மக்களின் போராட்டம், சிலியில் செம்புச் சுரங்கங்களை நாட்டுடைமையாக்கிய அலெண்டேயைக் கொலை செய்த சி.ஐ.ஏ.வின் சதி அம்பலமானது, லிபியாவில் மன்னராட்சியைத் தூக்கியெறிந்து சோவியத் ஆதரவு கடாபி ஆட்சியைக் கைப்பற்றியது... என அடுக்கடுக்காக அமெரிக்காவும் மேற்குலக ஏகாதிபத்தியங்களும் தனிமைப் பட்டுக் கொண்டிருந்தன.

அராபிய நாடுகளுக்கெதிரான போரில் இஸ்ரேல் அடைந்த வெற்றியும் அதற்குக் காரணமாக இருந்த அமெரிக்காவின் ஆதரவும் வளைகுடாவில் அமெரிக்க எதிர்ப்பு அலையை ஓங்கி வீசச் செய்தது. பாலஸ்தீன மக்களின் ஆயுதப் போராட்டம் துவங்கியது. எண்ணெய் ஏற்றுமதி செய்யும் 'ஒபெக்' நாடுகள் விலையை உயர்த்தியதுடன் மேற்கு நாடுகளுக்கு எண்ணெய் விற்பதில்லை எனத் தடையும் விதித்தன.

பாத் கட்சி அரசின் நாட்டுடைமையாக்கும் நடவடிக்கைகளையும், சோவியத் சார்பு நிலையையும் இந்தப்


படிப்பகம்

www.padippakam.com


பின்புலத்தில் பார்க்க வேண்டும். நம் நாட்டில் அதே காலகட்டத்தில் இந்திரா காந்தி அறிமுகப்படுத்திய நாட்டுடைமையாக்கும் திட்டங்கள், அவசரநிலை ஆட்சி, இந்தோ - சோவியத் ஒப்பந்தம் ஆகியவை இங்கே ஒப்பிட்டு நினைவு கூறத்தக்கவை.

1970-களின் துவக்கத்தில் எண்ணெய் விலை பெருமளவு உயர்ந்ததன் காரணமாக இராக் அரசின் வருவாய் அதிகரித்தது.

வளைகுடா ஷேக்குகள் எண்ணெய் விலையை உயர்த்தியதால் அமெரிக்கா பொருளாதார ரீதியில் ஓரளவு பாதிக்கப்பட்டபோதிலும் அது குறித்து அமெரிக்க அரசு அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. எண்ணெய் விலை உயர்வால் கிடைத்த கூடுதல் லாபத்தை அமெரிக்க வங்கிகளிலும், நிறுவனங்களிலும்தான் அவர்கள் முதலீடு செய்தனர்.

ஆனால் இராக்கோ உள்நாட்டு விவசாயம், தொழில்துறையை முன்னேற்றுவது, சுயசார்பு என்ற திசையில் நகர்ந்தது. மக்கள் நலத்திட்டங்கள், சுகாதாரம் மற்றும் பெண் கல்வி ஆகிய துறைகளில் 1970-களில் இராக் வேகமாக முன்னேறத் தொடங்கியது. 99 சதவீத இராக் மக்கள் இசுலாமியர்களாக இருந்தபோதும் அரசு மதச்சார்பின்மையைக் கடைப்பிடித்தது. மத நிறுவனங்களின் சொத்துக்களை அரசுடைமை ஆக்கியது. நிலச்சீர்திருத்த நடவடிக்கைகள் ஆகியவை காரணமாக வளைகுடா ஷேக்குகள் மற்றும் மதத் தலைவர்களின் வெறுப்பை பாத் கட்சி சந்திக்க வேண்டியிருந்தது. எண்ணெய் தவிர மற்றெல்லாவற்றுக்கும் தன்னையே சார்ந்திருந்த வளைகுடா நாடுகளுக்கு மத்தியில் இராக் சுயசார்பை நோக்கி நகர்வதை அமெரிக்காவும் விரும்பவில்லை.

**சதாம் அதிபராகிறார் – போர் தொடங்குகிறது!**

பாத் கட்சியின் ஆட்சியில் துணை அதிபராக இருந்த சதாம் 1979-இல் அதிபராகப் பதவியேற்றார். அதே ஆண்டில் அண்டை நாடான இரானில் அமெரிக்காவின் விசுவாச ஏவல் நாயாக இருந்துவந்த மன்னன் ஷாவின் ஆட்சி தூக்கியெறியப்பட்டது.

இரானில் ஷியா மதத் தலைவரான கொமெய்னியின் தலைமையில் இசுலாமிய அரசு பிரகடனம் செய்யப்பட்டது. ஷா அரசு ஒழிந்தாலும் கம்யூனிஸ்டுகள் வந்துவிடக் கூடாது என்பதில் கடைசிவரை சி.ஐ.ஏ. கவனம் செலுத்தியது. இருப்பினும் கொமெய்னி அரசு அமெரிக்காவை எதிர்த்ததுடன்




வளைகுடா நாடுகள் அனைத்திலும் இசுலாமியப் புரட்சிக்கு அறைகூவல் விடுத்தது. குறிப்பாக 'இசுலாமிய விரோத இராக் அரசைத்' தூக்கியெறியுமாறு இராக்கின் பெரும்பான்மையினரான ஷியா முசுலீம்களைத் தூண்டியது; இராக் அரசை ஆத்திரமூட்டியது.

வளைகுடாவில் நிலவிய இந்தச் சூழலை அமெரிக்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது.

'ஷாத் அல் ஆரப்' என்ற நீர்வழி தொடர்பாக இரானுக்கும் இராக்குக்கும் இடையே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் உருவாக்கி வைத்துவிட்டுப் போன எல்லைப் பிரச்சினையை முன்வைத்து இரான் மீது படையெடுக்கும்படி சதாமைத் தூண்டியது அமெரிக்கா. 1975-இல் இதே பிரச்சினையில் ஷாவை ஆதரித்த அமெரிக்கா, 1980-இல் சதாமை ஆதரித்தது. சவூதி, குவைத் ஷேக்குகளோ கொமெய்னி பிராண்டு புரட்சி பரவினால் தங்கள் சொத்துக்கு நேரக்கூடிய அபாயத்தைப் புரிந்திருந்ததால் சதாமின் போர்ச் செலவுக்குப் பணம் கொடுக்கத் தயாராக இருந்தனர். உடனே இரான் மீது படையெடுத்தார் சதாம்.

1980 முதல் 1988 வரை நீடித்த இந்தப் போர் அமெரிக்காவின் பல நயவஞ்சகமான நோக்கங்களை உள்ளடக்கிய ஒரு பலநோக்குத் திட்டம். அதுவரை இராக்குடன் தூதரக உறவுகளைக் கூடத் துண்டித்திருந்த அமெரிக்க அரசு 1980-இல் சதாமுடன் ரகசியமாக உறவு ஏற்படுத்திக் கொண்டது.

**சதாமுக்கு அமெரிக்கா வழங்கிய பேரழிவு ஆயுதங்கள்!**

எண்ணெய் வயல்களை நாட்டுடைமை ஆக்கியது மற்றும் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை ஆதரித்ததன் காரணமாக ''பயங்கரவாதத்தைத் தூண்டும் நாடு'' என்று இராக் மீது குத்தியிருந்த முத்திரையை நீக்கி தூதரக உறவைப் புதுப்பித்தது அமெரிக்க அரசு. இரான் மீது வீசுவதற்கு ரசாயன ஆயுதங்கள், பயிர்களை அழிக்கும் மருந்துகள், உயிரியல் போர் ஆயுதங்கள், ஏவுகணைகள் மற்றும் விஷவாயுக் குண்டுகளை சதாமுக்கு சப்ளை செய்தது. 1986-இல் இரானிய கிராமங்கள் மீது சதாமின் இராணுவம் விஷவாயுக் குண்டுகளை வீசி ஆயிரக்கணக்கான மக்களைக் கொலை செய்ததைக் கண்டித்து உலக நாடுகள் ஐ.நா.வில் தீர்மானம் கொண்டுவந்தபோது, தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி அதை அமெரிக்கா முறியடித்தது. இறுதியாக, 1987,88-இல் இராக்குக்கு ஆதரவாக இரானியக் கப்பல்கள் மீது அமெரிக்காவே குண்டு வீசியது.

**நாடு இளைத்தது சர்வாதிகாரம் வலுத்தது!**

இந்த எட்டாண்டுப் போர் முடிவுக்கு வந்த போது இரண்டு தரப்பிலும் தலா 5 லட்சம் பேர் கொல்லப்பட்டிருந்தனர். இராக்குக்கு மட்டுமின்றி இரானுக்கும் அமெரிக்கா ஆயுதம் விற்றிருப்பது பின்னாளில் இரான்கேட் ஊழல் என அம்பலமானது. போரின் காரணமாக இராக் 80 பில்லியன் டாலர் (ரூ. 4 லட்சம் கோடி) கடன்பட்டது.

இரானின் பொருளாதாரமும் சீர்குலைந்தது. போரைச் சாக்காகக் கொண்டு உள்நாட்டில் எஞ்சியிருந்த கம்யூனிஸ்டுகளும் ஜனநாயகவாதிகளும் இரானிய முல்லாக்களால் வேட்டையாடப்பட்டனர். மதச் சர்வாதிகாரம் அங்கே உறுதியடைந்தது.

இராக்கில் சதாமின் பாத் (மறுமலர்ச்சி) கட்சியோ பிறக்கும்போதே முசோலினியின் பாசிசக் கட்சியை முன்மாதிரியாக அறிவித்துக் கொண்ட கட்சி. அது தேர்தல் மூலம் ஆட்சியிலமர்ந்த கட்சியுமில்லை. 1963-இல் ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்டுகளை வேட்டையாடியதைப் போலவே 1979-இல் சதாம் அதிபரானவுடன் செய்த முதல் வேலையும் கம்யூனிஸ்டுகளைக் கொன்றொழித்ததுதான். எட்டாண்டுப் போர் இராக் மக்கள் மீது சதாமின் சர்வாதிகாரம் மேலும் உறுதிப்படுத்துவதற்கே உதவியது.

**அமெரிக்கா வைத்த பொறி!**

கைக்கூலிச் சர்வாதிகாரிகளை உருவாக்குவது, அவர்களுக்கெதிராக


படிப்பகம்

www.padippakam.com






கிரிமினல் அப்பனும் கோமாளி பிள்ளையும்

உள்நாட்டு மக்களின் வெறுப்பு உச்சகட்டத்தை அடையும் போது தானே முன்னின்று ஜன நாயகம் - மனித உரிமைக்காகக் குரல் கொடுப்பது, அந்தக் கைக்கூலியைத் துரத்தி விட்டுப் புதிய கைக்கூலியை அமரவைப்பது என்ற அமெரிக்காவின் வழக்கமான தந்திரம் இராக்கிலும் வெற்றிபெற்றது.

பாத் கட்சிக் கொடுங்கோன்மையின் காரணமாக இராக் மக்கள் மீது திணிக்கப்பட்ட பீதி, இராக்கின் ஆயுத வலிமை அண்டை நாடுகளிடம் தோற்றுவித்த அச்சம் - இவையிரண்டையும் தனது வலிமைக்குச் சான்றாக எண்ணி இறுமாப்பு கொள்ளும் ஒரு முட்டாள் சர்வாதிகாரி எத்தகைய தவறுகளைச் செய்வானோ அதைச் செய்யத் தயாராக இருந்தார் சதாம். போர் தோற்றுவித்த கடனும் பொருளாதார நெருக்கடியும் அமெரிக்கா வைத்திருந்த பொறியை நோக்கி சதாமை நெட்டித் தள்ளின.

80 பில்லியன் கடனில் பாதியை குவைத்தும் சவுதி அரசும் கொடுத்திருந்ததால் கடனைத் தள்ளுபடி செய்யுமாறு அவர்களிடம் கோரினார் சதாம். அவ்வரசுகள் மறுத்தது. அதோடு நில்லாமல் தங்கள் எண்ணெய் உற்பத்தியைத் திடீரென்று அதிகரித்து உலகச் சந்தையில் எண்ணெய் விலையைச் சரிய வைத்தனர். (இதுவும் அமெரிக்காவின் சதித்திட்டம்தான்.) இதனால் இராக்கின் ஏற்றுமதி வருவாய் வீழ்ச்சியடைந்து நெருக்கடி மேலும் முற்றியது.

''இந்த விலைக்குறைப்பு என்பது இராக் மீது குவைத்தும், சவூதியும் தொடுத்திருக்கும் போர்'' என்று சதாம் பேசிய பிறகும், குவைத் எல்லையில் இராணுவத்தைக் குவித்தபிறகும் ஆக்கிரமிப்பைத் தடுக்கும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபடவில்லை.

''தன்னுடைய கடந்தகாலச் சேவையைக் கணக்கில் கொண்டு அமெரிக்கா தன்னைக் கண்டு கொள்ளாது'' என்ற சதாமின் அசட்டுத் தனமான நம்பிக்கை குவைத் என்ற பொறியில் அவரைச் சிக்கவைத்தது.

**மீண்டும் அமெரிக்கா!**

வளைகுடாவில் கால்பதிக்க இதை விட ஒரு பொன்னான வாய்ப்பை பொருத்தமான தருணத்தில் அமெரிக்காவுக்கு யாரும் வழங்கியிருக்க முடியாது. 70-களிலோ 80-களிலோ இருந்ததைப் போல அமெரிக்காவுக்குப் போட்டியாக ரசிய வல்லரசு இல்லை. மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் அமெரிக்காவை எதிர்த்து நிற்கும் வல்லமை இல்லை. வளைகுடாவில் நிரந்தரமான இராணுவத் தளத்தை அமைக்கவும், எண்ணெய் வளத்தைக் கட்டுப்படுத்தவும் முடியாமல் அமெரிக்காவைத் தடுத்துக் கொண்டிருந்த ஒரே சக்தி அராபிய மக்களின் எதிர்ப்பு மட்டும்தான்.

தனது நடவடிக்கை மூலம் அந்த எதிர்ப்பை முனை மழுங்கச் செய்ததுடன், அமெரிக்க இராணுவம் வளைகுடாவில் இறங்குவதற்கான ஒரு முகாந்திரத்தையும் ஏற்படுத்திக் கொடுத்தார் சதாம். அதன் பின்னர் அமெரிக்கா இராக் மீது தொடுத்த போர் 13 ஆண்டுகளாகத் தொடர்கிறது.

1991 போரில் கொல்லப்பட்ட இராக்கியர்கள் 2 லட்சம் பேர். அதன் பிறகு பொருளாதாரத் தடை என்ற பெயரிலும், நினைத்த போதெல்லாம் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களிலும் கொல்லப்பட்ட மக்கள் சுமார் 15 லட்சம். தற்போதைய போரில் காவு வாங்கப்பட்ட உயிர்கள் 'எத்தனை என்று இன்னும் எண்ணி முடியவில்லை.

❐●❐

''வரலாறு திரும்புகிறது'' என்று கூறும் அந்த பாக்தாத் பெரியவரின் பெருமூச்சில் ரத்தத் திவலைகள் தெறிக்கின்றன. விஷவாயுக் குண்டுகளை வீசி விடுதலைப் போராட்டத்தை நசுக்கிய ஏகாதிபத்திய வெறியன் சர்ச்சிலின் வாரிசு, இன்று சதாமின் விஷவாயுக் குண்டுகளைத் தேடிக் கண்டுபிடித்து இராக் மக்களுக்கு விடுதலை வழங்கப் போவதாகக் கூறுகிறது.

இதை நம்புவதற்கு ஒரு நாய் கூட இல்லை. எனினும் அமெரிக்க டாங்கிகளை மறுபடியும் பாக்தாத் வீதிகளுக்குக் கொண்டு வந்தது எது என்ற கேள்விக்கான விடையை நாம் இராக்கின் வரலாற்றிலிருந்து கண்டுபிடிக்க வேண்டும். சதாம் என்ற ஒரு வார்த்தையில் மட்டும் அதற்கான விடை இல்லை.

இராக்கின் இதயத்தைப் பிளந்து ரத்தம் குடித்த அமெரிக்க ஏவுகணைகளுக்குத் தளம் அமைத்துக் கொடுத்தவர்கள் குவைத், குவெட்டார், சவுதி ஷேக்குகள். அராபியர்கள் என்ற உணர்வோ, அவர்களே கூறிக்கொள்ளும் இசுலாமிய சகோரத்துவ உணர்வோ இல்லாமல் பன்றிகளைப் போல அவர்கள் நடந்து கொள்ளக் காரணமென்ன?

''மத்தியக் கிழக்கில் நம் இலட்சியம் - கம்யூனிஸ்டுகளை ஒழிப்பது, போலி கம்யூனிஸ்டுகளையும் ஒழிப்பது, எண்ணெய் மீது நம் கட்டுப்பாட்டை நிறுவுவது'' எனச் சென்ற நூற்றாண்டின் துவக்கத்தில் அறிவித்தான் ஒரு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதி.

கம்யூனிஸ்டுகளை ஒழிப்பதற்கு ஷேக்குகளும் மன்னர்களும் சதாம்களும் முல்லாக்களும் அமெரிக்காவுக்குத் தோள் கொடுத்தார்கள். அதற்கொரு கருவியாக இசுலாத்தைப் பயன்படுத்திக் கொள்ளவும் துணை நின்றார்கள். எண்ணெய்க் கிணறுகளில் தம் தனியுடைமையைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்ற வெறிதான் எல்லாப் பாதகங்களுக்கும் அவர்கள் துணை நிற்கக் காரணம்.

அமெரிக்க ஆதிக்கத்திற்கெதிராக இனி போராடவிருக்கும் அரபு நாடுகளின் மக்கள் ''எண்ணெய் வயல்கள் எமிருக்குச் சொந்தம்'' என்று முழங்கப் போவதில்லை ''எமக்குச் சொந்தம்'' என்றுதான் முழங்கப் போகிறார்கள்.

தற்போது கூடாரத்தை ஒட்டகம் ஆக்கிரமித்திருப்பது உண்மைதான்; அராபியன் வெளியே நிற்கிறான். இருப்பினும் அராபியன் வெல்வது உறுதி. ஏனென்றால் அவன் மனிதன். ஆக்கிரமித்திருக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியமோ ஒரு மிருகம். மிருகங்கள் மனிதனை வெல்லப்போவதில்லை.

❐ **சூரியன்**



படிப்பகம்

www.padippakam.com



# தோழர் பீட்டர் மறைவு:
# சாவிலிருந்து வாழ்வைக் கற்றுக்கொள்வோம்!



''வாழ்க்கை மனிதனுக்குத் தரப்பட்டதே அவன் எந்த நிலையில் இறக்க விரும்புகிறான் என்பதை முடிவு செய்து கொள்ளவே'' - என்று எழுதினான் ஒரு பின்லாந்துக் கவிஞன்.

ம.க.இ.க. தஞ்சைக் கிளையைச் சேர்ந்த தோழர் பீட்டர் மார்ச் - 27-ஆம் தேதி மறைந்து விட்டார். சாராய ரவுடிகளுக்கெதிரான போராட்டத்தில் அவர் கொலை செய்யப்பட்டுவிட்டார்.

புதிதாகக் குடியேறிய வாடகை வீட்டின் மொட்டை மாடியில் படுத்திருந்த தோழர் பீட்டரை ''யார் நீ'' என்று கேட்கிறான் திடீரென அங்கே தோன்றிய ஒரு ரவுடி; ''உயிர் மேல் ஆசையிருந்தால் ஓடி விடு'' என்று மிரட்டுகிறான். இந்த மிரட்டலுக்கு அஞ்சாமல் எதிர்த்து மோதினார் பீட்டர். ஏழெட்டு பேர் கொண்ட சாராய ரவுடிக் கும்பலால் தாக்கப்பட்டு மாடியிலிருந்து வீசியெறியப்பட்டு இறந்தார்.

'இந்த நிலையில்' இறக்கத்தான் பீட்டர் விரும்பியிருப்பாரா? நிச்சயமாக இல்லை. மக்கள் விடுதலை, புரட்சி என்ற லட்சியங்களுக்காக வாழும் புரட்சியாளர்கள் சொறிநாய்களால் கடிக்கப்பட்டு மரிப்பதை நிச்சயம் விரும்ப மாட்டார்கள்.

வாழ்தலின் உண்மையான பொருளை உணர்ந்தவர்களாதலால் மற்றெல்லோரைக் காட்டிலும் கம்யூனிஸ்டுகள் வாழ்க்கையை அதிகமாக நேசிக்கிறார்கள். நுகர்பொருட்களை ருசிப்பதே வாழ்க்கை என்று மயங்கும் அற்ப மனிதர்களின் மத்தியில், தன் வாழ்க்கையின் ஒவ்வொரு தருணத்தையும் கம்யூனிஸ்டுகள் ரசித்து வாழ்கிறார்கள்.

மனைவி, பிள்ளைகள், சுற்றம் போன்றோருக்கு அப்பால் மக்களின் விடுதலை என்ற லட்சியத்தை நேசிக்கும் தோழர்கள் மரணத்திற்கு அஞ்சுவதில்லை என்பது உண்மைதான். ஆனால் யாரும் மரணத்தை நேசிப்பதில்லை; வாழ்வைத் தான் நேசிக்கிறார்கள். எனவே ஒரு ரவுடியின் கையால் இறப்பதற்கு பீட்டர் நிச்சயம் விரும்பியிருக்க மாட்டார்.

செங்கொடி போர்த்தப்பட்ட அவரது உடல் ஆயிரக்கணக்கான தோழர்களின் கண்ணீரால் நனைந்த போது, அவரை அறிந்திராத மக்கள் சாலையின் இரு மருங்கிலும் நின்று அவரது உடலை அறிமுகம் செய்து கொண்ட போது, கோபம் கொண்ட தோழர்களின் முழக்கம் இறுதி ஊர்வலத்தின் மீது வெடித்துப் பரவியபோது... அந்தச் சில கணங்கள் மட்டும் அவரது புலன்கள் இயங்கியிருக்குமானால் ''இந்த நிலையில்தான் நான் இறக்க விரும்பினேன் தோழர்களே'' என்று அவரது உதடுகள் முணுமுணுத்திருக்கக் கூடும்.

முடிவற்ற தீக்குகையாய், எரியூட்டும் எந்திரம் அவரது உடலை உள்ளிழுத்துக் கொண்ட அந்தத் தருணத்தில், துயரத்தின் அறிய முடியாத வேதனை நம் சிந்தனையை வெறுமைக்குள் இழுத்த அந்தத் தருணத்தில், நம் அறிவு வேறொரு தளத்தில் இயங்குகிறது. ஒவ்வொருவரையும் தன்னுடைய சொந்த மரணம் குறித்துச் சிந்திக்கச் சொல்கிறது.

நம்முடைய மரணத்தை நாம் முடிவு செய்ய இயலுமா என்ன? அதன் தருணத்தை, சம்பவத்தை, சூழலை, வடிவத்தை நாம் முடிவு செய்வதில்லை. வாழ்வதை மட்டும்தான் நாம் முடிவு செய்கிறோம். ''கொல் அல்லது கொல்லப்படுவாய்'' என்ற எளிய சூத்திரத்தின் கீழ் துப்பாக்கி ஏந்திக் களத்தில் நிற்கும் போர்வீரனும் கூட வாழவே விரும்புகிறான்.

வாழ்க்கையின் பொருள் வாழ்வதில்தான் இருக்கிறதேயன்றிச் சாவதில் இல்லை. பகத்சிங் கூட வாழவே விரும்பியிருப்பான். ஆனால் வாழ்ந்து சாதிக்கக் கூடியதைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான அரசியல் பயனைத் தன் சாவு வழங்குமென்று ஆராய்ந்து தெளிந்துதான் அவன் மரணத்தைத் தெரிவு செய்தான். எனவே அது மரணமல்ல; உடலின்றித் தொடரும் வாழ்க்கையின் ஒரு உன்னதம்.

ஆராயவும் முடிவு செய்யவும் அவகாசமின்றி, புதிர்ப் போட்டியில் அகப்பட்ட மாணவனைப் போல 'வாழ்வா-சாவா' என்று நொடியில் முடிவு செய்ய வேண்டிய தருணங்களை பீட்டரைப் போலவே நாமும் வாழ்க்கையில் எதிர் கொள்ள நேரலாம். ஒரு உடையை அல்லது உணவைத் தெரிவு செய்ய வாழ்க்கை நமக்கு வழங்கும் அவகாசத்தைக் கூட அத்தகைய தருணங்களில் மரணம் நமக்கு வழங்குவதில்லை.

ஒரு சாராய ரவுடியின் கையால் சாவதைத் தோழர் பீட்டர் நிச்சயம் விரும்பியிருக்க மாட்டார்; அதே நேரத்தில் கேவலம் ஒரு ரவுடியிடம் உயிர்ப்பிச்சை கேட்டு வாழ்வதையும் அவர் விரும்பவில்லை. இந்த இடைவெளிதான் மரணம் நுழைந்த இடைவெளி.

இதுதான் அந்த இரக்கமற்ற தருணம். ''உயிர்மேல் ஆசையிருந்தால் ஓடி விடு'' என்று ஒரு கழிசடை உங்களை எச்சரிக்கும்போது மானவுணர்ச்சி முந்திக் கொள்கிறது. அது 'நான்' என்ற வெற்று அகந்தையல்ல. தான் கொண்ட கொள்கை, தன் வடிவில் நிற்கும் அமைப்பு, தனது விழுமியங்கள், தனது நேர்மை இவையனைத்தும் சேர்ந்து தோற்றுவிக்கும் தன் மதிப்பு! குடும்பம், பாசம், கவலைகள்... அனைத்துக்கும் புள்ளிக் கணக்குப் போட்டு ''மோதுவதா சரணடைவதா'' என ஒரே நொடியில் முடிவெடுக்கக் கோரும் தருணமது.

ஜீவமரணப் போராட்டத்திற்கு முந்தைய அந்தப் பதைபதைப்பான அறிவுக்குக் கீழ்ப்படாத தருணத்தில்தான் அறிவுபூர்வமாகச் சிந்தித்து ஆராய்ந்து எடுக்கத்தக்க ஒரு முடிவை, உள்ளுணர்வு தோற்றுவிக்கும் அனிச்சைச் செயலையொத்த வேகத்தில் எடுக்க வேண்டியிருக்கிறது.

அனிச்சைச் செயல்போல, குறி பார்க்காமலேயே இலக்கைச் சுட்டு வீழ்த்தும் வீரனின் திறமைக்குப் பின்னால் கடும் பயிற்சி இருப்பது எப்படி உண்மையோ அப்படித்தான் மரணத்தைத் தெரிவு செய்யும் ஒரு தோழனின் துணிவுக்குப் பின்னாலும் ஒரு வாழ்க்கை இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



தன் நலன் - பொது நலன், துணிவு - கோழைத்தனம், உழைப்பு - வாய்வீச்சு, அற்பத்தனம் - தியாகம், அகங்காரம் - பெருந்தன்மை.. என ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருந்து இயங்கும் எதிர்மறைகளுக்கு இடையிலான போராட்டம்தான் அவனது பண்பைச் செதுக்குகிறது. உணர்வைக் கடைந்து கூர்மையாக்குகிறது.

மக்கள் விடுதலைக்காகப் போராடும் முன்னணியாளர்கள் விடுதலையை அவர்களுக்குப் பரிமாற முடியாது. ''நாங்கள் தயார்'' என்று மக்கள் திரண்டு வந்து நம்மைத் தட்டி எழுப்பும் வரை காது குடைந்து கொண்டிருக்கவும் முடியாது. பொருத்தமான தருணங்களில் தன் செயலின் மூலம் அவன் மக்களுக்குத் திசை காட்ட வேண்டும்.

தன்னந்தனியாக எதிரிகளால் சுற்றி வளைக்கப்பட்ட அந்தத் தருணத்தில் ''எது வந்தாலும் எதிர்த்து நில்'' என்று தோழர் பீட்டரை உந்தித் தள்ளிய சக்தி அவரை உருவாக்கிய அரசியல்; அந்த அரசியலால் பட்டை தீட்டப்பட்ட அவரது ஆளுமை.

தனது வாழ்க்கை, தனது அற்பமான இழப்புகள், தனக்கு நேர்ந்த துன்பங்கள், அவமானங்கள் இவற்றைப் பற்றி எண்ணி எண்ணி, தன்னைப் பற்றிக் கழிவிரக்கம் கொள்வதற்கு மட்டுமே தனது மனச்சாட்சியைப் பயிற்றுவித்தவர்கள் இறந்து போன தோழரின் உற்றார் உறவினர்களுக்கு ஆறுதல் கூறலாம்; அனுதாபம் காட்டலாம். ஆனால் தியாகம் செய்தவனின் துயரை, அவன் மரணத்தைத் தெரிவு செய்த அந்த இரக்கமற்ற தருணத்தை அவர்களால் ஒருக்காலும் உணர முடியாது. தியாகத்தைப் போற்றுவது வேறு; உணர்வது வேறு. உணர்கின்ற மனிதனின் ஆளுமையில்தான் தியாகம் சலனத்தைத் தோற்றுவிக்கிறது.

தோழர் பீட்டரின் ஆளுமை - எளிமை, அரசு ஊழியராக, நடுத்தர வர்க்கமாக இருந்த போதும் ஒரு சாதாரணத் தொண்டனாக எல்லா வேலைகளையும் இயல்பாக ஏற்றுச் செய்யும் உழைக்கும் வர்க்கத்துக்கேயுரிய பண்பான ஆரவாரமில்லாத உழைப்பு; நடுத்தர வர்க்கத்தின் கோழைத்தனம்,

**தனது வாழ்க்கை, தனது அற்பமான இழப்புகள், தனக்கு நேர்ந்த துன்பங்கள், அவமானங்கள் இவற்றைப் பற்றி எண்ணி எண்ணி, தன்னைப் பற்றிக் கழிவிரக்கம் கொள்வதற்கு மட்டுமே தனது மனச்சாட்சியைப் பயிற்றுவித்தவர்கள் இறந்து போன தோழரின் உற்றார் உறவினர்களுக்கு ஆறுதல் கூறலாம்; அனுதாபம் காட்டலாம். ஆனால் தியாகம் செய்தவனின் துயரை, அவன் மரணத்தைத் தெரிவு செய்த அந்த இரக்கமற்ற தருணத்தை அவர்களால் ஒருக்காலும் உணர முடியாது. தியாகத்தைப் போற்றுவது வேறு; உணர்வது வேறு. உணர்கின்ற மனிதனின் ஆளுமையில்தான் தியாகம் சலனத்தைத் தோற்றுவிக்கிறது.**

பகட்டு, இரட்டை வேடம் போன்றவை மீது அவர் வெளியிடும் குறும்புத்தனமான எள்ளல்; 'உதவுகிறோம்' என்ற நினைப்பின் சாயல்கூட நெஞ்சில் இல்லாமல் சக தோழர்களுக்கு அவர் செய்யும் உதவி; அமைப்பையோ தோழர்களையோ இழிவுபடுத்துவோர் மீது அவர் வெளிப்படுத்தும் முரட்டுத்தனமான கோபம்; அப்புறம் மகிழ்ச்சி, சிரிப்பு... இதுதான் தோழர் பீட்டர்.

அவர் குறைகளில்லாத மனிதனல்ல; அவரது உயிரிழப்பு குறைகள் தோற்றுவித்த விபத்துமல்ல; அது நிறைகளின் ஒன்று கலப்பில் எடுத்த முடிவு.

''விடுதலையை, அரசியலறிவை, கலையை மேலிருந்து பொழிவதற்குப் படைக்கப்பட்டவன் நான்'' என்று கருதும் அகங்காரமோ, 'உயர்ந்த' நோக்கங்களுக்காக மட்டுமே பணயம் வைக்கும் தகுதி கொண்டது என் வாழ்க்கை'' என்று எண்ணும் மேட்டிமைத்தனமோ இயல்பிலேயே அவரிடம் இல்லை. வாழ்வில் சலுகை கோருபவர்களின் சிந்தனைதான் சாவிலும் சலுகை கோருகிறது.

சாதி ஒடுக்குமுறைக்கெதிராக, சாராய ரவுடிகளுக்கெதிராக, சமூக அநீதிகள் பலவற்றுக்கும் எதிராகப் போராடி உயிர்த்தியாகம் செய்யும் இளைஞர்கள் ஆயிரமாயிரம் பேர். அவர்களில் பலர் வெவ்வேறு இயக்கங்களைச் சேர்ந்தவர்கள். வேறு பலர் எந்த இயக்கத்தையும் சாராதவர்கள். இந்த உயிர்த்தியாகம் ஒவ்வொன்றுக்கும் நினைவுச் சின்னங்கள் எழுப்பப்படுவதில்லை. எனினும் இவர்கள்தான் நாம் உருவாக்க விரும்பும் புதிய சமுதாயத்தின் அடித்தளக் கற்கள். நாம் உருவாக்க விரும்பும் புதிய மனிதனின் ஆளுமையைச் செதுக்கி வடிவமைக்கும் உளிகள்.

போராட்டக் களத்தில் நிற்கும் தோழர்கள் அனைவர் மீதும் மரணத்தின் நிழல் படியத்தான் செய்கிறது. ஒரு ரஷிய இலக்கியம் குறிப்பிடுவது போல ''நாம் ஒன்றாகச் சேர்ந்து போராடுகிறோம்; ஆனால் தனித்தனியாகத்தான் சாகிறோம்.''

அப்படியொரு சூழ்நிலையில், வாழ்வதா அன்றிச் சாவதா என்று சுதந்திரமாகத் தெரிவு செய்து கொள்ள வாய்ப்பிருக்கும் ஒரு சூழ்நிலையில், மற்றவர்களின் எதிர்பார்ப்பு, கண்காணிப்பு போன்ற புறநிலைக் கட்டாயங்களற்ற தனிமையில், அந்த நள்ளிரவில் தோழர் பீட்டர் மரணத்தைத் தெரிவு செய்தார்.

''எப்படி வாழ்வது என்ற தெரிவும், எப்படிச் சாவது என்ற தெரிவும் வேறு வேறல்ல'' என்பதுதான் அவர் சொல்லாமல் சென்ற செய்தி. அவருடைய சாவிலிருந்து நாம் வாழ்வைக் கற்றுக் கொள்வோம்!

❑ **மருதையன்**


படிப்பகம்

www.padippakam.com

# ஓவியக் கண்காட்சி:
# கூரிய தூரிகைகளின் போர் முழக்கம்!

“உங்களிடம் தூரிகை இருக்குமானால், மக்களின் விடுதலைக்கான ஓவியங்களைத் தீட்டுங்கள். உங்களிடம் எழுதுகோல் இருக்குமானால், மக்களின் விடுதலைக்காகத் தொடர்ந்து எழுதுங்கள். உங்களிடம் பறை இருக்குமானால், மக்களின் விடுதலைக்காக இசைத்திடுங்கள். உங்களிடம் குரல் வளமிருக்குமானால், மக்களின் விடுதலைக்காகப் பாடுங்கள்.”

– தோழர். நீலிமா,
'நிஷாந்த்' வீதி நாடகக் குழு, தில்லி,
(ஓவியக் கண்காட்சியைத் திறந்து வைத்து ஆற்றிய உரையிலிருந்து)

மாநாட்டில் இடம்பெற்ற பல்வேறு நிகழ்வுகளில் எல்லோராலும் பாராட்டப்பட்டவற்றில் ஓவியக் கண்காட்சியும் ஒன்றாகும். லலித் கலா அகாதெமிகளின் பிரம்மாண்ட அறைகளுக்குள் சவங்களைப் போல அறையப்பட்டிருக்கும் ஓவியங்களுக்கு மாற்றாக, ஓவிய ரசனை மற்றும் அதனூடான கலை வளர்ச்சிக்கும் தடையாக, மேட்டுக்குடியினரை எதிர் நோக்கி நாடெங்கிலும் விரவிக் கிடக்கும் விற்பனைக் கூடங்களுக்கு மாற்றாக, மக்களின் அரசியல் உணர்வினைக் காட்சி ரீதியாகத் தட்டியெழுப்பும் ஓவியங்களை ம.க.இ.க.வின் ஓவியக் குழு உருவாக்கியிருந்தது.

இரு நாட்களும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருந்த உழைக்கும் மக்களும், இளைஞர்களும், அறிவுஜீவிகளும் எழுச்சியூட்டும் ஓவியங்களை ஒருங்கே கண்டு அனுபவம் பெற்றனர். கண்காட்சியையும், ஓவியங்களின் சிறப்பான வெளிப்பாட்டையும் பாராட்டிப் பதிவுகள் எழுதி வைத்தனர்.

கண்காட்சியின் பெரும்பாலான ஓவியங்கள், புதிய ஓவிய முறையாக உருவாகியிருக்கும் முப்பரிமாண மிகையுருவ ஓவிய முறையின் கீழ் (ANIME GENRE) வரையப்பட்டவை. இந்த ஓவிய முறையைச் சுருக்கமாக விளக்குவதெனில், இம்முறையானது மிகையுருவ ஓவிய முறையின் (CARTOON) நீட்சியாக, அதே வேளையில் அதனை விடவும் வடிவத்திற்கும், விவரங்களுக்கும் முக்கியத்துவமளிக்கும் முறையாக உருவாகியுள்ளது.

ஓவியங்களைக் காண்போரை முதன்மையாக ஈர்க்கக் கூடிய அம்சம் உழைக்கும் மக்கள் வரையப்பட்டிருக்கும் முறைதான். பறையடித்து நிற்கும் உழைப்பாளியும், திரிசூலத்திற்கெதிராகக் கேடயமேந்தி நிற்கும் போராளியும் கல்வி கற்கும் உரிமையிழந்த ஏழை மாணவனும், ஓட்டுப் பொறுக்கி எட்டப்பர்களை விரட்டியடிக்கும் மக்கள் படையும் உருவ வெளிப்பாட்டில் ஒரே முறையில் வரையப்பட்டிருக்கின்றனர். நிலத்தில் ஊன்றியிருக்கும் உறுதியான கால்களும், விவரங்களற்ற உருவ அமைப்பும், முகமும் கூடியவர்களாகப் படைக்கப்பட்டிருப்பது, தனிமனித நிலையிலிருந்து வர்க்க ரீதியிலான அடையாளப்படுத்தலின் வெளிப்பாடாக விளங்குகிறது. அதே வேளையில், முப்பரிமாண முறையிலான உருவ வெளிப்பாட்டின் மூலமாக உக்கிரமும், உணர்வும் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன.



இன்னொருபுறம், பார்ப்பன பயங்கரவாதிகளினதும், பன்னாட்டு நிறுவனங்களினதுமான தாக்குதல்களை விளக்கும் 'பசுவதைத் தடுப்பு முகாம்', 'இந்து மயானம்' 'நெசவாளர் நிலை' 'ரௌடி ஜெயாவும், கதியற்ற விவசாயியும்' போன்ற ஓவியங்களில் ஒடுக்கப்படும் மக்கள் முழுமையான விவரங்களுடன் கூடிய உருவத்தைப் பெற்றிருப்பதும், வலியையும் வேதனையையும் உணர்வுகளாக வெளிப்படுத்துவதும் பார்வையாளர்கள் உருவ ரீதியிலும் கூட உணர்வு பெறுவதற்கும், விளங்கிக் கொள்வதற்கும் வழி வகுக்கிறது.

பெரும்பாலான ஓவியங்களில் நுண்ணிய கோடுகள் விரவிக் கிடக்கின்றன. எந்தவொரு கோடும் ஓவிய வெளியை நிரப்புவதற்கான முயற்சியாகவின்றி, ஓவிய நேர்த்தியை, உருவச் செழுமையை அதிகரிக்கும் நோக்கிலேயே பயன்படுத்தப்பட்டிருப்பது தெளிவாகப் புலப்படுகிறது. கோடுகளின் செழுமை பல ஓவியங்களில் சிற்ப முறைக்கு நிகரான உழைப்புடனும், நேர்த்தியுடனும் வெளிப்படுகின்றன.

'மறுகாலனியாக்கத்தை நோக்கி', 'பிணக் களஞ்சியம்', 'எட்டப்பர்களை விரட்டியடிப்போம்', 'மோடியின் குளியலறை', 'மோடியின் அரியணை', 'பார்ப்பனிய சாரம்' போன்ற ஓவியங்கள் ஒளிப்பதிவுக் கருவிக்கு நிகரான முப்பரிமாண கோணங்களுடன் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவ்வகையில், உள்ளடக்கத்தின் மையப்பொருள் சிறப்பாக முன்னிறுத்தப்பட்டிருக்கிறது.

அப்துல்கலாமைத் தோலுரிக்கும் 'புதிய நீரோ' ஓவியமும், தஞ்சை மாவட்டத்தின் பட்டினிச் சாவுகளை எடுத்துரைக்கும் 'சோமாலியா, எத்தியோப்பியா, தஞ்சை' ஓவியமும் வடிவ ரீதியாகச் சற்று மாறுபட்டு நிற்கின்றன. முன்னையதில் குஜராத்திலிருந்து வெளிக் கிளம்பும் பெரு நெருப்பும், பின்னையதில் விவசாயியின் வயிற்றிலிருந்து எழும்பும் பெரு நெருப்பும் உருவ வரையறைகளற்று நிற எழுச்சியாக உருவாக்கப்பட்டிருக்கிற முறையில், அருபக் குறியீட்டையும், முப்பரிமாண மிகையுருவ ஓவிய முறையையும் இணைக்கும் ஓவியங்களாக விளங்குகின்றன. 'இந்து அரசியல் சட்டம், கல்வி காவிமயம்', 'இனி கல்வி சீமான்களுக்கே' ஆகிய ஓவியங்கள் குறிப்பிடத்தக்க வகையில் ஆழ்ந்த பொருளுடன் உருவாக்கப்பட்டிருந்தன. பல ஓவியங்களினது நிறச் சேர்க்கையும், நிற அமைதியும் உணர்வூட்டும் விதத்தில் செய்யப்பட்டிருந்தன.

தூரிகையின் ஆதிக்கமற்ற சுவரொட்டி முறை ஓவியங்களாக 'தேசியக் கொடியின் நிறமாற்றம்' ஓவியமும், 'புதிய உலக வரைபடம்' ஓவியமும் விளக்கின. அதே வேளையில் 'மண்டை ஓடுகள்', 'வெறி நாயின் வாயில்' போன்ற ஓவியங்கள் எளிமையான உள்ளடக்கத் தோடும், வடிவ நேர்த்தியுடனும் படைக்கப்


படிப்பகம்

www.padippakam.com

பட்டிருந்தன.

பல ஓவியங்களில் ஜெயலலிதாவின் முகமும், சங்கராச்சாரியின் முகமும் வரையப்பட்டிருக்கும் முறையில், மிகையுருவக் கிண்டல் வெளிப்பாடுகளைத் தாண்டி, கோரத்தை வெளிப்படுத்தும் 'உருவச் சிதைவு' கையாளப்பட்டிருக்கிறது. இம்முயற்சி மென்மேலும் வளர்ச்சியுற்று, இதனினும் கோரமாகச் சித்தரிப்பதற்கு வழிகோல வேண்டும். 'நெசவாளர் நிலை', 'இனி கல்வி சீமான்களுக்கே', 'கோக்கும், நிலத்தடி நீரும்' ஆகிய ஓவியங்களில் பயன்படுத்தப் பட்டிருக்கும் ஜெயா, வாஜ்பாய் குறியீடுகள் (ICONS) சிறப்பானவை. இது போன்ற குறியீட்டு முறை மென்மேலும் பயன்படுத்தப்படவேண்டும்.

அனைத்து ஓவியங்களிலும் குஜராத் குறித்த ஓவியங்கள்தான் அனைவர் மனத்தையும் தாக்கி நின்றன. குஜராத் குறித்த செய்தித் துணுக்குகளால் உருவான கொலாஜ் பாணியிலான 'மோடி - மீண்டுமொரு இட்லர்' ஓவியமும், முசுலீம் மக்களின் இரத்தத்தைக் கொண்டு ஆர்.எஸ்.எஸ். வெறியர்கள் மோடியைக் குளிப்பாட்டும் 'மோடியின் குளியலறை' ஓவியமும் மோடியின் கோர தாண்டவத்தை வெளிப்படுத்தின. 'வெறிநாயின் வாயில்', 'மண்டை ஓடுகள்' ஆகிய ஓவியங்கள் குறியீட்டு முறையில் குஜராத் இனப்படுகொலையை வெளிப்படுத்தின.



வயிற்றைக் கிழித்து, குழந்தையைக் குத்தி நிற்கும் திரிசூலமும், பாலியல் வன்முறைக்குள்ளாகிச் சிதைந்து அலறும் பெண்ணும் கூடிய 'கவுசர் பானு' ஓவியம் பார்ப்பன பயங்கரவாதிகளின் குரூர வெறியைக் கண் முன் நிறுத்தியது. 'மதீனாவின் மகள்' எனும் ஓவியம், குஜராத்தில் மதீனா எனும் பெண்மணியின் 14 வயது மகள் அவருடைய கண் முன்னிலையில் கொடூரமாகக் கும்பல் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டதை உள்ளடக்கமாகக் கொண்டிருந்தது. அறியாச் சிறுமியாய் அமர்ந்திருக்கும் பெண்ணின் ஆடையை உருவ முற்படும் திரிசூலம், ஆணி கொண்டு தடுத்து நிறுத்தப்பட்டிருக்கிறது. தடுத்து நிறுத்தும் ஆணியும், ஆடையாக ஒரு கறுப்புத் துணியும் ஓவியத்தில் பதிக்கப்பட்டிருந்தன. இத்தகைய 'பதிக்கும்' முறை சிறப்பான முன்னுதாரணமாகும்.



தாமிரவருணியில் சிந்திய இரத்தம், சேடப்பட்டியை விரட்டியடித்த செருப்பு... இன்னும் இது போன்று ஒடுக்குமுறைக்கும், மக்களின் எதிர்ப்புக் குரலுக்குமான அடையாளங்கள் அனைத்தும் ஓவிய வெளிகளில் நிலைநிறுத்தப்பட்டுப் பதிவு செய்யப்பட வேண்டும். 'மதீனாவின் மகள்' ஓவியத்தின் பின்புலமாகக் காவி இருளும், 'கவுசர்பானு' ஓவியத்தின் பின்புலமாகக் கரிய துயர இருளும் நிறைந்து நிற்பதானது, குஜராத்தின் நிராதரவான நிலையைப் புலப்படுத்துகிறது.

ம.க.இ.க. ஓவியக் குழுவின் ஓவியர்களுடைய ஓவியத் திறமையும், பல தோழர்களின் உள்ளடக்கப் பகிர்வும் இயைந்துதான் கண்காட்சிக்கான ஓவியங்கள் அனைத்தும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. கலையுலக மோதல்களின் 'தலையீடற்ற' கலையுணர்வின் 'சுதந்திரமான' வெளிப்பாடாக அன்றி, 'தலையீட்டுடன்' கூடிய வேலைப்பாணியில்தான் ஓவியர்கள் வரைந்துள்ளனர். ஆனால், அந்த ஓவியர்கள் உள்ளடக்கப் பகிர்வை தலையீடாக அன்றி, ஓவியங்களுடன் ஓவியரும் அரசியல் செழுமையும், கூர்மையும் பெறும் நிகழ்ச்சிப் போக்காகத்தான் உணர்ந்துள்ளனர். அதன் வழியே, உணர்வுபூர்வமான ஓவியங்களையும் உருவாக்கியுள்ளனர்.

கருத்துப் படங்களின் கிண்டல் தொனியைத் தாண்டி, வண்ண ஓவியங்களின் குறுகிய, முதலாளிய அழகியல் தேடல்களை உடைத்து, முதலாளிய மனக்குளிர்ச்சிக்கான அரசியலற்ற, பிழைப்புவாத உள்ளடக்கங்களை மறுத்து எழும்பும் இத்தகைய அரசியல் ஓவியங்கள்தான் மக்களின் ஓவியங்கள்! வர்க்கப் போருக்கான ஓவியங்கள்! இத்தகைய ஓவியங்களை வீடுகளில் வாங்கி வைப்போம். வீதிகளில் நிறுத்துவோம். ஆடைகளில் அணிந்து கொள்வோம். போராட்டங்களில் பதாகைகளாகக் கொண்டு செல்லுவோம். அருங்காட்சியகங்களுக்குள்ளும், அரங்கங்களுக்குள்ளும் அடைபட்டுக் கிடக்கும் ஓவியக் கலையை வீதிக்குக் கொணர்வோம்.

'இல்லை, இவையெல்லாம் பிரச்சாரம். இந்த ஓவியங்கள் பிரச்சார ஓவியங்கள்' என்று உளறும் கலை உபாசகர்களுக்கு வேண்டுமானால், 'என்னை வாங்கிக் கொள்' என்று நிற்கும் ஓவியத்தின் பிரச்சாரத்திற்கும், 'உண்மைகளை உள்வாங்கிக் கொள்' என்று எழும்பும் ஓவியத்தின் பிரச்சாரத்திற்குமான வேறுபாடு உறைக்காமல் போகலாம். நாம் மக்களுக்கான அரசியல் ஓவியங்களையும், ஓவியர்களையும், கொடுவாளாய் எதிரிகளைக் குத்தும் கூரிய தூரிகைகளையும் தொடர்ந்து உருவாக்குவோம்!

❑ அரசு


படிப்பகம்

www.padippakam.com

# காட் ஒப்பந்தம் நுழைந்தபோதுதான் அயோத்திப் பிரச்சினையும் தொடங்கியது.

## பேரா. சம்சுல் இசுலாம்

*"ஆர்.எஸ்.எஸ்: தேச பக்த வேடம் போடும் தேசத்துரோகிகள்" என்ற தலைப்பில் தில்லி பல்கலைக்கழகப் பேராசிரியரும், 'நிஷாந்த்' என்ற வீதி நாடகக் குழுவை இயக்கி வருபவருமான பேரா. சம்சுல் இசுலாம் உரையாற்றினார்.*

"மிகப் பெரும் வரலாறு கொண்ட மக்கள் மொழியான, பார்ப்பன மேலாதிக்கத்தை என்றும் எதிர்த்துவரும் உங்கள் தமிழ்மொழியில் என்னால் பேச இயலவில்லை" என்ற முன்னுரையோடு உரையைத் தொடங்கினார் பேராசிரியர்.

"இந்துத்துவா இந்துத்துவா என்று சொல்கிறார்கள். அதை நான் ஏற்பதில்லை; நீங்கள் மாநாட்டுக்குத் தலைப்பிட்டுள்ளீர்களே, அதுபோல பார்ப்பன இந்துமத வெறிப் பாசிசம் என்றே அதனைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**பகத்சிங் வழி சரியா, விடுதலைப் போராட்டத்தை விட்டே ஓடும்படி செய்த ஆர்.எஸ்.எஸ். வழி சரியா?**

**எதுதேச பக்தி? எது தேசத்துரோகம்?**

நான் ஒன்று கேட்க விரும்புகிறேன்: 'இந்துக்களுக்கு' ஆபத்தா? 'இந்து' மதத்துக்கு ஆபத்தா? கம்யூனிஸ்டுகளான நம்மைக் கேட்டால், 'இந்து' மக்களுக்குத்தான் ஆபத்து என்று சொல்வோம். அவர்களைப் பொறுத்தவரை பிரச்சனைகளிலிருந்து, வர்க்கப் போராட்டத்திலிருந்து மக்களைத் திசைதிருப்பிவிட ஒரு சாக்கு வேண்டும் - அது அயோத்தி கோயில் வடிவத்தில் தயாராக இருக்கிறது.



ஆகவே இந்துமதவெறி என்பது ஓர் அரசியல். இங்கே, 'இந்து'மதம் என்பது 'இந்து' ஆளும் வர்க்கங்களிடமும், பாகிஸ்தானில் இசுலாமிய மதவெறி முசுலீம் ஆளும் வர்க்கங்களிடமும் தஞ்சமாகியுள்ளன. வர்க்கப் போரை, மக்களிடையே நடக்கும் போராகவும், போராட்டங்களாகவும் அவர்கள் திருப்பி விடுகிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ்.ஸுக்கும் சுதந்திரப் போராட்டத்துக்கும் என்றும் எந்தச் சம்பந்தமும் இல்லை; அப்படிப் போராடித் தியாகம் செய்தவர்களையும் கேவலமாகவே பேசியது ஆர்.எஸ்.எஸ். நேற்று நீங்கள் நடத்திய பேரணியில் பகத்சிங், சுகதேவ், ராஜகுரு போன்ற புரட்சியாளர்களின் படங்களை உயர்த்திப்பிடித்து வந்தீர்கள். அந்த வீரர்களை "வழிகாட்டும் லட்சிய வீரர்களாக எடுத்துக் கொள்ள முடியாது" என்கிறான் கோல்வால்கர்.

டாக்டர்ஜி. ஹெட்கேவார் காலத்தில் நடந்த சம்பவத்தை மேற்கோள் காட்டிவிட்டு, கோல்வால்கர், ஏகாதிபத்திய எதிர்ப்புக்குத் துணிந்து வந்த அணிகளிடமும் சங்கத்தின் வேலை செய்தால் போதும் என்று தலைவர் யோசனை கூறியதைச் சிலாகித்து எழுதுகிறான். போராடத் துணியும் வேகத்தையும் தடுத்து அணை போட்டு தேசபக்தர்கள் உணர்வு குன்றித் தேய்ந்து செயலற்று, விடுதலைப் போராட்டத்தை விட்டே ஓடும்படி இவர்கள் செய்தார்கள். இப்போது சொல்லுங்கள், பகத்சிங் வழிசரியா, ஆர்.எஸ்.எஸ். வழி சரியா? எதுதேச பக்தி? எதுதேசத்துரோகம்?

முந்தைய தலைமுறைகளைக் கேட்டுப் பாருங்கள் – இந்த நாட்டுக்காகப் போராடிய பரம்பரையைக் கேட்டுப்பாருங்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமே அன்று இந்திய நாட்டின் மிகப்பெரும் எதிரி என்று சொல்வார்கள். ஆனால், கோல்வால்கர் என்ன சொன்னான் தெரியுமா? "மெலிந்தவனுக்கு அநீதி இழைத்து விட்டான் என்று வலியவனைத் தூற்றுவது வீண்வேலை. சிறிய மீனைப் பெரிய மீன் விழுங்கி விட்டால், பெரிய மீனைத் தூற்றுவது பைத்தியக்காரத்தனம். இயற்கை விதி, அது நல்லதோ, கெட்டதோ — எல்லாக் காலத்துக்கும் அதுவே சரி. அதையே அநீதி, அநீதி என்று தூற்றினால் அந்த விதி மாறி விடப் போகிறதா என்ன?"

அதாவது, ஏகாதிபத்தியம் நம்மைக் கொல்கிறது என்று கதறினால் 'அது இயற்கை விதி' என்கிறான் கோல்வால்கர்; கணவன் மனைவியை அடிக்கிறான் என்று சொன்னால் அது 'இயற்கை விதி!' கணவன் அடித்தால் மனைவி துடிப்பாள் அல்லவா? அந்தவலி முற்பிறவியில் அவள் செய்த பாவத்துக்கான தண்டனை. ஆக, அவன் அடித்தால் அது பாவக் கடனைக் கழிப்பதற்கே என்று அவள் பொறுத்துக் கொள்ள வேண்டும். இப்படிச் சொல்கிறது அவர்களின் சாமியார் சுவாமிராம் சுக்தாஸ் எழுதி கோரக்பூர் கீதாபிரஸ் வெளியிட்ட நூல். காரணம் கேட்டால், அதுவும் 'இயற்கை விதி' என்கிறார்கள். தலித் பெண்கள் மேல்சாதி, ஆதிக்கச்சாதிகளால் கற்பழிக்கப்படுகிறார்கள். அதுவும் அவர்கள் பார்வையில் 'இயற்கை விதி'. அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏழை நாடுகளைக் கொள்ள அடிப்பதோ, சுரண்டுவதோ, அதன் மீது பேரழிவுப்போர் நடத்துவதோ கூட 'இயற்கை விதி.'

1988 – 90 –ல் தான் காட் (GATT) வந்து கொண்டிருந்தது; உலகவர்த்தக நிறுவனம் (WTO), பன்னாட்டுக் கம்பெனிகள் (MNC) இந்நாட்டுக்குள் பெருமளவில் படைகளாக நுழைந்து கொண்டிருந்த நேரம் – அந்த நேரம் பார்த்து ஆர்.எஸ்.எஸ் கும்பல் இராமன் கோயில் பிரச்சினையைக் கையில் எடுத்தது; அமெரிக்காவும், பன்னாட்டுக் கம்பெனிகளும் பின்வாசல் வழியாக உள்ளே நுழைவதைவிட, நேருக்கு நேர் தலைவாசல் வழியாக இந்தியாவுக்கு உள்ளே வருவதையே ஆர்.எஸ்.எஸ் கும்பல் விரும்புகிறது. சாதி, மதரீதியாக நாம் சண்டை போட்டுப் பிரிந்துகிடப்போம் – அவர்கள் தலைவாசல் வழியே உள்ளே கம்பீரமாக வருவார்கள். இன்றுமட்டுமல்ல, சுதந்திரப் போராட்டக் காலத்திருந்து, இன்று உலகமயக்காலம் வரை அந்தக் கேடான சக்திகள் அதையே விரும்பினார்கள்.

ஆர்.எஸ்.எஸ். கும்பல் பாரம்பரியமாகவே இத்தகைய ஏகாதிபத்திய ஏஜெண்டுகள்தான். அப்படிப்பட்டவர்கள் நம்மைப் பிரிப்பதை அனுமதிக்கப் போகிறோமா? இந்த அடிமைச் சேவகர்களுக்கு எதிராகக் குரல் கொடுங்கள்: "பார்ப்பன இந்து மதவெறியை முறியடிப்போம்!" ☐


படிப்பகம்

www.padippakam.com



நாய் நடந்து போகலாம், நரிகள் நடந்து போகலாம், ஏன் ஊர்ந்து செல்லும் பாம்புகள் கூடக் கடந்து போகலாம். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள் நகர வீதிகளில் நடக்கக் கூடாதென்ற நிலைதான் அன்று ஒட்டுமொத்தக் கேரளத்திலும் நிலவியது.

# வைக்கம் போராட்டம்: "கோயிலில் நுழைந்தவர்கள் வெட்டிப் புதைக்கப்பட்டார்கள்!"

*1930-களில் திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் கீழிருந்த வைக்கம் நகரின் வீதிகளில் நடப்பதற்குக் கூட தாழ்த்தப்பட்ட, ஈழவச் சமுதாய மக்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.*

*பெரியாரின் தலைமையில் நடைபெற்ற வைக்கம் போராட்டம் கோயிலில் நுழையும் உரிமையை வென்றது. காங்கிரசின் பார்ப்பனக் கும்பலையும் சங்கராச்சாரியையும் கதிகலங்கச் செய்த இப்போராட்டத்தில் பெரியாருடன் இணைந்து நின்று போராடிய தோழர்* **விசுவநாதன்** *(வயது 85) அந்தச் சாதியக் கொடுங்கோன்மையை நினைவு கூர்ந்தார்:*

ஆயிரமாயிரம் சூரியன்களுக்கு நிகரான தந்தை பெரியார் எங்களோடு இணைந்து வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்ட அந்தச் செழுமையான நினைவுகள் இன்றும் என் மனதில் நிற்கிறது. தலைமறைவு வாழ்க்கைக்கும், சிறை வாசத்திற்கும் இடையில்தான் என் வாழ்க்கை கழிந்திருக்கிறது. வைக்கம் போராட்டத்தில் ஈடுபட்ட பலருடன் நான் இணைந்து போராடியிருக்கிறேன்; வாழ்ந்திருக்கிறேன்.

நாய் நடந்து போகலாம், நரிகள் நடந்து போகலாம், ஏன் ஊர்ந்து செல்லும் பாம்புகள் கூடக் கடந்து போகலாம். ஆனால், தாழ்த்தப்பட்ட மக்கள் நகர வீதிகளில் நடக்கக் கூடாதென்ற நிலைதான் அன்று ஒட்டுமொத்தக் கேரளத்திலும் நிலவியது.

அன்றைய திருவிதாங்கூர் சமஸ்தானம், ஆங்கிலேய அரசுக்கு 8 கோடி ரூபாய் கப்பம் கட்டியது. அதற்கு ஈடான தொகையை கேரள நம்பூதிரிகளுக்கும் வாரியிறைத்தது. அனைத்துக் கோவில்களிலும் பார்ப்பன நம்பூதிரிகளுக்கு மட்டுமல்லாமல், ஆந்திரம், கர்நாடகம் ஆகிய இடங்களிலிருந்தெல்லாம் அழைத்து வரப்பட்ட பார்ப்பனர்களுக்கும் தினந்தோறும் 'அன்ன தானம்' வழங்கப்பட்டது.

"பிராமணர்கள் அறிவாளிகள்; கடவுளின் அவதாரங்கள். ஆனால், தீண்டத்தகாதவர்கள் கொடியவர்கள்; அவர்கள் பார்ப்பனர்கள் முன்னால் நடந்து செல்வது கூடப் பாவம்" என்பது போன்ற மனுதர்ம விதிகளே எங்கு கோலோச்சின.

வைக்கம் போராட்டத்திற்கு முன்பாகவே, இன்றிலிருந்து 197 ஆண்டுகளுக்கு முன்னால், இக்கொடுமைகளுக்கெதிராகத் தாழ்த்தப்பட்ட மக்கள் வெகுண்டெழுந்தார்கள். கோவில்களுக்குள் அத்துமீறி நுழைந்து வழிபட்டார்கள் என்ற காரணத்திற்காக திருவிதாங்கூர் சமஸ்தானத்துத் தளவாய், அம்மக்களின் கழுத்தை வெட்டிக் கொலை செய்து, கோவிலுக்கு அருகிலுள்ள குளத்தில் குழிதோண்டிப் புதைத்தான். அவ்விடம் இன்றும் 'தளவாய்க் குளம்' என்றுதான் அறியப்படுகிறது.

1885–முதல் 1923–வரை, தீண்டாமைக்கெதிராகக் காங்கிரசு இயக்கம் சிறு துரும்பையும் அசைக்கவில்லை. பின்பு, 1923–காக்கிநாடா காங்கிரசு மாநாட்டில் டி.கே.மாதவன் என்பாரின் முயற்சியால், தீண்டாமைக்கெதிராகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 1924, மார்ச் 30–ல் வைக்கம் ஆலய நுழைவுப் போராட்டம் துவங்கியது. காந்தியும், அன்றைய காங்கிரசும் இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தார்கள்.

போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திய கே.பி.கேசவ மேனன், கேளப்பன், டி.கே.மாதவன் ஆகியோர் கைது செய்யப்பட்டதன் விளைவாக, தந்தை பெரியார் வைக்கம் போராட்டத்திற்குத் தலைமையேற்க ஈரோட்டிலிருந்து 1924, ஏப்ரல்–14 அன்று இரவு 2.00 மணிக்குக் கேரளம் வந்திறங்கினார். பெரியாரின் தலைமை போராட்டத்தைத் தீவிரமாக்கியது. பார்ப்பன நம்பூதிகளும், ஆட்சியாளர்களும் அடக்குமுறையை ஏவிவிட்டார்கள்.

சங்கரன் பிள்ளை என்பவர் அப்போராட்டத்தின் முதல் உயிர்நீத்த தியாகியானார். ராமன் இளையன் என்பவரின் கண்களில் சுண்ணாம்பு பூசப்பட்டு, அவர் தன் கண்பார்வையையே இழந்தார். மார்த்தாண்டன் என்பவரைக் கொடூர ஆயுதங்களால் தாக்கிக் கொன்றொழித்தனர்.

பல்வேறு மாநில மக்களும், குறிப்பாக பஞ்சாப், தமிழகத்திலிருந்து எண்ணற்ற மக்கள் போராட்டத்தில் கலந்து கொண்டனர். பெரியாரின் மனைவியும், தங்கையும் போராடிய மக்களின் உணவுக்காக வீடுவீடாகச் சென்று அரிசி பெற்று வந்தனர். கடுமையான அடக்குமுறைக்கிடையில், இப்போராட்டம் 603 நாட்கள் நடைபெற்றது.

கதிகலங்கிய ஆட்சியாளர்கள், பெரியாரைக் கைது செய்து சிறையிலடைத்தார்கள். அவரைத் தொடர்ந்து தலைமையேற்ற பெரியாரின் மனைவி நாகம்மையாரையும் கைது செய்து சிறையிலடைத்தார்கள். பின்னர், ஆறுமாதச் சிறைவாசம் முடித்து பெரியார் மீண்டும் போராட்டத்திற்குத் தலைமையேற்று வழிநடத்தினார். பெரியாரின் அனல்கக்கும் பிரச்சாரத்தாலும், உறுதிவாய்ந்த போராட்டத்தாலும் நடுங்கிய ஆட்சியாளர்கள், வேறுவழியின்றி, இறுதியாக 'தாழ்த்தப்பட்ட மக்களும், ஈழவச் சமூகத்தினரும் கோவில்களுக்குச் சென்று வழிபடலாம்' என அறிவித்தனர். தீண்டாமைக்கெதிராகப் போர்க்குணமிக்கப் போராட்டத்தை நடத்தி வெற்றி பெறச் செய்த தந்தை பெரியாரை, கேரள மக்களால் என்றும் மறக்க முடியாது.

இன்று, நாம் போராடிப் பெற்ற உரிமைகளெல்லாம், நம்மிடமிருந்து பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வகையில், வைக்கம் போராட்டம் இன்றளவும் கேரள மக்களுக்கும், நாடு முழுமைக்கும் ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது. ❑


படிப்பகம்

www.padippakam.com

# பார்ப்பன பயங்கரவாதம்

## 2

எதிர்பார்த்ததைப் போலவே, ''பார்ப்பன பயங்கரவாதம்'' என்கிற வரையறுப்பின் மீது போலி கம்யூனிஸ்டுகளும் போலிப் புரட்சியாளர்களும் பல கேள்விகளை எழுப்புகின்றனர். ''இந்துத்துவம், இந்துமதவெறி அல்லது பார்ப்பனியம் என்பதுதானே சரியானது இது பார்ப்பன - சத்திரிய - வைசிய உயர்சாதிகளின் ஆளும் வர்க்கங்களின் நலனுக்கானதாக இருக்கையில், பார்ப்பனச் சாதியை மட்டும் தனியே பிரித்துக் குறி வைப்பதாக பார்ப்பன பயங்கரவாத எதிர்ப்பு என்று முழக்கமிடுவது சரியா? இப்படிச் சொல்வது மற்ற பிற ஒடுக்கும் சாதிகளை - வர்க்கங்களை நமது தாக்குதல் இலக்கில் இருந்து விலக்கி வைக்கும் குறுகிய பார்வை கொண்டது இல்லையா?'' என்பது போன்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

பார்ப்பன – பாசிச பயங்கரவாதிகள் தமது வருணாசிரம – சாதிய சுயஉருவத்தை தந்திரமாக மூடிமறைத்து, இந்த நாட்டில் வாழும் இசுலாமிய கிறித்தவ மதத்தினர் தவிர மற்ற பெரும்பான்மையினரான அனைவரின் ஏகப்பிரதிநிதியாக நின்று பாடுபடுவதாக நயவஞ்சகமாக நாடகமாடுகின்றனர். இசுலாமியர்கள், கிறித்தவர்கள் அல்லாத மக்கள் அனைவரும் இந்துக்கள் என்ற ஒரே வகையைச் சேர்ந்தவர்கள் என்று புளுகி ஏமாற்றுகின்றனர்.

சமுதாயத்தில் செல்வாக்கும் ஆதிக்கமும் பெற்றிருக்கும்போது, பார்ப்பனர்கள் மனு தர்மப்படி வருணாசிரம சாதியமுறையைப் புகுத்திப் பெரும்பான்மையான மக்களை சூத்திரர், பஞ்சமர், சண்டாளர் என்று சிறுமைப்படுத்தி இழிவுபடுத்தி கொடூரமான முறைகளில் அடக்கி ஒடுக்கினர். அப்போதெல்லாம், தமக்கேயுரிய வேதங்கள், உபநிடதங்கள் அடிப்படையிலான பார்ப்பனச் சனாதன தர்மம் தமது மதமென்று கூறிக்கொண்டனர். பார்ப்பன வருண – சாதியினர் தவிர மற்ற பெரும்பான்மையினரைத் தமது மதத்துக்கு வெளியே ஒதுக்கி வைத்தனர்..

சமுதாயத்தில் ஆதிக்கமும் செல்வாக்கும் இழந்து பல வீனமடையும்போது, மீண்டும் அவற்றைப் பெறுவதற்காக எல்லோருக்கும் கடவுளும் மதமும் பொதுவானவையென்று தனது பார்ப்பனச் சனாதன மதத்துக்குப் புது வியாக்கியானம் செய்து பார்ப்பனரல்லாதோரை ஏய்த்தனர். புத்த – சமண மதங்கள் தோன்றி பார்ப்பனச் சனாதன வருணாசிரம தர்மம் வீழ்ச்சி அடைந்தபோது ஆதிசங்கரன் முன்னின்று இப்படி மோசடி செய்தான்.

மொகலாயர், ஆங்கிலேயர்கள் ஆட்சி ஏற்பட்ட போதும், பின்னர் பார்ப்பனரல்லாதோர், குறிப்பாக சூத்திரர், பஞ்சமர் இயக்கங்கள் வலுப்பெற்றபோதும் இப்படித்தான் செய்தனர்.

இந்துத்துவம், இந்து மதம் என்று கூறிக் கொள்வதெல்லாம் உண்மையில் பார்ப்பனச் சனாதன தர்மத்தை, பார்ப்பன மதத்தைத்தான் குறிக்கிறது என்பதை இப்போது பலரும் அறிந்திருக்கின்றனர். சமய இலக்கியங்களும் சரி, வரலாறும் சரி இப்படித்தான் கூறி வந்திருக்கின்றன. ஆங்கிலேயர் வருகைக்குப் பிறகுதான் இதற்கு ''பிராமணிச(ய)ம்'' என்று ''இசம்'' சேர்த்து அழைக்கப்படுவதாகியது.

பார்ப்பனர்கள் தம்மை பிராமணர்கள் என்று சமசுக்கிருதத்திலும் அந்தணர்கள் என்று தமிழிலும் குறிப்பிடப்படுவதை மரியாதைக்குரியதாகக் கருதுகின்றனர். அவர்கள் தமது மதத்தையும் சித்தாந்தத்தையும் இந்து, இந்துத்துவம், பிராமணீயம் என்றெல்லாம் சொல்லிக் கொள்வதில் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். இந்த மரியாதைக்கும் பெருமைக்கும் பாதிப்பு ஏற்பட்டு விடக்கூடாது. அவர்களுடைய மனம் புண்பட்டு விடக்கூடாது என்று கருதும் போலி கம்யூனிஸ்டுகள், பிராமணர்கள், பிராமணீயம் என்றே குறிப்பிடுகிறார்கள்.

**இந்து, இந்துத்துவம், இந்து தேசியம், இந்தியக் கலாச்சாரம் அல்லது பாரதப் பண்பாடு என்றெல்லாம் என்னதான் பேசினாலும், அதன் சாரம் பார்ப்பனச் சனாதன சாதி - வர்ண - குலதர்மம்தான்.**

இவ்வாறு பார்ப்பனச்சனாதன தருமத்தை ஏற்று ஆதாயம் அடைந்த சத்திரிய - வைசிய சாதிகள் மறுபுறம் தாங்களும் வர்ண - சாதிய சமூக அமைப்பினால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதாக வாதாடி ஆங்கிலேயக் காலனிய அரசு அமைப்பில் பங்கும் பெற்றன. இதற்காகப் பார்ப்பனர் - பார்ப்பனரல்லாதோர் என்று இரண்டு பிரிவுகள் அடிப்படையில் சமூக நீதி அரசியல் நடத்தினர். இப்படிச் செய்வது சாதிப் பகைமையைத் தூண்டுவது என்று பார்ப்பனர்கள் எதிர்த்தனர். இதற்குப் பதிலளிக்கும் முகமாகவும், ஓட்டுக் கட்சி அரசியல் வசதிக்காகவும் திராவிட இயக்கத்தினர் தாம் பார்ப்பனர்களை எதிர்க்கவில்லை, பார்ப்பனீயத்தைத் தான் எதிர்க்கிறோம் என்று புது வியாக்கியானம் கொடுத்தனர்.

பார்ப்பன பயங்கரவாதிகள் உருவாக்கியிருக்கும் இந்துத்துவம் என்கிற அரசியல், சித்தாந்தத்தின் சமூக அடிப்படை பழைய பார்ப்பனச் சனாதன தர்மத்தில் இருந்து சற்று மாறுபட்டிருக்கிறது; தொழிற்புரட்சியின் விளைவுகள் - தாக்கங்களைச் சுமந்து வந்த ஆங்கிலேயக் காலனியவாதிகளால் பார்ப்பனச் சனாதனக் கட்டமைப்பில் உடைசல்கள் ஏற்பட்டுள்ளன என்பது உண்மைதான். அதை அப்படியே புதுப்பிக்க முடியாது என்பதால் தமக்கு வசதியான திருத்தத்துடன் புது வடிவெடுத்துள்ளது. சமூகத்தின் மிகமிகச் சிறுபான்மையினரான சத்திரிய - வைசிய சாதிகளோடு சூத்திர - பஞ்சம வர்ண சாதி வழி வந்த பிழைப்புவாதிகளையும் தமது அணியில் சேர்த்துக் கொண்டு பார்ப்பன மேலாதிக்கத்தை நிறுவுவதுதான் பார்ப்பன பயங்கரவாதிகளின் நோக்கமாக உள்ளது.

இப்படிப்பட்ட சமூக ஆதரவைத் தேடிக் கொள்வதற்காக நாட்டின் அனைத்து மதங்களுக்கும் சாதிகளுக்கும் பொதுவான ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே பண்பாடு, ஒரே சட்டம், ஒரே இனம் என்பதை பார்ப்பன பயங்கரவாதிகள் இலட்சியக் கொள்கையாகக் கூறிக் கொள்கிறார்கள். அதற்கு இந்து இனம், இந்து நாடு, இந்துத்துவக் கலாச்சாரம் அல்லது பாரதப் பண்பாடு, பொதுச் சிவில் சட்டம் என்று பெயரிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்து, இந்துத்துவம், இந்து தேசியம், இந்தியக் கலாச்சாரம் அல்லது பாரதப் பண்பாடு என்றெல்லாம்



படிப்பகம்

www.padippakam.com


என்னதான் பேசினாலும், அதன் சாரம் பார்ப்பனச் சனாதன சாதி - வர்ண - குல தர்மம்தான். பார்ப்பனப் பண்பாடு, பார்ப்பன மொழியான சமசுக்கிருதம், பார்ப்பன விழுமியங்கள்தாம்; பார்ப்பனர்கள்தாம் எல்லா மக்கள் பிரிவினரிலும் உயர்ந்தவர்கள், கடவுளுக்கும் மேலானவர்கள் என்கிற சித்தாந்தம்.



''அருந்தொண்டு புரிந்த அந்தணர்கள்'' என்ற நூலை வெளியிட்டு, விழா நடத்தி, அனைத்துப் பிரிவுப் பார்ப்பனப் பிரமுகர்களும் கூடி அப்பட்டமாகவே பார்ப்பன ஆதிக்க உரிமை கோரினர்.

''அந்தணர்கள்தாம் எல்லோருக்கும் மேலானவர்கள், அரசுக்கும் ஆண்டவனுக்கும் மேலானவர்கள்; ஆண்டவனைக் கூடப் பகைத்துக் கொள்ளலாம், அந்தணர்களைப் பகைத்துக் கொள்ளக் கூடாது; இந்தியாவில் ஆதிகாலம் தொட்டு ஓங்கியிருந்த கலாச்சாரத்தின் அடிப்படை வேர் பிராமணியம்தான்; அதன் பிரதிநிதி பிராமணன்தான்; சமஸ்கிருதம்தான் இந்தியக் கலாச்சாரத்தின் வேர்; அதைக் கைவிட்டால் கலாச்சாரம் அழிந்துவிடும். அரசும் அரசியல்வாதிகளும் எங்கள் சொற்படி தான் நடக்க வேண்டும். எங்கள் காலடியில் கிடக்க வேண்டும். மத விவகாரங்கள், மத நம்பிக்கைகளில் தலையிட அரசு நிறுவனங்கள் உட்பட யாருக்கும் உரிமை கிடையாது. எந்த அரசுக்கும் சட்டத்துக்கும் நீதிமன்றத் தீர்ப்புக்கும் கட்டுப்படமாட்டோம்'' என்று அடாவடியாகவும், திமிராகவும் பேசுகிறார்கள், பார்ப்பனச் சனாதனிகள்.

பழைய பார்ப்பனச் சனாதன தர்மமும், இன்றைய இந்துத்துவமும் பார்ப்பனரல்லாத மேல் சாதிகளுக்கும், கீழ்ச்சாதி பிழைப்புவாதிகளுக்கும் ஆதாயம் தரக்கூடியனவாக இருந்த போதும் இந்தச் சித்தாந்தத்தை உருவாக்கிப் பாதுகாப்பதையே தமது குலத் தொழிலாகக் கொண்டவர்கள் பார்ப்பனர்கள்.

பார்ப்பனர்கள் என்றால் வேதங்கள், உபநிடதங்கள், புராண - இதிகாசங்கள், வேதாந்தங்களைப் படைக்கும் முனிவர்கள்; வேள்விகள், யாகங்கள், கோவில்களில் பூசைகள் நடத்துபவர்கள்தாம்; மற்றபடி சத்திரியர்கள் தாம் ஆட்சியாளர்களாகவும் வைசியர்கள்தாம் வாணிபர்கள் - செல்வந்தர்களாகவும் இருந்தனர் என்று பலரும் தவறாக எண்ணுகின்றனர். ராஜகுருக்களாக இருந்து ஏதோ சூழ்ச்சியினால் அரசர்களை ஆட்டுவிப்பவர்களாக மட்டும் பார்ப்பனர் இருந்தனர் என்றுகூடப் பலர் எண்ணுகின்றனர்.

சனாதன வருணாசிரம – சாதிய தர்மத்தை உருவாக்கியதோடு, அந்த தர்மத்தை அமலாக்கும் சத்திரிய அரசர்களை வழிநடத்தும் ராஜகுருக்களாகப் பார்ப்பனர்களே இருந்தனர். இதன் நினைவாகத்தான் சங்கராச்சாரிகள் – ஜீயர்கள் எங்குபோனாலும் ''தர்ம தண்டம்'' என்ற கொம்பைப் பிரியாது தூக்கிக் கொண்டு அலைகிறார்கள்.

சத்திரிய அரசர்களை வழிநடத்தும் ராஜகுருக்களாக மட்டுமல்ல, அரசியல் - சட்ட விவகாரங்களைக் கவனிக்கும் அமைச்சர்களாகவும், அரசக் களஞ்சியத்தை நிர்வகிக்கும் தானாதிபதி (சான்றாக மராட்டிய பேஷ்வா) களாகவும், பெரும் நிலவுடைமையாளர்களாகவும், வாய்ப்புக் கிடைக்கும்போது மன்னர்களாகவும், ஜமீன் ஆட்சி முறையின் கீழ் திவான்களாகவும் இருந்து நேரடியாகவே அதிகாரம் செலுத்தியிருக்கிறார்கள்.

> **பார்ப்பனர்கள் என்றால் .... வேள்விகள், யாகங்கள், கோவில்களில் பூசைகள் நடத்துபவர்கள்; ராஜகுருக்களாக இருந்து ஏதோ சூழ்ச்சியினால் அரசர்களை ஆட்டுவிப்பவர்களாக மட்டும் பார்ப்பனர் இருந்தனர் என்றுகூடப் பலர் எண்ணுகின்றனர்.**

இப்போதும் அரசுத் தலைவர்கள், துணைத் தலைவர்கள், பிரதமர்கள், முப்படைத் தளபதிகள், உயர்நிலை நீதிபதிகள், மாநில முதல்வர்கள், ஆளுநர்கள், அனைத்து மட்ட அதிகாரிகள் என்று நேரடி ஆட்சி அதிகாரம் செலுத்தும் பதவிகளுக்காகத் தொடர்ந்து முயலுகிறார்கள்.

பழைய அரசர்கள் காலத்தில் மட்டுமல்ல, இப்போதும் ஆட்சியாளர்கள் எவராயினும் தமது காலடியில் விழவேண்டும், எல்லோருக்கும் தாங்கள் மேலானவர்கள், இந்த தர்மத்தில் இருந்து விலகியதால்தான், குடும்பம், சாதி என்கிற சமுதாய அமைப்பு கலைவதால்தான் நாடு இப்போது சீரழிந்து கிடக்கிறது; தற்போதைய ஆட்சியாளர்கள் குருகுலப் பயிற்சி (ஆர்.எஸ்.எஸ். பயிற்சி) பெற்றவர்களாக இருக்கவேண்டும் என்று சங்கராச்சாரிகள் முதல் எல்லா ஆர்.எஸ்.எஸ் தலைவர்களும் வலியுறுத்துகின்றனர்.

பார்ப்பனர்கள்தான் இந்துத்துவாவின் தலைமையிலும் பின்னணியிலும் இருக்கவேண்டும்; பிற சாதியினர் இந்தப் பொறுப்புகளுக்கு வந்தாலும் குருகுலப் (ஆர்.எஸ்.எஸ்) பயிற்சி பெற்று பார்ப்பன சனாதன தர்மத்துக்குக் கட்டுப்பட்டவர்களாகவும், நவீன ராஜகுருக்களின் (சங்கராச்சாரிகள் ) போதனைப்படி நடப்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்பது அவர்களால் கடைப்பிடிக்கப்படுகிறது.

இதற்காகவே மராட்டியத்தில் சிவாஜியின் ஆட்சிக்குப் பிறகு அதிகாரத்தைக் கைப்பற்றி போஸ்லே ஆட்சியை நிறுவிய சித்பவனப் பார்ப்பனர்களால் உருவாக்கப்பட்டதுதான் ஆர்.எஸ்.எஸ். இயக்கம். அதன் மூலவர்களான சவார்க்கர், ஹெட்கேவார், கோல்வால்கர், தேவரஸ் ஆகியவர்கள் சித்பவனப் பார்ப்பனர்கள். இடையே ராஜேந்திரசிங் என்ற சத்திரிய ராஜபுத்திரர் மட்டும் குறுகிய காலத்திற்குத் தலைமைப் பொறுப்பில் இருந்தார்.

இந்த ஆர்.எஸ்.எஸ். அமைப்புப் பயிற்சி பெற்ற பார்ப்பனர்கள்தாம் அதன் துணை அமைப்புகளின் பொறுப்புக்களில் அமர்த்தப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் கூட ராமகோபாலன், ஜனா கிருஷ்ணமூர்த்தி, கோவிந்தாச்சார்யா, சூரிய நாராயணராவ், இல. கணேசன்


படிப்பகம்

www.padippakam.com

போன்ற பொறுப்பாளர்களும் முக்கிய ஆதரவாளர்களான சோ, குருமூர்த்தி போன்றவர்களும் பார்ப்பனர்கள்தாம்.

அதோடு, மராட்டியப் பார்ப்பன ஆட்சியாளர்களின் பாக்வாதான் ஆர்.எஸ்.எஸ் இயக்கக் கொடியாகவும், பார்ப்பனர்களின் மூதாதையர்கள் இந்தியத் துணைக் கண்டத்தில் குடியேறி பல நூறு ஆண்டுகள் வாழ்ந்த இமயமலையையும், அங்கு உற்பத்தியாகும் ஏழு ஆறுகளையும் தமது புண்ணியச் சின்னங்களாகவும் வலியுறுத்துகின்றனர். இந்தப் பகுதிகளை உள்ளடக்கிய அகண்டபாரதத்தை உருவாக்குவதைத் தமது குறிக்கோளாக வலியுறுத்துகின்றனர். எனவே தான் இந்தப் ''புண்ணிய பூமி'', புண்ணிய ஆறுகள் பாயும் பிரதேசங்கள், பாகிஸ்தான், சீனா (திபேத்), வங்க தேசம் ஆகிய நாடுகளின் கீழ் உள்ளதை அவர்களால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

பார்ப்பனச் சனாதன – வர்ணாசிரம – சாதிய நியதிகளும் சட்டம் – ஒழுங்குமுறைகளும் அதன் நடைமுறைக்கு வந்தநாளில் இருந்து தற்போதுவரை வெறும் தர்மபோதனைகள், ஆன்மீக உபதேசங்கள் மூலம் அமலாக்கப்படவில்லை. பயங்கரவாதம்தான் வழிமுறையாக இருந்து வருகிறது. எனவே தான் அது ஒரு பாசிசச் சித்தாந்தமாக இல்லாமல் பார்ப்பன பாசிச பயங்கரவாதமாக உள்ளது என்று வரையறுக்க வேண்டியுள்ளது. வருண தர்மத்தை மீறுபவர்களுக்கு பார்ப்பனர்கள் விதித்த தண்டனைகளைப் பார்த்தாலே இது புரியும்.

பார்ப்பனச் சனாதன தர்மம் என்பதே பயங்கரவாத அடிப்படையில் பார்ப்பன ஆதிக்கத்தை நிலைநாட்டுவது என்பதுதான். பயங்கரக் கொலைகள் புரிந்தவர்களை, கொலைவெறி ஆயுதந்தந்தவர்களைக் கடவுள்களாகக் கொண்டதுதான் பார்ப்பன மதமாகும். இப்போது இயந்திரத் துப்பாக்கி, வெடிகுண்டு போன்றவற்றைக் கொடுத்து கடவுள்களையே நவீன ஆயுதபாணியாக்குகிறார்கள். நரபலி, கபாலபூசை, கழுவேற்றுவது, யானைகளைக் கொண்டு மனிதத் தலைகளைப் பந்தாடுவது, உடன் கட்டை ஏற்றுவது, நாக்கை அறுப்பது, ஈயத்தைக் காய்ச்சிக் காதில் ஊற்றுவது, உடல்உறுப்புக்களை வெட்டுவது மத ஒழுங்காகவும், அதை நிலைநாட்டும் வழிமுறையாகவும் இருந்திருக்கிறது. தமது மத ஆதிக்கத்தை நிலை நாட்டுவதற்காக ஆயிரக் கணக்கான புத்த, சமணத்துறவிகளைக்

**பாசிசம் என்பது விதிவிலக்கின்றி எதிர்ப்புரட்சிச் சக்திகள் பின்பற்றும் சித்தாந்தம் – நடைமுறையைக் குறிக்கிறது; இறுதியில் பெரும்பான்மைச் சமூகத்துக்கு எதிராக ஏவிவிடப்படுகிறது. ஆனால், பயங்கரவாதம் என்பது பயங்கர பீதியைப் பரவச் செய்யும் ஒரு வழிமுறைதான்.**

கழுவிலேற்றினார்கள்.

சனாதன தர்மத்தை மீறும் பார்ப்பனர்களுக்குத் தண்டனை கிடையாது; பரிகாரம் பூசைகள் செய்தாலே போதும். சத்திரிய – வைசிய சாதியினருக்குச் சொற்பத் தண்டனைகள்தாம். ஆனால், பெரும்பான்மையினரான சூத்திரர்கள் – பஞ்சமர்களுக்குக் குரூரமான வக்கிரமான தண்டனைகள் விதிக்கப்பட்டன. எல்லாவற்றிலும் கொடூரமாக தீண்டாமை விதிக்கப்பட்டது. சொத்து, கல்வி, மத உரிமைகள் மறுக்கப்பட்டதோடு, உடைந்த மண்பாண்டங்களிலோ, கழிக்கப்பட்ட பாத்திரங்களிலோதான் உணவருந்த முடியும். மாடுகளுக்கு வழங்கப்பட்ட மரியாதை கூட மனிதர்களுக்கு மறுக்கப்பட்டது.

''சரி, பார்ப்பனச் சனாதனிகளை மதவெறி பாசிஸ்டுகள் என்று வரையறுத்தால் போதாதா? ஏன் பயங்கரவாதிகள் என்றுகூறவேண்டும்'' எனவும் சிலர் கேட்கின்றனர்.

பாசிசம் என்பது கொடிய – குரூரமான எதிர்ப்புரட்சி வன்முறையைக் குறிக்கிறது. பயங்கரவாதம் என்பது எதிரிகளை மட்டுமல்லாது அவர்கள் சார்ந்திருக்கும் சமூகம் முழுவதையும் பயங்கர பீதியில் மூழ்கடித்துத் தமது நோக்கத்தை ஈடேற்றிக்கொள்வதாகும். பாசிசம் என்பது விதிவிலக்கின்றி எதிர்ப்புரட்சிச் சக்திகள் பின்பற்றும் சித்தாந்தம் – நடைமுறையைக் குறிக்கிறது; இறுதியில் பெரும்பான்மைச் சமூகத்துக்கு எதிராக ஏவிவிடப்படுகிறது. ஆனால், பயங்கரவாதம் என்பது பயங்கர பீதியைப் பரவச் செய்யும் ஒரு வழிமுறைதான்.



முற்றிலும் எதிர்ப்புரட்சித் தன்மையுடைய பாசிச மற்றும் அரசு அமைப்புக்கள் பயங்கரவாத வழிமுறையைப் பின்பற்றுவதற்கும் அதன் விளைவாகப் பாதிக்கப்படும் சிறுபான்மைப் பிரிவினர் அதைப் பின்பற்றுவதற்கும் வேறுபாடு உள்ளது. பயங்கரவாதம் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான ஒரு வழிமுறையாக அமையாது என்ற போதும் சில சமயம் எதிர்ப்புரட்சி அரசு மற்றும் பாசிச பயங்கரவாதத்தை எதிர்கொள்வதற்கு புரட்சிகர பயங்கரவாதம் தவிர்க்க முடியாமல் அவசியமாகிறது.

ஆனால், பார்ப்பன – பாசிச பயங்கரவாதிகளும், செய்தி ஊடகங்களும் இசுலாமியத் தீவிரவாதிகள் மட்டும்தான் பயங்கரவாதிகள் என்பதாகவும், அதற்கு எதிராக இந்து இளைஞர்கள் மேற்கொள்வது நியாயமான கோபாவேசப் பதிலடி தான் என்றும் சாதிக்கின்றனர். இதற்கு மும்பை – கோவை குண்டுவெடிப்பு, நாடாளுமன்றக் கட்டிடம் – சுவாமி நாராயணன் கோவில் போன்ற இடங்கள் தாக்கப்பட்டது, கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவம் முதலியவற்றைச் சான்று காட்டுகின்றனர்.

அதற்கு மாறாக, பார்ப்பன பாசிஸ்டுகள் பின்பற்றும் வழிமுறை மிகமிகக் கொடூரமான பயங்கரவாதம் என்று நிரூபிப்பதற்கான சான்றுகள் ஏராளமாக உள்ளன. இவர்கள் நடத்திய மதவெறிப் படுகொலைகள் எல்லாவற்றிலும் குழந்தைகள், பெண்கள், முதியோர்கள் கண்ட துண்டமாய் வெட்டி வீசப்பட்டனர்; ஆண்கள் உயிரோடு கொளுத்தப்பட்டனர்; மதக் கலப்புத் திருமணம் செய்து கொண்ட பெண்களின் வயிற்றைக் கீறிக் கருவை வெளியே இழுத்துப் போட்டுக் கொன்றனர்; பெண்களைக் கும்பலான பாலியல் வன்முறைக்குப் பலியிட்டு, நிர்வாணமாக்கி ''வீடியோ'' படங்கள் எடுத்துள்ளனர்; இரசாயனப் பொடியைத் தூவி,


படிப்பகம்

www.padippakam.com


தீக்காயம் ஏற்படுத்திக் கொன்றனர். அங்கம் அங்கமாக வெட்டிச் சித்திர வதை செய்து கொன்றனர். இத்தனையையும் பட்டப்பகலில், ஆண்கள் – பெண்கள் – சிறுவர்கள் வேடிக்கை பார்க்க குரூரமான முறையில் நிகழ்த்தியிருக்கிறார்கள்.

இப்படிப் பகிரங்கமாகவும், கும்பலாகவும், அரசு அதிகாரிகள் முன்னிலையிலும், போலீசின் பங்கேற்புடனும் நடப்பதால் இவை சமூக ஆதரவுடன் நடக்கும் நியாயமான செயல்கள் என்று சாதிக்கிறார்கள். உண்மையில் இவைதான் மிகமிகக் கொடூரமானவை. சமுதாயம் முழுவதையும், ஒன்று தங்களுக்கு ஆதரவாக நிற்க வேண்டும், இல்லையானால் – இதை எதிர்ப்பவர்களுக்கும் இதே கதிதான் என்று பயங்கரவாத பீதியை அவர்கள் பரப்புகின்றனர்.

எந்தச் சட்டத்திலும் எங்களைக் கட்டுப்படுத்த முடியாது, எந்த நீதிமன்றத்தீர்ப்புக்கும் பணியமாட்டோம் என்கிற அடாவடி நிலையில் இருந்து, ''இந்துத்துவாவை எதிர்ப்போருக்கு மரணதண்டனை விதிப்போம்'' என்று பகிரங்கமாக மிரட்டும் இதைவிட பயங்கரவாதம் வேறென்ன இருக்கமுடியும்? இதுதான் பார்ப்பன பாசிச பயங்கரவாதம் ஆகும்.

இந்து மதவெறிப் பார்ப்பன சனாதனிகள் வெறுமனே பயங்கரவாதிகள் மட்டுமல்ல; பாசிச பயங்கரவாதிகள். இவர்கள் தமக்கு முன்மாதிரியாக எல்லா வகையிலும் ஜெர்மனியின் நாசிசத்தையும், முசோலினியின் பாசிசத்தையும் பகிரங்கமாகவே ஏற்றுக் கொண்டு, அதனால் பெருமைப்படுபவர்கள். அகண்ட பாரத இலட்சியம், ஸ்வஸ்திக் மற்றும் தாமரைச் சின்னம், ஆரிய இன வழிவந்தவர்கள் என்கிற பெருமிதம், கம்யூனிச எதிர்ப்பு, இந்துக்களுக்கு இராணுவப் பயிற்சி அளித்து, ஆயுதபாணியாக்கி, அமைப்பாக்கி இராணுவமயமாக்கும் திட்டம்; ஆர்.எஸ்.எஸ், விசுவ இந்து பரிசத், இந்து முன்னணி, பஜ்ரங்தள் போன்ற பார்ப்பன பயங்கரவாத அமைப்புக்கள் எல்லாம் சங்கரமடப் பாணியில் வாரிசு நியமனங்கள், இரகசிய வரவு – செலவு என்றுள்ள அமைப்பு முறை – இவை அனைத்தும் பார்ப்பன பயங்கரவாதத்தின் பாசிசத் தன்மையையே காட்டுகின்றன.

இன்னும் குறிப்பாகச் சொல்வதானால், குறுகிய, கற்பிதம் செய்யப்பட்ட தேசியவெறி, தேசியப் பெருமைவாதம்; உலகிலேயே உயர்வான மதம், தேசியம், கலாச்சாரம் என்ற தற்பெருமை; மதரீதியில், இனரீதியில் நெடுங்காலமாக அநீதி, அவமானம் ஏற்பட்டுவிட்டதாகவும் அதற்குக் காரணமானவர்களைப் பழிதீர்க்க தாக்குதல் படை அமைப்பது; தனது மதத்துக்கும் இனத்துக்கும் ஒரு பயங்கரமான எதிரியை இனங்காட்டி, அந்த எதிரிக்கு எதிராகப் பொய்களையும் அவதூறுகளையும் பரப்பி, அவர்கள் மீது வெறுப்பையும் பகை வெறியையும் ஏற்படுத்தி, வன்முறை கலகத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கான படைகளை உருவாக்குவது; இவர்களைக் கொண்டு நாடுமுழுவதும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டு மதவெறிப்படுகொலைகளை நடத்தி, பெரும்பான்மை மக்களை உருட்டி மிரட்டி (பிளாக்மெயில் செய்து) பார்ப்பன – பாசிச ஆட்சியை நிறுவுவது – இவைதாம் பார்ப்பன பயங்கரவாதிகளின் வழிமுறையாகவும் இலட்சியமாகவும் உள்ளன.

**எந்தச் சட்டத்திலும் எங்களைக் கட்டுப்படுத்த முடியாது, எந்த நீதிமன்றத் தீர்ப்புக்கும் பணியமாட்டோம் என்கிற அடாவடி நிலையில் இருந்து, ''இந்துத்துவாவை எதிர்ப்போருக்கு மரண தண்டனை விதிப்போம்'' என்று பகிரங்கமாக மிரட்டும் இதைவிட பயங்கரவாதம் வேறென்ன இருக்கமுடியும்?**



இந்த நோக்கில்தான் தமிழ்நாட்டை ஒரு பார்ப்பன நாடாக்குவதற்கு முன்னோட்டமாக, பார்ப்பன ஆதிக்கத்தின் கீழ் ஒரு கண்காணிப்பு முகாமாக்கிவிட்டார்கள். விசுவ இந்து பரிசத் – பஜ்ரங் தள் பாணியில் பார்ப்பன – பாசிச பயங்கரவாதக் கருத்துக்களை தமிழகம் முழுவதும் பரப்புவதற்காகக் குண்டர்படையைக் கட்டும் வேலையில் சங்கராச்சாரி – இராமகோபாலன் கும்பல் ஈடுபட்டுள்ளது. கிறித்தவப் பாதிரிகளைப் போல இந்து மதப்பிரச்சாரம் செய்வதற்கென முழுநேர ஊழியர்களை, முழுநேர வேலைக்கு அமர்த்தியிருக்கிறது இந்து முன்னணி. காஞ்சி சங்கர மடமோ, ஊருக்கு மூன்றுபேரைத் தெரிந்தெடுத்து, பயிற்றுவித்துக் கிராமங்களுக்கு அனுப்பி கிராம முன்னேற்றக் கழகம் என்ற அமைப்புகளைக் கட்டி வருகிறது. கிராமப்புற புதுப்பணக்காரக் கிரிமினல் கும்பல் தலைவர்களும் கிராமக் கோவில்களைப் புனரமைப்பது என்ற பெயரில் கட்டுமான வேலைகள் செய்து, பார்ப்பனப் பூசாரிகளைத் திணிக்கின்றனர்.

இந்து, இந்தியக் கலாச்சாரம், இந்திய தேசியம் பேசி ஏய்க்கும் இதே பார்ப்பன பாசிச பயங்கரவாதிகள்தாம் நாட்டையே ஏகாதிபத்தியங்களுக்கு விற்கும் உலக மயம் – தாராளமயம் – மறுகாலனியாதிக்கத்துக்குப் பட்டுக் கம்பளம் விரித்து ''தேச''த் துரோகம் செய்யும் துரோகிகளாக உள்ளனர். எனவேதான், உழைக்கும் மக்கள் போராட்டங்களை ஒடுக்குவதில் ஆட்சியாளர்களுக்கு உறுதுணையாக நிற்கின்றனர்.

பார்ப்பன பயங்கரவாதத் தாக்குதல்களைக் கண்டு முசுலீம், கிறித்தவச் சமுதாயம் முழுவதும் பயபீதி அடைந்துள்ளது; பாதுகாப்பாக வாழும் நம்பிக்கையையே இழந்து போயுள்ளனர். ஆனால், இசுலாமிய இளைஞர்கள் இதற்குப் பதிலடி கொடுக்கும் முகமாகத் தனிநபர் அல்லது குழு பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இதனால், பெரும்பான்மை மக்களிடமிருந்து தனிமைப்பட்டுப் போகிறார்கள்.

பார்ப்பன பயங்கரவாதம், மதச் சிறுபான்மையினரைத் தாக்குதவதோடு நின்றுவிடும்; தங்களை ஒன்றும் செய்யாது என்றுபிற்படுத்தப்பட்ட சூத்திர சாதிகளைச்சேர்ந்த மக்களில் பலரும் எண்ணுகின்றனர். ஆனால், நாட்டின் சிறுபான்மை மதத்தினருக்கு மட்டுமல்லாது அனைத்துப் பிரிவு மக்களுக்கும் மிக மோசமான, கொடூரமான எதிரியாக பார்ப்பன – பயங்கரவாத பாசிஸ்டுகள் விளங்குகின்றனர். இதற்கு ஆதாரமாகப் பார்ப்பன பயங்கரவாதிகளின் ஒப்புதல்களும் ஏராளமான கொடிய தாக்குதல் நடவடிக்கைகளும் உள்ளன.

**முற்றும்**


படிப்பகம்

www.padippakam.com




பார்ப்பன பயங்கரவாத
எதிர்ப்பு மாநாடு - 2003

## ஒலிப்பேழைகள்

1. **தமிழகத்தை இந்துத்துவத்தின் கல்லறையாக்குவோம்!**
   *தோழர் மருதையன்,* ம.க.இ.க.
   (2 பாகம் - இரு பேழைகள்) ரூ. **60**
2. **இந்தியத் தத்துவ மரபு, இந்துத் தத்துவ மரபில்லை, இல்லை, இல்லவே இல்லை!**
   *பேரா. பெரியார்தாசன்*
   (2 பாகம் - இரு பேழைகள்) ரூ. **60**
3. **நாட்டார் தெய்வ வழிபாட்டின் பார்ப்பனமயமாக்கம்**
   *திரு. சிவக்குமரன்* மற்றும்
   **குமரி மாவட்டத்தின் பார்ப்பனியக் கொடுங்கோன்மை**
   *வழக்குரைஞர் லஜபதிராய்*
   ஒரே ஒலிப்பேழையில் ரூ. **30**

## ஒளிக்குறுந்தகடுகள்

மாநாட்டில் நடந்த கலைநிகழ்ச்சிகள் 4 ஒளிக்குறுந்தகடுகளாக வெளிவருகின்றன.

1. **குறவன் குறத்தி ஆட்டம்**
   **சங்கராச்சாரி ஓட்டம்**
   ***மையக்கலைக்குழு,*** ம.க.இ.க

   **லுங்கி** - நாடகம்
   ***நாடகக் குழு, வி.வி.மு.,*** கம்பம்

   மற்றும் **புரட்சிகரக் கலைநிகழ்ச்சி** - மையக்கலைக்குழு, ம.க.இ.க, மாநாட்டின் இரண்டாம் நாளில் நடத்தியப் பாடல்கள் தெரிவுசெய்யப்பட்ட தொகுப்பு விலை ரூ. **125.00**
2. **புரட்சிகரக் கலைநிகழ்ச்சி**
   ***மையக்கலைக்குழு, ம.க.இ.க***
   மாநாட்டின் முதல் நாளில் நடத்திய பாடல்களின் முழுமையான தொகுப்பு விலை ரூ.**125**
3. **சாம்பான்** - நாடகம்
   ***ஒத்திகை நாடகக் குழு,*** தஞ்சை

   **அடிமாடு** - நாடகம்
   ***நாடகக் குழு, வி.வி.மு.,*** கம்பம்

   **தப்பாட்டம்**
   ***வீரசோழத் தப்பாட்டக்குழு,*** தஞ்சை

   **மகுடாட்டம்**
   ***முத்துராமலிங்கம், ஆத்திமுத்து*** குழுவினர், சிறீவைகுண்டம்
   விலை ரூ.125
4. **போகாதே நந்தா போகாதே** - நாடகம்
   ***ஒத்திகை நாடகக் குழு,*** தஞ்சை

   **தமிழ்த்தீட்டு** - வில்லிசைப்பாடல்
   ***ஆத்தூர் கோமதி குழு***வினர் மற்றும்

   **சிறுவர்கள் இசை நிகழ்ச்சி**
   ம.க.இ.க விலை ரூ.**125**

ஒளிக் குறுந்தகடுகள் 20.5.03 முதல் விற்பனைக்குக் கிடைக்கும். தபால் செலவு ரூ.**40**

ஒலிப்பேழைகள் தற்போது விற்பனைக்குக் கிடைக்கும். தபால் செலவு ரூ.**20**

---

**பார்ப்பன பயங்கரவாதத்தின்**
## இரத்த சாட்சியங்கள்

*தெற்கத்திய தமிழ்நாட்டின் பார்ப்பனக் கொடுங்கோன்மை பற்றிய ஒரு குறும்படம். புதிய கலாச்சாரம் திரை முழக்கம் குழுவின் இரண்டாவது படைப்பு.*

**குமரி மாவட்டம்:** மனுதர்மக் கொடுங்கோன்மைக்கு எதிராக மாராப்புப் போராட்டம், ஐயா வைகுந்தர் வழிபாடு மண்டைக்காடு கலவரப் பின்னணி.

**மீனாட்சிபுரம்:** இசுலாமுக்கு மாறிய தாழ்த்தப்பட்ட மக்களின் வாக்குமூலம்.

**வைக்கம்:** பெரியாருடன் வைக்கம் கோவில் நுழைவுப் போராட்டத்தில் பங்கு பெற்ற பெரியவர் விசுவநாதனின் போராட்ட நினைவுகள். வைக்கம் ஊர்க் காட்சிகள்

இதுவரை யாரும் பதிவு செய்யாத ஒரு அரிய ஆவணப்படம் - விலை ரூ.**125**

---

அனைத்திற்கும் இரா.சீனிவாசன் (R.Srinivasan) பெயருக்கு DD அல்லது MO எடுத்து அனுப்புக.
**புதிய கலாச்சாரம், 18, முல்லைநகர் வணிகவளாகம், 2-வது நிழற்சாலை, 15-வது தெரு, அசோக் நகர், சென்னை-83. ☎: 2371 87 06**

---

## கீழைக்காற்றின் புதிய வெளியீடு

**ஆணாதிக்கமும் பெண்ணியமும் நூல் வரிசையில் 2-ஆம் பாகம்**

## ஆணாதிக்கமும் சமூக ஒடுக்குமுறைகளும்

ஆசிரியர்: ***பி. இரயாகரன்***

368 பக்கம் விலை: ரூ. **135/-**

**கிடைக்குமிடம் கீழைக்காற்று, எண்: 10, ஔலியா சாகிபு தெரு, எல்லீசு சாலை, சென்னை - 2.**
**☎: 2841 23767**

---

## டாக்டர் பாபா சாகேப் அம்பேத்கர் படைப்புக்கள் - *கணினிக் குறுந்தகடு*

அம்பேத்கரின் எழுத்துக்கள், கட்டுரைகள், தொகுப்புக்கள் முழுமையாக ஆங்கிலத்தில் தொகுக்கப்பட்டுள்ளது.

- ◆ அம்பேத்கரின் விவாதங்கள், நேர்காணல்
- ◆ கையெழுத்துப் பிரதி
- ◆ அரிய புகைப்படங்கள் - 150
- ◆ அம்பேத்கரின் உரை
  அவரது குரலில் 10 நிமிடம்
- ◆ அம்பேத்கரின் வாழ்க்கைத் தொகுப்பு 10 நிமிட குறும்படமாக...



அம்பேத்கரின் முழுமையான படைப்புக்களை வைத்திருக்க விரும்புவோருக்கு இக்குறுந்தகடு ஒரு முழுமையான ஆவணப் பதிவாகும்.

தொகுப்பு: டாக்டர் ஆனந்த் தெல்தும்ப்டே, மும்பை


நன்கொடை : ரூ.**400/-**

தபால் செலவு: ரூ.**20/-**

கணினி உள்ளவர்கள் மட்டுமே பயன்படுத்த முடியும்.


படிப்பகம்

www.padippakam.com











சதாம் சிலை வீழ்ந்தது... அந்த பீடத்தில் அமெரிக்க ஆதிக்கத்தின் குறியீடான மெக்டொனால்ட்ஸ்




அமெரிக்க நீதி




ஆசிரியரும் வெளியிடுபவரும் : வி.வல்லபேசன், 3, [illegible] 4-வது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர் : எமில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA UNDER No: 42647/87 Regd. No: TN/PMG (CCR)/239/03-05
www.padippakam.com




# பிணந்தின்னிகளின் பானம்... பெப்சி - கோக்

படிப்பகம்